உ

ஓம் சத்துரு சங்கார வடிவேல் துணை.

# சிவஞானப் பாடல்.

இஃது

கழுகுமாமலை க்ஷேத்திரத்தில் கோவில்

கொண்டெ[illegible]ளியிருக்கும்

ஸ்ரீ ஷண்[illegible] பெருமான் பேரில்

ஷை [illegible] தாசன்

உ[illegible]ளியற்றியது.

SIVAGNANA MUNIVAR LIBRARY
சிவஞான முனிவர் நூல் நிலையம்
திருநெல்வேலி
TIRUNELVELI.

MARA[illegible]AL

இதைசில சிவநேசச் செல்வர்கள் வேண்டுகோளின்படி

அவர்களால் உபகரித்த உபகாரப்பொருள்கொண்டு

நடுவக்குறிச்சியிலிருக்கும் சர்க்கார் கர்ணன்

சொக்கலிங்கம்பிள்ளையால்,

பாளையங்கோட்டை:

ஸ்ரீ விஜய லெக்ஷ்மி விலாச அச்சியந்திரசாலையில்,

பதிப்பிக்கப்பெற்றது.

1090-ம் ஞு ஆனந்த வருடம் ஆவணி மீ

1914.

இதன் விலை] [அணா 8.

# உலகம்மையம்மாள் சரிதம்.

---:0:---

நீர்வளம், நிலவளம் பொருந்திய பாண்டியநாட்டில் வேய்வனமென்ற திருநெல்வேலிச் சேத்திரத்துக்கு உத்தர திக்கில் வன்னிகோனேந்தல் என்னும் பதியில் 1031-ம௵ ஆவணிமீ௳த்தில் குப்பையாண்டியா பிள்ளையவர்களுக்குப் புண்ணிய புத்திரியாக ஜெனனமாய் உலகம்மாளென்று பிள்ளைத் திருநாமம்பெற்றுப் பெண்களுக்குரிய பத்துப் பருவமுஞ்செய்து விளையாடி வளர்ந்து வந்தாள். எட்டு வயசான பிராயத்தில் அவளுடைய பிதா வீட்டுக்கு வந்திருந்த கல்லிடைக்குரிச்சி தழச்சேரியடத்திலிருந்து வந்த தம்பிரானவர்கள் இந்தப் புண்ணியவதியைப் பார்த்து இந்தக் குழந்தை ஒரு நல்ல நிலைமைக்குவருமென்று காணப்படுவதால் இவளுக்குப் பஞ்சாக்ஷரத்தைச் சொல்லுங்களென்று சொல்லி விட்டுச் சென்றனர்.

அதை பூர்வபுண்ணியத்துணர்ச்சியினலும் ஞானம் பெறவேண்டிய சாமு சித்தராய்த் திருவவதாரமானவளானதாலும் உபதேசமொழியாய்ச் செவியிலேற்றனள். அவ்விதங் கேட்டவர்கள் கவனியாததைப்பற்றி இந்தம்மாள் மனவருத்தமடைந்து பஞ்சாக்ஷரத்தைக் கேட்டன்னியில் ஆகாரஞ்செய்கிறதில்லை யென்ற சங்கல்பத்தோடு இருந்தனள். இரவு சிவத்தியானம்பண்ணிக் கண்ணை மூடியிருந்தபோது ஸ்ரீ சுப்பிரமணியக் கடவுள் வேலாயுதத்தோடு குழந்தை வடிவமாய்ப் பிரசன்னமாய் ஓம் சிவ சரஹணபவா என்ற மந்திரத்தைச் சொல்லிச் செபி என்று மறைந்தனர். அதுமுதல் அந்த மந்திரத்தைத் தியானம்பண்ணிக்கொண்டு வந்தாள்.

இந்த ஸ்திதியில் 15-பிராயமாய்க் கலியாணப்பருவம் வந்தடைந்தது. ஷண்முகருடைய உபதேசக் கிருமத்தின்பேரில் ஞானம் உதயமாய்ப் பிரபஞ்சப்பற்றை வேண்டாதவளாயிருந்தாலும், ஊழ்வலிபற்றிப் பெற்றோர்கள் வேண்டுகோளின்படி கழுகுமாமலைச் சேத்திரத்தில் நாலுவாசங்கோட்டைக் கர்ணன் ஆதிநாராயணபிள்ளையவர்களுக்கு விவாஹம் புரிந்தனர். அந்த இல்லற வாழ்வில் 12-வருஷம்வரை வாழ்ந்து இந்தம்மாளுக்கு 28-வயசும் பர்த்தாவுக்கு 32-வயசு முள்ளகாலத்தில் பர்த்தா இந்த வுலகத்தை விட்டார்கள். அப்பால் இந்த 12-வருஷத்துக்குள்ளாக ஜெனனமான 3-ஆண் பிள்ளைகளையும், ஒரு பெண்ணையும், வளரசெய்வதின்பொருட்டு 12-வரு வரை கிரஹத்திலிருந்து மேஷரான 2-ஆண பிள்ளைப் பிள்ளைகளுககும், ஒரு பெணணுககும், விவாஹததை நடத்தி

விட்டுப் பிரபஞ்சபற்றையும், பிள்ளைகளையும், தாளாகவினைத்துக் கிரஹத்தைவிட்டு வெளியேறினள். 40-வது வயதில் கங்கா யாத்திரைசென்று பலதலங்களையும் சேவித்து மீண்டனள்.

அப்பால் சிந்துபூந்துரையிலிருக்கும் தருவிதளம் வேதநாயக சுவாமிகளிடத்திலும், தென்காசிதாலூகா ஆயக்குடி பரமசிவசுவாமிகளிடத்திலும் யோகம்ஞானமென்ற இருவழியையும் முறையேபெற்று நிஷ்டைகூடிக்கொண்டு வருங்கால் ஸ்ரீ சுப்பிரமணியப்பெருமான் திருவருளால்அவர்பேரில் கவிகள் சொல்லும்படியாய் வாக்குண்டானதை வைத்து விருத்தம், வெண்பா, கண்ணி முதலிய 12-பிரபந்தங்களைப் பாடியருளினள்.

இதன் பின்னுலேயுள்ள ஷை அம்மாளுடைய ஜீவதிசையுள்ள சரித்திரம் இரண்டாம் பதிப்பில் வெளியிடப்படும்.

இந்தம்மாளைக் குருவாகக்கொண்டிருக்கிற ஆண், பெண் முதலிய பல பக்தஜனங்களுக்கு, இந்தம்மாள் சரித்திரம் தெரியவேண்டியதாவசியமானதாலும், இந்தம்மாள் காலங்கடந்தால், பின்னிடு இந்தச் சரித்திரம் துலங்க மார்க்கமில்லாமற் போகுமானதாலும், இந்தம்மாள் ஜீவதிசையிலேயேஅவளுடைய வாய்மொழியாகக்கேட்டு இதை வெளியிட்டனன்.

அன்பன்,

வி. சொக்கலிங்கம்பிள்ளை.

உ
திருச்சிற்றம்பலம்.
திருநாவுக்கரசு [illegible]
நிலையம்,
கல்லத்திரு[illegible] தெரு,
திருநெல்வேலி.

## கீழக்கல்லூர் முருகதாஸ் சுவாமிகளியற்றிய சாற்றுக்கவி.

விருத்தம்.

கழுகுமா மலையில்வாழுங் கார்த்திகே யன்றன் பேரில்,
பழுதிலா விருத்தம் வெண்பா முதலிய பிரபந்தங்கள்
வழுவற வியற்றினால் வாணியே யுருவாய்வந்த
தொழுதகு உலகம்மாளென் றனைவர்கள் துதிக்கமாதோ.

—o—

## முன்னீர்ப்பள்ளம் வி. லெக்ஷ்மிநாராயணபிள்ளை அவர்களாலியற்றிய சாற்றுக்கவிகள்.

சாமவேதார்த்த சதைத் தருந்திரு உலகம்மை
சாற்றிய கவிகளெல்லாம்
தாமாயறிந்திற சாதித்தபேர்களுந்
தன்னையே தானறிகுவார்
பாமரர்களானாலும் பகுத்தறிந்தே
பரவெளிதனைப் பற்றச்செய்தே
நேமமதிலேதினம் நின்றிடச்செய்திடும்
நிர்மலக் கவிகள் தானே.


அருளுருவாயுதித் தன்பாகவேசொனு மமுதமாங் கவிகள் தன்னை, வருந்தியுமேதினம் மகத்தானசொரூபத்தை வகுத்துப் பிரித்துணர்ந்தே, கருமமதிலேதினம் கலங்கிப்பொருந்தாருங் கரதலாமலகம்போல, திருவருள்நாதமே திடமதாய்க்காட்டியே திரமாய்க்கலக்குநதானே.

பதியொடு நிதியுஞ்சேயும் பாக்யமும் படரும்வேத
விதியொழு கன்பர்யார்க்கும் வேதியர்க் கறங்களெல்லாம்
நதியொடு மதியுஞ்சூடும் நாதன்பொன் னடியேநாடும்
கதிபெறு முலகவன்னை கவியிலோ ரடிகற்றோர்க்கே.

உ

ஓம்:

சத்குரு சங்கர வடிவேல் துணை.



## கணபதி தோத்திரம்.

வல்லபை கணேசா அஞ்சலி புரிந்தேன்
வாமன ரூபா அஞ்சலி புரிந்தேன்
வித்தக வினாயகா அஞ்சலி புரிந்தேன்
வேழ முகத்தோய் அஞ்சலி புரிந்தேன்
முன்னுன் மாபா அஞ்சலி புரிந்தேன்
மூலப் பொருளே அஞ்சலி புரிந்தேன்
ஐந்து கரத்தோய் அஞ்சலி புரிந்தேன்
அரனருள் பாலா அஞ்சலி புரிந்தேன்

## குரு ஸ்தோத்திரம்.

பரசிவப் பொருளே பரமசிவனென யிந்தப்பாரிற்
குருவடி வெடுத்துவந்து கொடியவூள் வினையினோடு
வருவினை தவிர்த்து மோக்ஷவழியையுந் தெளிவாக்காட்டி
கருவழி வந்திடாமற் காத்தவுன் கருணைபோற்றி. (க)

உண்மைப் பொருளருளி யுட்புகுந்தாண்ட வையன்
வண்மைத் திருவடியைத் வாழ்த்தித் துதிசெய்வேன்
திண்மைப் பகையறுத்துத் தீவினையை மாற்றிய உன்
தண்மைத் திருவருளிற் சார்ந்தேன் சிவகுருவே (௨)

திகைப்பறுத் தெனையாண்டென்னைத் தெரிந்திடும் படிக்குரைத்
பகைப்பிணி தவிர்த்தேயுந்தன் பதமலர்க கடிமையாக்குந் [துப்
தகைப்படும் பொருளேயென்னைத் தாங்கியே யருளுந்தாயே
வகைப்படுங் குகையினூடே வசியென்னுங குருவேபோற்றி. (௩)

சிறியனென் றன்னைக்காத்த சீரருட் குருவே யுந்தன்
மறுவிலாத் திருப்பதத்தை மலர்கொ டர்ச்சித்தேனன்பா
னிறைபரம் பொருளேநல்ல நிலையிதுவென்று காட்டி
யிறையள வேனுநீங்கா தென்னுளத திருகரும்வாழ்வே. (௪)

வாழ்வுதந் தென்னையாண்ட வள்ளலென் குருவேபோற்றி
யாழ்நர காளாவண்ணம் அடிசென்னி வைத்தாய்போற்றி
சூழ்மகாமாயைநீங்கத் துடைத்தநற் சொருபாபோற்றி
யூழ்வினை யொழிக்குமுந்த னுபயதாமரையே போற்றி. (௫)

## நூல்.

சத்தியுஞ் சிவமுமாடுந் தலத்தினைக் குறியார்கண்டு
நித்திய மிடைவிடாம னிலைத்துமே யிருப்பாயானாற்
சத்திய மாகத்தானே சராசர மதிலேதோன்றுஞ்
சத்திய மாகத்தானே தானவ னுகலாமே (௧)

எழுபிறப்புந் தோயா திருவினையை யீடழித்து
வழுவா தெனக்கு மனோலயமே சேருவண்ணா
முழுதுந் திருவடிக்கீழ் சேர்த்தாளென் மூடனெஞ்சம்
நழுவி யெழாமலிந்த நாயேனை யாட்கொள்ளே (௨)

சொற்பனத்துங் காணேனுன் சுந்தரவான் சோதிதனை
யுற்பனமாய்ப் பார்க்கிலங்கே யுள்ளுணர்வாய் நின்றுயே

நிற்ப ததனை நினையாமற் றட்டழிந்தேன்
கற்பிதமாம் பாழ்மனத்தைக் கட்டறுத்துக் கண்டேனோ (௩)

குழந்தையினு மிகச்சிறியேன் கூவியயருகின்றே
னழுகுரலைக் கேட்டிலையோ அம்பிகையோர் கூறுடையாய்
விழுங்கு மனத்தாலே வெறுவி மயங்குகின்றேன்
தொழுந்தகைய பெருங்கருணைத் தோன்றலே தோன்றிலையே (௪)

மாற்றுரையாப் பொன்னே மணிமன்றி லாடுகின்றோய்
சேற்றில் விழுந்து திகைக்கு மடியேற்குத்
தோற்றியோர் சொற்பகர்ந்தாற் றொண்டாற்றி யுய்வேனே
வேற்றுமொழி சொல்லி வெறுத்துவிட்டா லெனசெய்வேன் (௫)

பாழே யவதிப் படமுடியா தென்றுரையே
பாழுடம்பு நீங்குவரை பாவிமனம் பற்றும
வீழு மவுன நிலைகாணு நின்றயர்ந்தேன்
சூழும் பிறவி தொலைத்து முகம் பார்த்தருளே (௬)

ஐயனேயுனது திருவடிகளுக்கு அன்புகாளியற்றிலே னத னாற், பொய்யனென்றென்னைப் புறம்விடி லையோ புகலிடம் பிறிது வேறறியேன், மெய்யனேயென்னையாள் விமலனேயுனை விடுவனோ வுயிரளவெனினும், வெய்யனை வெறுத்தல் திருவருட்கழகோ வே தன்மா லறியோணா முதலே. (௭)

கரும்பினுமினிக்கு மினியகற்கண்டே கண்கண்மூன்றுடைய வென்கண்ணே, விருமபிநானுகா தூர்தொறுந்திரிந்தே னுண் டியே வேண்டுமெட் டுண்டேன், திருமபியேகொட்டி லடைநதி டாயபட்டி மாடெனதெருத்தொறுவ குற்றம், பொருந்திய பொதியைச சுமந்தனனுநதன் பொன்னடிக் காவதென்னாளோ.

வெப்பினுங்கசக்கு மனத்தினையுடையேன் வேட்கையுங்கோ பமு முடையே, னையபுகழாக்கம் பெறவிதுதருண மன்பிலே னெனினு மனைக்காள், காயபமாதொழி பங்கனேயுனைப்போ

னுற்றவர்காண்கிலேனையா, நம்பணியடியார சிந்தனைநிரம்பு நாத
னேதெள்ளிய வமுதே. (௯)

என்னையா ளிறைவா வென்னையாள் குருவே
யென்னையா ளறிவே யென்னையா ளுணர்வே
யென்னையா ளுருவா வென்னையா டிருவா
வென்னையா ளீசா வென்னையாண் டருளே (௰)

மருவான மேடை தனலிற்கிடந்து இடரானகத்தைப பொடியா
யுருவான காலவினை தீரவேணு முமைபாகி தங்குசிவமே
கருவான காயக்கடலிற்புகுந்து கலங்கின்றநாயி னுயிரைத்
திருவான மேனிச்சிவமே கரைசேர் திரிசூல வேலின்வடிவே (௰௧)

உற்றவடியா ரொருபிடிப்பை நம்பிநின்று
னுற்றவர்க்கு முற்றவர்போ லுண்மை நிறைந்திலேயேன்
மற்றவர்க ளுன்கயிலை வந்துதினங் காண்பதற்கு
முற்றுமோ யாவருக்கு முத்தே முழுமுதலே (௰௨)

சங்கரனே யுந்த னன்பு சாமளவு நான்மறவே
னைங்கரனைச் செவ்வேளை யீன்றருளு மையாவே
வெங்கோப யேமனென்மேல் வீசுபாசம்பொடியத்
தங்காமல் வந்தருள்வாய் தாணுவாய் நின்றோனே (௰௩)

புலனுங்குலைந்து பொறியுங்கலங்கிப் பொய்யானபொய்யை விட, வலமொன்றுபாச மொடுதண்டுதாங்கி வலிதானயேமன் வருநாள், சுலவுங்கை வேல்கொண் டவன்வீசுபாசந் துகளாகவே முன்வருவா, யலமொன்றுதேவர் துயர்போகமேவு மரனாரளித்த குகனே. (௰௪)

நானென்னசெய்வே னெல்லாம்போச்சே நமன்வர லாச்சுதே யையோ, வூனெலாமுருககி யுன்பதமணுகா தொதியென விருக் கின்றேனே, தேனெனக்கலந்து தீர்க்கமெய்யடியார் தெள்ளமு துண்கிறார் நானுங் கொடுத்தேன், கோன்முனங்கொடிய கொலை செய்தவுயிர்கள் கொலைபடுந் தன்மைபோற்கொதித்தேன். (௰௫)

திருமால்முன்றேடி யறியாதபாதஞ் சிறியேனடைதலெளி
தோ, வொருபோதுவந்து உடலேபுகுந்து உளத்தைத்திருத்து
மொருவா, கருவேரறுத்துக் கதியீவதென்று கடையேனையாண்ட
திருவா, திருநாமமன்றி மறுநாமமோதாச் செயலைக்கொடுத்து
அருளே (௰௬)

நஞ்சினுங்கொடியேன் நாயினுங்கடையேனலமொன்றுமறிகி
லாதபாவி, பஞ்சினமெல்லடியாள் பாகனை நாணப் பதமொன்
றறிகிலாதபாவி, வஞ்சமேநெஞ்சில் வளர்த்தனைமறந்து வண்மை
யொன்றறிகிலாப்பாவி, தஞ்சமென்றடியார் தன்னடிவிடாதே
சாய்கைபோற்றொடரிலாதபாவி (௰௭)

என்றுயிரை யென்றனை யென்னுயிர்க்குயிரான துணைவை
யென்றும், என்குருவை யென்னறிவை யுள்ளொருகண்மணியை
வெளிவந்த பொருளை, எனதுணர்வை யென்னன்பை யெனதுபகலைத
யென்னிதயத்தூற மமுதை, என்னுள்ளே யெக்காலும் போற்
றுமலிறந்திறந்து பிறந்தேன் வீணே (௰௮)

வச்சிரமலையை மாணிக்ககொழுந்தை மாவயிரத்தின் வைப்
பை, யுச்சிதமான மரகதபவளப் பொன்னை யென் னுள்ளத்தில்
வசிக்கு, மெச்சியதான கோமளக்கொழுந்தை யேத்திடாதலைந்
தனைவீணே, யச்சமொன்றின்றிப் பழிகொலைபுரிந்தா யடாத்திட
யெமன்வருவானே (௰௯)

சாக்ஷியும் பொருளுமாகிச் சொச்சமாய்த் தனியாயென்றன்
ணீக்ஷியாய நிலையாயெல்லாம நித்தியப்பொருளா யென்றுங்
காக்ஷியாய் நின்றவொன்றைக் கருதவொரு வெளியுட்கொண்டே
யாக்ஷியா யுண்மையின்ப வறிவுருவாகி வாழ்வாய் (௨௰)

மெய்யறிவுடையோருள்ளம் விளங்கியபொருளை யெல்லாந்,
தையலோர்பாகங்கொண்ட தாணுவைத் தயவினோடு, மையலைத்
தவிர்த்து நீதான் மனத்துள்ளே நினைக்கமாட்டாய், பொய்யெலா
மொன்றாய்ச்சேர்ந்த புலானுடனிலையாய்க்கண்டாய (௨௧)

ஐயகோ நானென்செய்கே னருந்துயர் படவேமாட்டேன்
வையமீ திருந்துநாளு மலரடியேத்தா நின்றே
னையவே யிடரிலென்னை நற்றவா விடுதனன்றோ
மெய்யநீ வாவெனவென்னை வீடுறச் செய்தல்வேண்டும் (உஉ)

கருக்குழியிற் பிண்டமதைக் காக்ஷியுடனே வளர்த்துத்
தரைக்குள் வரச்செய்த தற்பரனே யேழையின்மே
லிரக்கமின்றி யெந்தாயென்மேற் கொடுமைசெய்தாற்
றரிக்குந் தரமோநான் றாணுவே கற்பகமே (உ௩)

உள்ளங் கொதிக்குதையோ வோராய்நா னென்செய்வே
னுள்ளக் கொதிப்பகல உபாயமொன்று சொல்லாயோ
கள்ளமனப் பாவி கலக்கந் தவிர்ப்பேனோ
தெள்ளியவான் புத்தமுதனை சேரவள்ளி யுண்பேனோ. (உ௪)

அண்ணாவரசே யுனைக்காணா தாற்றமுடியாத் துயருறுதே
யெண்ணா மனத்தா னென்பாவி யேங்கிக்கதறித் துடிக்கின்றே
னண்ணா மலையின் மாகுகனே யருணைகிரியார்க் கருள்புரியு
முண்ணா முலையார்க்கோர்மகவே யுன்னுவனாணமுடிப்பாயே (உ௫)

முன்செய்த பாவ முறைமையால் வந்தவினை
யென்செய்தாற் போமோ யெந்தா யறியேனா
னுன்செய்கை நானறியே னுணர்வுக் குணர்வானாய்
பின்செய்கை யுன்னை மறந்து பிரிந்தேனே. (உ௬)

காலனையுதைத்தாய் காமனையெரித்தாய் காய்ந்தனைபுரத்தையு
நகைத்தே, மாலயன்காணா வண்ணமாய்நிமிர்ந்தாய் வதிந்தனை
தவத்தவருளத்தி, லாலமார்மிடற்றா யருந்துயரனைத்தையு மகற்
றியே யாள்வதுன் கடனே, சீலமாமூவர் பாவினாற்றுதித்தார் சிறி
யனேன் செய்வகை யருளே. (உ௭)

ஐயாவுன்னோடிருப்பதற்கே யாசைவெள்ளம் பொங்குதையோ,
மெய்யாய்த் தவஞ்செய்யாக்கொடிய வினையேன் சிந்தை யெரியு

தையோ, பொய்யாமுலக மதிலவஸ்தை பொருந்தாதென்னைக் காத்திடுவாய், செய்யாண்முருகா வாறுமுகப்பொருளே செல்வப் பெருங்கடலே. (உஅ)

நற்றாயி னற்றாயே நற்றணிகை வாழ்முருகா
செத்தே பிறந்துழன்று தீநரகில் வீழ்வேனைப்
பொற்றாள் கொடுத்தருள்வாய் பொய்யேன் பிழைபொறுத்தே
யெற்றாலுங் காண்டற் கரியோ யிறைமகனே. (உகூ)

எனக்கன் புடையதாய ரெண்கோடி யாயிடினும்
எனக்கின் புடையா ராவர்களோ வென்னிறையே
எனக்கன் புடையதா யெழின்மன்றி லாடுகின்றோ
யெனக்கின் புறச்செய்வா யென்னா ருயிர்க்குயிரே. (௩0)

குரங்கினன் பொல்லாக் குணத்தினன்கொடிய கோபமுங்குற்றமு முடையேன், றிரிந்திடு நாய்க்குங் கடைப்படும் பேயெனத் தீமையேனன்னெறி யற்றேன், னருங்கிரி வாழும் புலியினுங் கொடியேனரவினும படிறன்மாபாவி, புரிந்திடுந்தீயே னுன்னைவிட்டகலேன் பொன்னடிக் கபயமேநானே. (௩க)

நற்றவாவுன்னை நலமறிந்தேத்தே னனிதற் கென்செய்வேனையோ, வுற்றவானேயா வுறவினர்தமையே யுண்டென நம்பினேன்பாவி, கற்றவர்தம்மைக் கனவிலுமினையேன் கண்ணுதற் பாதமு நண்ணேன், மற்றவரிருந்தென் மலரடிதன்னின் மனலய மாகுமோ குகனே. (௩உ)

ஊன்பொதிந்த தேகமுடையும் புழுக்கூட்டை
யேன் சுமந்தே னன்பாவி யெத்தனையோ காலமதாய்த்
தேன்கலந்த நின்கருணைத் தெள்ளமிர்த முண்ணும
னன்பிறந்த தேனே நடஞ்செய்யு மறையோனே. (௩௩)

முன்னறிவாய் பின்னறிவாய் முடிவின் செயலறிவா
யென்னறிவே னன்பாவி யெந்தா யுனைக்கலக்கப்

பின்னெறியைக் காட்டிப் பேதையெனை யாட்கொண்டு
உள்ளினைவுக் குளளே யொடுககுவாய் பூரணமே. (௩௪)

தாலமோ ருரலதாகச் சார்சாங் தவசமாகக்
காலமோ ருலககையாகக் கடுவினை பெட்டியாக
மாலுற மடிபாதென்னை வலியவந்தடிமை கொள்வாய்
ஆலுமேதன் ருசிககுடன்ப ரகத்திலே நிறைநத சோதி (௩௫)

சக்ரமபோற் சுற்றுகின்றாய் தாவி யயருகின்றாய்
புகருமுன் றனமையெவர் புகலவார் முடியாதே
நக்கன்முன் பன்றிகட்கு நற்றாய்போற் பால்கொடுத்தான்
சொக்கியவன் றனையுறி லுன்போற் றுணையாரே. (௩௬)

கன்மனப்பாவி கடையனேனின்னுங் கற்கிலே னறிகிலேனுன்னை, யென்மனக்கொடுமை யுரைக்கொணுப பாவமியம்பிடி லுலகெலா நடுஙகும, நன்மனதறியே னெல்லாங்கழித்தே னைவம் புரிகின்ற பாவி, வன்மனதாலே மயஙகிநின்றயாநதேன் வநதெனை யாழ்வதுன் பரமே. (௩௭)

தீபாவி தீபாவி தீபாவி தீபாவி சீலமில்லாத பாவி, மாபாவி மாபாவி மாபாவி மாபாவி மையறௌியாதபாவி, ஆபாவி ஆபாவி ஆபாவி ஆபாவி அருளையறியாத பாவி, கோபாவி கோபாவி கோபாவி கோபாவி கோடிகொலை செய்தபாவி (௩௮)

பஞ்சமா பாதக மஞ்சாமற் செய்நிறை பழிநிலங்கொண்ட பாவி, நஞசினுங கொடிதான நான்பாவி தீபாவி நாயினு மிழிந்த பாவி, கொஞசமு மெண்ணாத கொடுபாவி படுபாவி கொடுமைகுடி கொண்ட பாவி, யஞ்சாத மாபாவி யரும்பாவி யரும்பாவி யத்தனையு மறந்த பாவி (௩௯)

பொய்யான உலகத்தை மெய்யாக வெண்ணியே பொழுது போக்குகின்ற பாவி, மெய்யருளையறியாத பொய்யருட் பொய்யு னெமதினியலைந்த பாவி, வையமிசை வந்துநான் மாதவ மறந்

துழவு மாடெனவலைந்தபாவி, கையினாலலர்பறித்துன்பதம் பணி யாது காடுமே டலைந்தபாவி (சமு)

சோறுசோறெனத்துடி துடித்தெந்தவேளையுந் தொல்புவி யலைந்தபாவி, யாறுதவேதனை யாழியுட்சிக்கியே யருந்தவமறந்த பாவி, யேறுபுகழ்கல்வியைத் தான்கற்றுக் கொள்ளாமலெங்குந் திரிந்த பாவி, மாறுதகாதலா லிறையடியை வாழ்த்தாது வாழ் நாட்கழித்த பாவி (சக)

நீயேதானாகியே நிற்பதை மறந்துநா னீளுடலை யென்னதெ ன்றே, னீயாகவெங்கு நிரம்பியதையுணராத நிச்சய மறந்தபாவி, சாயாதபேரின்ப மானதைமறந்துமெய் தடிகக்லூ ணிட்டபாவி, மாயாமனப்பாவி போம்வழியெல்லாஞ்சென்று புததியை மயக்கு பாவி (சஉ)

மக்கள்பெண்டீர்தமர் மயக்கம்பிடித்துநான் மாநரகில் வீழ் ந்தபாவி, ஒக்கவொருமித்துநா னுள்ளுருகி மனம்வாடி யுண்மை யறியாத பாவி, செககரணிமேனியன் றிருவடிமறந்துநான் செ ன்னாட் கழித்தபாவி, தக்கநெறியறியாக் குரங்குபோலேமனந் தானாகின்றபாவி (சங)

அரிபிரமர் தேடியுமறியாத பாதமுடி யறிவிலறியாத பாவி, தெரிகிலாபப்பாவியழ கறிகிலாப்பாவிநான் செத்திறந்துழன்ற பா வி, மரியாதைதெரியாதுன் மத்தர்போனின்றுமேல் வழிமறந் திட்டபாவி, உருவழித்திடநம்மன் சாடுமுன்னுனைக்காண வுற்றறி விலாத பாவி (சச)

கருவிகரணாதிகள் கலக்கமொழித்துனைவாசி கால்கொண் டறிந்திடாமற், றெருவானமுச்சந்தித தெருவினிலிருந்துநான் றியக்கமொழியாதபாவி, மறுவிலாப்பெருவெளியை மனவெளி யிலடையாமன் மாண்டிறந்துழன்றபாவி, கருவேரறுத்திடுங் கண க்கையறியாமனான் கலக்கம்பிடித்தபாவி (சரு)

தவித்தபடி நின்று தன்மயமுறுமன் மனந் தானுமின்ற பாவி, மதித்தபடி மானத மனோலயமிலாமலே மயக்கமேலிட்ட பாவி, விதித்தவிதிதன்னையும் வேறெழுத வல்லனோர் வேலவனென்னுதபாவி, கதித்தபடியேமனோர் கடாவில் வருவானெனக் கலங்கிடா திருந்த பாவி (௪௬)

ஈங்காரெனக்கெதிரி யென்னப்ரலாபித் தெரிபோற் கொழுத்தபாவி, தேங்காத அருள்வெள்ளந் தேக்கியினிதுண்ணுமற் றெருத்தோ றலைந்தபாவி, வாங்காரென்றீவினை வாங்காரென் றெண்ணியே வாழ்நாட் கழித்த பாவி, பாங்காகவேகாக்கப் பரமன் வருவாரென்று பகதியில்லாத பாவி (௪௭)

மயலற் றவர்க்கருளு மாசுபடா வுத்தமனைச்
செயலற்று நின்றுதவுந் தெள்ளமுதந் தேக்காமல்
மயலுற்று நின்றமேல் வழிமறப் பாவினேன்
கயலுற்ற கண்ணியங் கனைநினை யாமலே (௪௮)

பனையொனுயிர்க்கேதன் பரத்தினைநினையேன் பான்மையொன் றறிகிலாப்பாவி, தினையளவேனுந் தேர்ந்திடநினையேன் செய்வகை யுணர்கிலாப்பாவி, மனையுள பொருளு மக்களு நம்மதென்னவே மதித்திட்ட பாவி, வினையெலாம் வேதைசெயுமெனவே விவேகத்தா லறிந்திடாப் பாவி (௪௯)

மலத்தினையருந்திடு நாயினைப்போல வயிற்றினை வளர்த்திட்ட பாவி, குலத்தொடு கொல்வன் கூற்றென நினையாக் கோள்புரி பாவிநான் பொன்னம், பலத்திலேயாடும் பரமனை நினையா பாழ்நரகாழ்ந்திடு பாவி, நலத்திலேயொன்று மறிந்திடாப்பாவி நானெனவகந்தைகொள் பாவி (௫௰)

எமன்வரிலெதிரே யொருவருமில்லா ரென்னையா னறிகிலாப்பாவி, நமன்றனைக்கொல்லு நாதரென்றெண்ணி நன்பதியின்றிலாப்பாவி, யுமைமகன்றன்னை மறந்துகாடெல்லாமோடியே

யுலைந் தழல்பாவி, சுமையெனசொல்வர் சுமந்திடு முடலைச்சொந் தமா யெண்ணிடும்பாவி (௫௧)

பிறந்தனன்புவிதனக் கொருசுமையாகப் பின்ஞகனடிதொழாப்பாவி, மறந்தனனருளின் வண்மையையுணரா மாடுபோலலைந்தனன்பாவி, சிறந்திடுமுலகிற் றீமைகள்செய்யத்தினந்தினம்நடக்கின்றபாவி, துறந்தனனன்புந் தவசொடுநீதி தூய்மெய்யறிவிலாப்பாவி (௫௨)

எத்தனைவிதந்தா னெடுத்துரைத்தாலுமேதெனச் செவிகொடாப்பாவி, செத்துலகதனிற் பலவிதம்பிறந்து தீவினைபுரிந்திட்டபாவி, கத்தனைநாடி யவன்கழல் காணகண்ணிலா தலைந்திடுபாவி, யித்தனைமறந்து ஆடியகறங்கா யாசையிலலைகின்ற பாவி (௫௩)

பகலிலோ மத்தியானமோ இரவோ பாவியே னுயிர்விடுங்காலஞ்ரு சகலமே வந்து கூடினுநமனைத் தடுப்பவர் தரையினிலில்லை, குகமுரு கேசா ஷண்முக நாதா கூறுவே னின்றிருநாம, மகலநீக் காம லடியிணை சேர்த்தா ளாறுமா முகப் பரம்பொருளே (௫௪)

எண்ணிறந்த ஜென்மமெடுத்து நெஞ்சே யென்கண்டாய்
கண்ணொளிபோற் கலந்த கணக்கறிந்து கொள்ளாமல்
மண்ணிடை வந்துவந்து மாண்டுநர காழ்ந்தாயே
நண்ணுமவ னண்ணியரு ளைனடி புகுவாயே (௫௫)

என்செய லுன்செயலே யேகமாய் நின்றிடுங்கால்
பின்போர் வசையுளதோ பிழையெல்லா முன்றனதே.
அன்பான வன்னைபிதா வாவதெல்லா நீயாமே
யின்பதுன்ப மொன்றுளதோ வில்லைக் குருபரனே (௫௬)

ஓகோ வுன்னைப் பிரிந்தாக்கா லுள்ளமடங்கி யுயிர்விடுவேன் [ துக்
பாகோ வனல்சேர் மெழுகோபோ லுள்ள முருகிப்பதைபதைத்
கோகோ வென்றுன் னடியரெலாங் கொடிய பிறவியறுக்கின்றார்
ஆகோ முருகன் கழல்காணதையோ கெட்டேன் கெட்டேனே.

என்னைவேறாய் வெறுத்திடிலோ வென்றுமுனக்குப் பழிப் பாமே, யுன்னையாவர் தடைசெய்வா ருரியகருணை கழகாமோ, தன்னையடுத்தோர் குறைமுடிக்குந் தன்மையுந்தன் செயலதன்றோ, பின்னையெனக்கோ ரிச்சையிலைப் பெருமானருளே வேண்டுவனே (ருஅ)

என்னைபிறந்தேன் புவிச்சுமையா யிருகான் மாடுபோல்வ ளர்ந்தே, னுன்னையடையா தொருபாவி யூரிற்றிரியு நாயானேன், கன்னேர்நெஞ்ச னானுங் கடியவினையைச் செய்தாலும், பொன் னேமுத்தே தணிகைவளர் பொருப்பின் மருந்தே யெனையாளே.

நினைந்துநினைந்து நின்னருளை நெஞ்சந்துடித்துப் பதறுகின் றார், புனைந்துபுனைந்து நின்னருளைப் பொய்யைத்தவிர்த்துப் பொன்றுகின்றார், நனைந்துநனைந்து கண்ணீரா னடுங்கினடுங்கி நண்படைந்தார், கனிந்துன்னருளைப் பெறுதற்கோர் வழிகாண் பிப்பாய் கண்ணுதலே (சூ0)

காதற்றுப் போனமுறி கட்டிவைத்துக் கழிந்ததுபோற்
றீதற்ற காயமிதைச் சுமந்துதினங் கெட்டலைந்தேன்
மாதுற்ற பங்கனருள் வாரியுண்ணு வகையறியே
னேதுக்குநா னிங்கிருந்தேன் பலனற்றிறையவனே (சூக)

பிள்ளை பிழைசெய்தாற் பெற்றாள் பொறுப்பதுபோற்
கொள்ளை கொள்ளை யாய்ப்பாவங் கொடியேன் புரிந்தாலுந்
தள்ளையெனப்பொறுப்பாய் சத்திவடிவேன்முருகா
எள்ளிவிடுதலியல்போனின் பேரருட்கே (சூஉ)

மாகாதல்கொண்டு மயங்குமொரு சேய்க்குத்
தாய்காதல்கொண்டு தவிர்ப்பா ளமுதளிப்பாள்
ஆகாதபிள்ளை நானுனு மன்புவைத்து
சாகாத மூத்தரைப்போற் றானிருக்க வைப்பாயே (சூங)

கூப்பிட்டாற் கேட்டுவரக் கோட்டைவெகு தூரமதோ
ஆப்பிட் டடைத்துயா ரந்தரங்கச் செச்சைதனை

பாப்பிட்டுத் தின்றிடுவோன் மைந்தா வடிவேலா
காபபிட் டெனையெடுத்துக் கனகசண்பக்குட் சேரே (௬௪)

வேளை யெரித்தோன் புதல்வா வேலேந்துங் கையுடையாய்
காளையேறுங் கடவுள் கனிந்தெடுத்த நல்லமுதே
ஊழை யகற்றி யுயர்நிலையிற் கால்வீசிப்
பாழ்வினையை நீக்கிப் பதியிலுறச் செய்வாயே (௬௫)

பேயிற் கடைச் செனமம் பிறந்தேன் பலகோடி
தாயிற் பெருந்தயவாய் ஷண்முகனே காத்தருள்வாய்
நாயிற் கடைபபட்ட நாய்க்குன் கழல் கொடுத்தாள்
பாயிற் கிடந்து பதைத்துழலச் செய்யாதே (௬௬)

நச்சமா மரம்போ னாயினேன் வளர்ந்து நாளெலாங் கழித் தனனவமே, பிச்சையே புரிந்தே னிடரெலா விழைந்தே னெட் டிபோலிருக்கின்றே னெந்தாய், செச்சையிலாடுந் திருவடி கண்டு சென்றுநின் றடைந்திடாப் பாவி, பச்சம்வைத் தென்னைப் பர வெளி சேர்த்தாள் பாவகி யடைக்கல முனக்கே (௬௭)

அன்னையரை யார்தடுப்பா ரன்பான தன் பிள்ளைதனைப
பினனையவள் கருத்திற் பிழைமூண்டாற் பேணுதல்யார்
அன்னையெனக் கபபனுநீ யாண்டருளுந் தெய்வநீ
யுன்னைத் துணைபிடித்தே னொருதுணையிங் கேதனக்கே (௬௮)

ஆறும்வகை சொல்லி யாதரிப்பார் நான்காணேன்
வேறுவகை யறியேன் வெற்றிவேல் கொண்டவனே
சோறுநா னுண்டுலகிற் சோம்பித் திரிவதுவோ
பேறு யெனக்களித்தாய் பெருமான் மருகோனே (௬௯)

வேறு கதிகாணேன் வேல்பிடித்த ஐயாவே
பாரி லொருவரிலைப் பன்மை யறிவதற்கே
யூரி லறிவர்களோ வுள்ளிருக்கும் நிக்ஷயத்தை
நாறு முடலெடுத்தே னற்றவமு மற்றேனே

நாராய்ப் பிறந்திறந்து நானரகில் வீழ்வேனோ
பரமோ டென்னைச்சேர்க்கா விடிலோ பழிவருமே
சுரர்மா தவமுனிவர் தொண்டுசெயும் வைவேலா
தரவே வெகுமலையோ தந்தாற் றடைவருமோ (எக)

உற்றார் பெற்றா ருறவினர் தம்மை யுண்டென நம்பாதே
செததால் வருவார் வீதியின்மட்டே செல்லா ரப்பாலே
மற்றார் நேயமுண்டுகொ லன்றோ ருறவை மறப்பாயே
பற்றா தொன்றிற் பற்றது வைத்துப் பரகதி யடைவாயே (எஉ)

மாய வுலகினர் வார்த்தைமெய் யென்று மயங்கித் தவியாதே
காயு மெமனுனைக் கட்டும் பொழுதினிற் கண்டு தடுப்பர்களோ
பாய்புலி முனமே நிற்பினு மாயைப் பிசாசெதிற் நில்லாதே
ஆயன் மருக னறுமுகன் பாத மண்டிப் பிழை நீயே (எந)

இருவினையாலே வருமுடலேகுமு னேற்றிடல் வேண்டுமுனே
வருவினை தன்னை யறுத்தா ளிப்போ வந்துன் னடிபுகுவேன்
கருவழித்தெனைக் கழல்புகச் செய்வாய் கடனிது கண்டாயே
பருவதமபோலே கூற்றுவன் வந்து பார்க்கிற் பதைப்பேனே (எச)

ஏறிவர மயிலிலையோ விருபுறத்தும் பெண்ணிலையோ
கூறிவர நாவிலையோ கோள்தவிர்க்க மனமிலையோ
சாரிவரப் புள்ளிலையோ தனிவரத்தான் றாளிலையோ
வாரிவர அருளிலையோ வாங்கியுண்ண நாளிலையோ (எரு)

பார்ப்பதற்குக் கண்ணிலையோ பக்தரொடு சேர்த்தெனைக்
காப்பதற்கு மனமிலையோ கழல்பணிய நாளிலையோ
தீர்ப்பதுஉன் கடனிலையோ தீனரைமுன் காத்திலையோ
சேர்த்துப் பிடித்திலையே தீமையெல்லாந் தீர்த்தெனக்கே (எசு)

சேவல் மயிலிலையோ தேடிவந் தாளலையோ
ஏவ லுனக்கிலையோ என்மேற் றயவிலையோ
தூவல் மயிலிலையோ துடிவேல் கரத்திலையோ
மாவாடுஞ் சூரனைமுன் மாய்த்தவடி வேலவனே (எஎ)

பன்னிரண்டு கண்ணிலையோ பக்தர்களைக் காத்திலையோ
என்னிரண்டு கண்மணியே யென்னாவி நீயலையோ
உன்னிருபாற் பெண்ணிலையோ உத்தரியத் தோளிலையோ
தன்னிருகால் தானிலையோ தாங்க மயிலிலையோ (எஅ)

உன்னெஞ் சுருகலையோ யுவக்க வருளிலையோ
நன்னெஞ் சுனக்கிலையோ நான்சார் வழியிலையோ
பின்னமில் லாமலெனைப் பேணத் தயவிலையோ
கன்மனதைப் போக்கிலையே கஷ்டமெலாந் தீர்க்கிலையே (எகூ)

மெய்யை மறைத்து வெறும்பொய்யை விளங்கவைத்தாய்
ஐயா அறக்கொடுமை யாருமனி யாயமென்பார்
மெய்யாநீ செய்வதிதோ விரும்பு மடியேற்கு
உய்யும்வகை செய்வதுவு முண்டோ பரம்பொருளே (அய)

உன்பிரிவை நானினைக்கி லுள்ளங் கொதிக்குதையோ
என்வருததம் நீயறியா திருந்தா லெவரறிவார்
சன்மனத்துப் பாவியிப்போ கழறுமொழி யனைத்தும்
வன்செவியோ நின்செவியில் வாங்கா திருந்தனையே (அக)

எத்தனையோ காலமதா யெளியேன் படுந்துயர
மத்தனையு நீயறிந்து மயலவர்போ லின்றுவிட்டாய்
கத்தனையு நின்னருளுக் கியல்போ யிதுதகுமோ
அத்தனை வுன்னடியா ரடையும் பலனிதுவோ (அஉ)

நம்பிநின்ற நாயடியே னுடும் பொருளளித்தாள்
வெம்புமுகம் பார்த்திலையோ விவேகமுறச் செய்திலையே
வம்புமனப் பாவியவன் வருத்தம் பொறுக் கரிதே
தெம்பிலிருந்தானீ சிறியேன் பிழைப்ப துண்டோ (அங)

என்னை மயங்கவிட லெம்பெருமான் சம்மதமோ
உன்னைத் துணையென்றே ஓதியேன் படுந்துயர ந

தன்னை யறிந்திருந்து தாங்கா திருந்தாயே
அன்னை யெனக்கப்பனுநீ யாருயிருக்கோ ருயிரே (௮௪)

கொல்லுங் கொலைஞர்முன்னே கொடுத்தவுயிர் போற்கொதித்தே
னல்லும் பகலு மறக்கொதித்தேன் பார்த்திருந்தாய்
நல்குந் திருக்கருணை நாதா யிரங்கிலையே
கல்லு முருகிடுமே கடுவினையேன் சொற்கேட்டே (௮௫)

பாவி விதிப்பயனோ பார்த்துமிரங் காதிருந்தாய்
ஆவி தரித்துலகி லருவினையை யெண்ணாமற்
கூவித் திரிந்தலைந்தேன் கொடுமையெவர்க் குரைப்பேன்
சேவித் துனதடியைச் சேரா தலைந்தேனே (௮௬)

எனக்கினியா னீயானா லென்மேல் வெறுப்பாமோ
தனக்குவமை யில்லாத தாணுவே நியாயமிதோ
உனக்குங் கொடுமையுண்டோ வுலகவர்போற் பேதமுண்டோ
வனத்திலுறு கிள்ளைகள்போல் வாய்விட்டுக் கத்திகின்றேன் (௮௭)

பிரம னெழுத்ததனைப் பெயர்த்தெழுந்தும் நம்பெருமான்
தரமன்றி லாடுகின்றோன் றாளடையிற் பெயர்த்திடுவான்
பரமன் பதமடைந்தாற் பறிப்பானே நம்விதியை
உரியா ரெனக்குளதோ வுன்னையலாற் கண்டறியேன் (௮௮)

உன்னடியார் கூட்டத்து ளுற்றிருந்தாற் பெற்றிடுவே
னென்பேய் மனத்தாலே யெததனைநாட் கெட்டலைவேன்
பின்னை யுன்னை வந்தடைந்தேன் பிறவா வரமருளே
அன்னையினு மன்புடையா யவலமெல்லாந் ரேட்டருளே (௮௯)

எல்லாமுன் கூத்தே யேதறிவே னென்பாவி
வல்லாவுன் றாளடைந்தேன் வஞ்சகமே நானறியேன்
கல்லா மனப்பிழையைக் காண்பா யதுஉனக்கே
நல்லார்க்கு நல்லானே நான்செய்வ தொன்றுண்டோ (௯௰)

அறக்கொடுமைப் பாவியையா அடியிணைத்தாள் வந்தடைந்தேன்
பறக்க விழிககவைத்தாய் பகருஞ்சொற் கேட்டிலையோ
சிறக்கவுனை நம்பினற்குச் செய்யும் பரிசிதுவோ
மறக்கமுடி யாதுனனை மறந்தா லுயிர்போமே (௬௧)

வல்லாரின் வல்லாயுன் வண்மைநினைந் தேகுளிர்ந்தேன்
கல்லா மனப்பாவி களித்தேன் கருத்தறியேன்
எல்லாமும் வல்லசித்தா எனக்குநீ செய்வதிதோ
நல்லாற்கு நல்லவனே நாய்மட் டிரங்காயே (௬௨)

இரக்கமில்லா நெஞ்சனக்கு என்மட்டில் வந்ததென்றோ
தரமுனக்குத் தெரியாதோ தாயிதுநீ செய்வதுவோ
அரக்கர்குல மாய்த்தமர ரரியசிறை மீட்டாயே
மறக்கமுடி யாதுன்னை வல்வினையே னெஞ்சினிலே (௬௩)

நம்புவார் தங்களுக்கு ஞாயம் நடுவிதுவோ
வம்பு பழுததமன வல்வினையே னெஞ்சினுறை
கொம்பி லருங்கனியே கோதுபடாத் தெள்ளமுதே
அன்பி லுனைப்பிரியே னுருயிர்போ மட்டிலுமே (௬௪)

தள்ளிவிட் டீநினைகதாற் றஞ்சமொருவரிலை
வள்ளிக குகநதவனே வானோாககு நாயகனே
உளளிருநது ஆட்டுமுனை ஓதியேன் மறப்பேனோ
எள்ளளவு மென்னெஞ்சி லெநதாப் பிரியேனே (௬௫)

தஞ்சமென்றோர் தங்களைநீ தள்ளுதலாற் புண்ணியமோ
வஞ்சக முனககுமுண்டோ வாய்திறவா தெர்தன்மட்டில்
நெஞ்சமு கருங் கல்லாச்சோ நீதியிதோ வேலமுருகா
பஞ்சப் பொறியடஙகாப பாவியைநீ தள்ளாதே (௬௬)

எத்தனை காலமதா யெளியேன் படுநதுயர
மத்தனையும பார்த்திருந்தா லழகோ திருவருட்கு
சித்தனேநான் செய்பிழையைத திருவுளததிற் கொள்ளாமற்
கததனே காத்துக கடைததேறச் செய்வாயே (௬௭)

மத்த வெறியினர்போன் மயக்கவிட்டா னீதியதோ
உத்தமமா மூந்தனக்கு ஓதியேன் றனைவெறுத்தாற்
பெற்றபிள்ளை தன்வருத்தம் பெற்றா ளறிவதல்லாள்
மற்றா ரறிவார்களோ வாமுகம் பார்ப்பர்களோ (கூஅ)

ஊழிதோ றூழி யுன்பதமடையா வுடலெடுக்க திட்டதோவனந்தம், பாழதாமனது தெளிவதுபெறாது பதைபதைத் துருகினான் திகைத்தேன், வாழிநீ யுந்தன் வழிவழியடிமை வகையையீ றறிந் திடவிலையோ, தாழநீ விடுக்கிற் பழியுனக்காகும் பாவமும் நின்னையே சாருமே (கூகூ)

தள்ளினும் போகேன் றஞ்சமென் றடைந்தேன் சங்கரா நீதியோ ஐயா, விள்ளினுமுன்னையே நாவதுசொல்லும் வேறுரைக் கென்மனம் வெழும்புமே, உள்ளினும் புறத்து முன்னினைக்கின்றே னொருமொழி கொண்டுனையடைந்தேன், புள்ளினுங்கடையேன் நான் மிகச்செய்யும் பிழையெலாம் பொறுப்பதுன் கடனே (௱)

குறையிலாமனத்தோ யெண்குணத்தவனே கொற்றவா பிழைபொறுத்தாள்வாய், தரையினன்பாவி தனித்தனி யேங்கித் தளருதல் திருவருட்கழகோ, உறைவிடமெனக்கு உன்பதமல்லா லுலகினில் வேறிடமுண்டோ, பரையுமை பாலா பன்னிருகையா பறிக்கிலென் வினைமுடிந்திடுமே (௱க)

ஆரினும்பெரியோ யாகினுஞ்சிறியே னறிந்துதா னடுத்துநிற்கின்றேனை, பாரினுமபாரேன் பதமலால்வேறு பலனவையளிக்கினும் வேண்டேன், சேரினுமுன்னையே சேருவனல்லாற் றேவர்செங்கோலெனும்வேண்டேன், தேரினுந்தேறே னென்னறிவாலே தேவர்கோன் தேற்றிடல் தேர்வேன் (௱உ)

போற்றிடுஞ்சிவத்தின போகமமுதைப் புசிக்கிலேன் பொருளெனக்கொண்டு, சோற்றையே நாளுந்தின்று தின்றுழைத்துத் துக்கமே சுகமெனக்கருதி, ஊறுறைநெஞ்சுடையேன் உன்னருள் பெறநா னொருதவமாயினுஞ் செய்யேன், சேற்றினிலாழு மெனக்கரைசேர்ப்பாய் திருவருள் தந்தையே தாயே (௱௩)

என்பெரும்பிழையைப் பொறுப்பவர்காணே னென்னை யீன் றெடுத்தருள் தாய்நீ, என்செயல்கண்டு சமதிக்கின்றாய் சகிக்கின்றாய் மகவென விரங்கி, புன்மதிக்கொமயேன் கொடும்பெருஞ்செய்கை போக்குவார் யாரெனசகெந்தாய், நன்மையைக்கருதி யிரங்கிலையானால் நரகிடைப் புழுவெனப்படுவேன் (௱௪)

மூலமெனுந் தலத்தில் முக்கோண வட்டமதில்
சாலவே நின்றிலங்குந் தற்பரானந்தமதை
ஏனுமோ னத்தைக்கொண்டு இயங்காமலே யிருந்து
சாலவே மாந்திருக்குந் தமியேனைக் காத்தருள்வாய் (௱௫)

## கீர்த்தனைகள்.

### பல்லவி. (சங்கராபரணம்)

சும்மா யிருமனமே சுட்டற்றுச்
சும்மா யிருமனமே.

### சரணங்கள்.

திடுக்க மில்லாத நெஞ்சே செய்தொழில்மெத்த நன்றோ
தடுக்கவுங் கேளாமற் றானே கெட்டலைகிறாய் (சும்மா)

விடுவிடு நீ மனமே வேட்கை யனு சந்தானம்
கடுகடுத் தோடி நமன் கண்டிக்க வந்துவிட்டான் (சும்மா) ௨

கெட்டலைந்தாய் கெட்டலைந்தாய் கேள்வியற்றே கெட்டலைந்தாய்
பட்டலைந்தாய் பட்டலைந்தாய் பல்லூழி காலமதாய் (சும்மா) ௩

விட்டுவிடு விட்டுவிடு விருத்தியை விட்டுவிடு
மட்டடங்காச் சேனை மாண்டுவிடு மிப்பொழுது (சும்மா) ௪

தன்னர சாட்சி தலைமையை விட்டுவிடு
துன்பமி கனோந்திடத் தாயோன் வருகின்றான் (சும்மா) ௫

## பல்லவி

பந்துவாளி, சாப்பு.

அப்பா இது என்ன அநியாயம்—மனம்
அறுபது நாழிகையு மசைந்துகொண் டிருக்குதே (அப்பா) க

இப்பாவம் போக்கியெனை முக்காலுங் கைப்பிடித்தாள்
அப்போதைக் கப்போ அசையாமற் காத்தருள்வாய் (அப்பா) உ

உற்றாரே போலிருந்து உள்வினை வளர்க்குதே
நற்றாயி னற்றாயே நாமெருளத் தாயே (அப்பா) ந.

ஒப்பாரு மில்லாத அப்பா பரங்கிரிவாழ்
எப்பாரும் போற்றி புகழ் அப்பா முருகய்யா (அப்பா) ச.

எப்போ துனைநினைந்து ஏகமா யுருகிட
தற்போத நிலைகெட ஷண்முகா அருள்செய்வாய் (அப்பா) ரு

அகமதை யடக்கிட அரசனு நீயலையோ
சுகமிலலாப் பதாமனம துக்கத்தி லாழ்த்துதே (அப்பா) சு.

துஷ்டர் தனையடக்க சுடர்வே லெடுத்து அய்யா
மட்டில்லா மனப்பாவி வலிகெடச் செய்வாயே (அப்பா) எ.

## பல்லவி.

ஆனந்த பைரவி.

தொண்டனைச் சோதிக்க லாமா
உன்னை யண்டியு மென்றனைக் கைவிடப் போமோ (தொண்ட)

பண்டு தவம்புரியாப் பாவிநானானாலுங்
கண்டு பிடித்தபின் கடையேன் விடுவேனோ
சண்டை பிடிக்குமன தானதை யடக்காமல்
மண்டை யெழுத்தினையு மாற்றிட வல்லவா (க)

அண்டையில் வந்திருந்து மருள்கொடுத் தாளாமல்
பண்டை வினைப்பயனைப் பாழாகச் செய்யாமல்
தண்டை சிலம்படிக்கீழ் சரண்புகுந் திட்டவென்னை
வண்ட மனக்குரங்கின் வாதனை யடக்காமல் (தொண்ட) (௨)

இமையோர் முதலானோ ரெதிர்க்கினு மவர்க்கஞ்சேன்
உமையாள் தருபுதல்வா உன்னடி யடைந்திட்டேன்
எமையாளா விடிலிங்ஙன் எமன்வரி னென்செய்வேன்
அமையாத் துயர்கொடு அலைந்துழல்வதைக் கண்டும் (தொண்ட)

எழுகடல் குடித்திடு மேர்முனிக் கருள்நாதா
அழுதிடுங் கீரனை யாதரித்திடும்-போதா
பழுதில்லா வடியாரைப் பரமேற்றுங் குணநீதா
தொழுதிடு மடிமையைத் தூக்காதென் னுட்ன்வாதா (தொண்ட

ஈசனே உன்னுமமெந்நாளு மறந்ததில்லை
நேசமா யொருவரை நெஞ்சி னினைந்ததில்லை
பாச மகற்றிடாயேல் படும்பாடு வெகுதொல்லை
தாசன்சொல் சரதமே நம்புவா யென்சொல்லை (தொண்ட) (ரு)

பஞ்சம் பொறிகரணம் பாவிகள் வாதிக்க
கொஞ்சமோ படுந்துயர் கோவே யதைச் சேதிக்க
வஞ்சகமோ வறியேன வள்ளிமண வாளா
அஞ்சு மெனக்குறுதி சொல்லி யருளாளா (தொண்ட) (சு)

பள்பளெனப் பல்லக்கேறிப் பவனிவரும் ராசர்களு
மழமழெனவே யமனூர் வந்தழிந்தலுங் கண்டேன்
உழலு மயக்கமதை யோட்டியெனை யாளாமல்
தளரவே விட்டுவிட்டு ஷண்முகா அன்பிலர்போல் (தொண்ட)

—0—

பல்லவி. (இந்துஸ்தானி காப்பி)

ஆதிதாளம்.

முருகனைத் துதிமனமே காலன்வர
அஞ்சுவான் தினமே

அநுபல்லவி.

கருதிவழி வாராமற் காத்திட வேண்டியே
பருவதம் போலெமன் பாசம்வரு முன்னே (முருகனை) ௧.

தொண்டர் புகழும்வேலன் கண்டங்கறுத்தோன் பாலன்
வண்டர்க் கெதிர்க்குஞ் சூரன் அண்டிடார்க்கதிதூரன் (முருகனை)

உற்றா ருனக்கே தவர் பற்றேது பாவி நெஞ்சே
மற்றோ ரிருந்துமென்ன செத்தால் வருவரோ (முருகனை) ௩.

முத்தர் தொழுஞ் சீலன் பக்தர்க் கனுகூலன்
சத்தியருள் பாலன்-வெற்றிபுரி வேலன் (முருகனை) ௪.

மோசம் வாராமற் காத்து முத்தியளிக்கு மீசன்
தாச-னுலகம்மை சாற்றுங் கவிக்கு நேசன் (முருகனை) ௫.

---

## தலைவிதிக் கீர்த்தனை

பல்லவி.

எந்தவிதஞ் செய்திடுமோ—அறியேன்
என் தலை விதியே

பந்த பாசவலைக்குள் பட்டிடச் செய்யுமோ
கந்தனை வழிபட்டுக் கதிபெறச் செய்யுமோ (எந்த) ௧.

அன்னை கருக்குழியிலடைந்திடச் செய்யுமோ
பின்னுன் னருள் மறந்து பேதிக்கச் செய்யுமோ (எந்த) ௨.

மண் பெண் பொன்னாசையில் மயங்கிடச் செய்யுமோ
கண்ணுதல் மூர்த்தி பதங் கண்டிடச் செய்யுமோ (எந்த) ௩.

வினையென்ற பாவியை வென்றிடச் செய்யுமோ
பனிபோனி மிர்ந்துலகிற் பவஞ்செய்யச் செய்யுமோ (எந்த) ச.

பஞ்சப் பொறிவழியே பாய்ந்திடச் செய்யுமோ
நெஞ்சக்கல் கரைந்துனை நினைந்திடச் செய்யுமோ (எந்த) ரு.

மண்டை யெழுத்தை மாற்றும் வகைபெறச் செய்யுமோ
சண்டைப் பைக் குட்புகுந்து தயங்கிடச் செய்யுமோ (எந்த) சு.

ஆங்கார வேர் பிடுங்கி அருள்பெறச் செய்யுமோ
ஓங்கார கம்பத்து ணுணர்வுபெறச் செய்யுமோ (எந்த) எ.

ஊர்நாயைப் போலெங்கு மோடிடச் செய்யுமோ
பாரிற் பலபிறவி பற்றிடச் செய்யுமோ (எந்த) அ.

வெல்லா விதிவசத்தை வென்றிடச் செய்யுமோ
வல்லா ருடனே மேல் வழியுறச் செய்யுமோ (எந்த) கூ.

என் விதி வினை நானே யறிந்திடச் செய்யுமோ
தன்னை யறிந்துலகிற் றனாக நிற்பேனோ (எந்த) ய.

## பல்லவி.

கந்தனைத் துதிமனமே—யெப்போதுங்
கந்தனைத் துதிமனமே.

பந்தவினையகற்றிப் பாதுகாத் திடும்வேலன்
எந்தவேளையும் நம்மோ டிருந்திடுங் குணசீலன் (கந்த) க.

பாவ வினையினுற் பந்தத்தி லாழாமல்
ஆவலாய்ப் பிரபஞ்ச ஆழியில் வீழாமல் (கந்த) உ.

சின்னஞ் சிறுவயதிற் றெரிந்துவந் தாண்டவன்
மன்னு மடியார் முன்னேவர அன்பு பூண்டவன் (கந்த) ந.

தஞ்சமடையு முலகம்மையைத் தாங்கிடும்
வஞ்சக ருளத்தில் வாராம னீங்கிடும் (கந்த) ச.

## பல்லவி.

ஆருந் துணைக் காணேன் கொடும் பாவிக்கு
ஆருந் துணைக் காணேன்

## அநுபல்லவி.

ஆருந் துணைக்காணேன் ஆறுமுகப் பொருளே
பாரில் வேலெடுத்தோனே பாழ்வினை யறுத்தாளே (ஆரு)

## சரணங்கள்.

பத்திக் கடலிற்புகும் பழவடியார்க்கருளும்
வெற்றிவே லெடுத்தோனே வேண்டிப் பணிகொள்வாய் (ஆரு)
தாயிற் சிறந்தோனே தாங்கிக் கொள்வாய் நீயே
பேயைப்போ லலைந்தேனே பேரருள் மறந்தேனே (ஆரு)

தாயுங் குருவானாய் தானே தடுத்தாண்டாய்
பேயேன் பிழை தவிர்த்துப் பேரருளிற் சேராய் (ஆரு)

நாயேன் நலமறந்து நஞ்சனுங் கெண்டையானேன்
சேயேன் றனைக்காத்துத் திருவடிக் காளாக்கே (ஆரு)

கருவி லெனைக்காத்த கணக்கை மறந்துவிட்டு
தெருவில் விளையாடுஞ் சிறுவர்களானேனே (ஆரு)

மருவி யெனையாண்டு மயக்கந் தவிர்த்தானை
அருவி லறியாமல் அருந்துயர்க் காளானேன் (ஆரு)

பாலன் றனக்கா யன்று காலனை யுதைத்தோனே
பத்திக் கிரங்கிப் பன்றிபா லுணக்கொடுத்தோனே (ஆரு)

நானினிமேற் பிறவேன் ஞாயத்தை விட்டகலேன்
தேனுண்ணும் வாயாலே திரும்பா விடமருந்தேன் (ஆரு)

விடமாட்டேன் விடமாட்டேன் வேல்கை முருகோனே
படமாட்டேன் படமாட்டேன் பழவினை யறுத்தோனே (ஆரு)

சத்திய முரைத்தே னென் சாமியே நானின்று
நித்தியஞ் சேராவிட்டா னில்லா தென னுயிரே (ஆறு)

நாவில்லா மணியானே னலமொன்று மறியே னோற்
பாவுக் குழலானேன் பதைத்துளம வாடினேன (ஆறு)

மோனத்தி னின்றுநான முடிவை யறியாமல்
ஊனமா மாசையினு னுழன்றேன் பிறவியிலே (ஆறு)

இருவினைப் பாசத்தா லெண்ணு தினைமறந்தேன்
கருவழி வாராமற் காப்பதுன் கடனுமே (ஆறு)

அஞ்சுபுல வேடர்வாழு மருங்கானிலகப்பட்டேன்
மிஞ்சு மனத்தாலே வீழ்ந்தேன் பாழ்நரகில் (ஆறு)

வாக்காதி ஐவரொடு வலையி லகபபட்டேன்
தாக்கு கரணப் பாவி தன்னை யறிய வொட்டான் (ஆறு)

தொண்ணூற் றறுவருக்குட் சுழன்று மயங்குகின்றேன்
நண்ணி யெனையெடுத்து நாதா கரையிலேற்றே (ஆறு)

ஐயா உனைக்காண ஆவல் துடிக்குதையோ
பையரவின வாய்த்தேரை பதைத்தாற்போற் பதைக்கின்றேன் [ ]

உடலஞ் சதமலவே ஒன்பான வாய்ப் புழுக்கூடு
சுடலை சேருவது சொற்பிர மாணமதே (ஆறு)

கூற்றன் வருவானே குத்தி யிழுப்பானே
மாற்ற வறியேனே மயஙகித் துடிப்பேனே (ஆறு)

செத்தசவம் நானே தேடித் தவியேனே
சத்திவடி வேலா சத்திய மறியாயோ (ஆறு)

பல்லவி.

தேருஞ் செயல்காணேன்—செந்திற் குகனையன்றித்
தீரும் வினை காணேன்.

## அனுபல்லவி.

சேருங் கதியிலெனைச் சேர்ந்தாள வாயிடபோதே
பாரும் விசும்புள்ளோரும் பணியும் வேல்முருகா (தேரு)

## சரணங்கள்.

தேவர்கள் தொழும்வேலா — தீவினைதீர் சீலா
மூ பாக டமிழேற்று முன்னோனருள் பாலா (தேரு)

சத்திவே லெடுத்தோனே சங்கரி புதல்வோனே
முத்தி தருவோனே முழுதுணர் புலவோனே (தேரு)

அத்தி யுரித்தோன் சேயே ஐங்கரற் கிளையோயே
பத்தி வலையிற்படும் பாலா முன் வருவாயே (தேரு)

முற்று மெனைக்காத்தாள் மூடன் கரைசேர
சுற்றம் வினைபொடிய துடிவே லெடுத்தோனே (தேரு)

கத்தும கடையேனுளங் களித்திடச் செய்வாயே
பற்றும் படற்பயிர்க்குப பாங்காய்க் கொழுகொம்பே (தேரு)

பாரி லுழன்றேனே பார்த்து மிரங்காயோ
ஊரிலோர் பாவிநா னுனை மறந்தேனே (தேரு)

ஆரோ கதியெனக்கு ஆள்வாய் முருகோனே
சோறு கதியெனநான் றொல்லுலகி லலைந்தேனே (தேரு)

விண்ணவர் கோமானே விடையூர்வன் புதல்வோனே
பண்ணவர் கோமானே பரையுமை யாள்பாலா (தேரு)

என்னையு மாள்வாயோ என்னிருவினை தீர்ப்பாயோ
தன்னை யடைந்தவரைத் தள்ளாய் முக்காலும் (தேரு)

கொள்ளைப பிறப்பறுப்பாய் கூர்வே லெடுத்தோனே
கள்ளமனந் தெளிப்பாய் கதிர்வே லெடுத்தோனே (தேரு)

துள்ளு மனக்குரங்கை வெல்லாய சூர்கிளை கொன்றோனே
எள்ளெண்ணெய் போற்கலப்பாய் எந்தன் மனதினுள்ளே (தேரு

தள்ளிவிடாதே சாமி தலைபட்ட வுயிரென்று
கொள்ளி மனத்தாலே கோடிசென்ம மெடுத்தேனே (தேரு)

தள்ளி தள்ளிப்போச்சே நான தன்னை யறியாமல்
வள்ளிக் குகந்தோனே வாவென் றருள்வாயே (தேரு)

சின்னஞ் சிறுபாலா என் செல்வத் திரவியமே
முன்செய் வினையறுத்தாள் மூடன் கரையேற (தேரு)

உலகினி லெனைச்சிரிப்பார் ஊரிலி மாடானேன்
வலையிற் படுமான்போல் வாடித் தவிக்கேனே (தேரு)

கருவில் வருவேனோ வந்த கலக்கந் தவிர்ப்பேனோ
வருத்ததுவப புலிமுன்னே மான்போல் மயங்கித் தவிப்பேனோ )

செத்துவரமாட்டேன் உன் திருவடி விட்டகலேன்
சத்துருக்கள் கூட்டத் தென்னைச் சாரவருள் புரிவாயே (தேரு)

குருவாகி வந்தாயே என்னைக் குலமறுத் தாண்டாயே
கருவழி வாரமற் காத்தெனை யாள்வாயே (தேரு)

மறலி வருவானே அவன் வலியிங்கே செல்லாமற்
சுரர்க்கதிபதியோனே சொந்தமா யாண்டோனே (தே ரு

பிரமன் படைப்பானே அவன பெற்றியறியேனன்
பரமன் அருள்பாலா நான் பாரில் வரமாட்டேன் (தேரு)

பட்டசளம் போதும் நான் பட்டசளம் போதும்
கெட்டசளம் போதும் பிறந்திட்டசளம் போதும் (தேரு)

எங்கெங்கும் பார்த்தாலு மென்பவம்போற் காணேன்
தங்காமல் வந்தாள்வாய் தங்க வடிவேலா (தேரு)

பங்கப் படுத்தியமன் பாசத்தால் வீசுமுன்னே
தங்கையிற் பிள்ளைபோலத் தாங்கிக்கொள்வாய் நீயே (தேரு)

விட்டுவிட நினைந்தால் வேறொருசெயல் காணேன்
தட்டழிந் தழலாமல் தாழடிகளே சேர்ப்பாய் (தேரு)

எக்காலத்தி லும் நம்பி எத்தித் துதித்திருப்பேன்
முக்காலும ஆணையுன்மேல் முனிந்து வெறுத்திடாதே (தேரு)

செக்கர் சடையோனே செத்துழலப் பண்ணுதே
மக்கள் குழாத்துள்ளே மயங்கநான் மாட்டேனே (தேரு)

பச்சைமான் மருகோனே பன்னிரு கரத்தோனே
பிச்சை கொடுத்தருள்வாய் பேருருட் செல்வமதை (தேரு)

கதிர்வடிவேலா என் கவலை யொழிப்பாயோ
விதிர்விதிர்த் தேங்கிவாடி விள்ளுமுறை கேட்பாய் (ஆரு)

——(o)——

## பல்லவி.

ஏன் மயங்குகிறாய்—மனமே
ஏன் மயங்குகிறாய்

## அநுபல்லவி.

தேவாதி தேவனைத்—தேவரெல்லாந் தொழும்
மூவர் முதல்வனை நாவிற் றுதியாமல் (ஏன்-மயங்கு

## சரணங்கள்.

சித்தாடுஞ் சித்தனைத் திருநட ராஜனை
சிந்தையி னினையாமற் றிரிகிறாய் வீணே (ஏன்)

துரியங் கடந்தவொரு துரியாதீ தப்பொருளை
தோந்தோ மென்றாடிய பாதனை மறந்து (ஏன்)

தந்தோமென் றன்பருக்குச் சன்மார்க்கப் பொருடந்து
தானே நடம்புரியுந் தாளையுட் பதியாமல் (ஏன்-மய)

சஞ்சித மூவாதனையைத் தானே தவிர்ப்பவர்க்கு
சத்து சித் தானநதங் கொடுப்போனைச் கைவிட்டு (ஏன்)

சித்தா பொன்னம்பலத்திற் றிருநடமாடிடுந்
திருத்தாளைப் போற்றுமற் றினந்தின மேத்தாமல் (ஏன்)

கற்றவ ருளத்திலமர் கற்பனை கடந்த சோதி-
தத்துவா தீதப்பொருள் தானாகி நின்றானை மறந்து (ஏன்)

மயக்கந் தவிர்த்தவரை மகிழவுடன் கைதூக்கும்
மால்விடை வருபவர் மலரடி துதியாமல் (ஏன்)

மயக்கத்தைப போக்கி வன்மனதைத் திருத்தாமல்
தியங்கித் தியங்கிச் சனனத்து ளாகியே [ஏன்]

சத்தம் பிறந்திடத்திற் றானேதா னாகாமற்
சித்தங் குலைகுலைந்து திரிகுறாய் வீணே [ஏன்]

சிதம்பர மென்றுசொல்லுந் தில்லைப் பெருவெளியில்
சித்தத்தை யொன்றுவிக்குந் திறமறியாமல் நீ [ஏன்]

தாயில்லாப் பிள்ளையைப்போல் தயங்குறாய் வீணே
பேய்கொண்ட மனமே பிதற்றுறாய் வீணே [ஏன்]

அர்த்த மனைவி மக ராசைப் பெருக்கத் துழல்
சித்த மகிழ்ச்சியாற் றிரிகிறாய் வீணே [ஏன்]

தன்னை ததா னென்றறியாய் சண்டாள மடநெஞ்சே
பின்னைத்தா னைதைக்கொண்டு பிழைப்பாய்நீ பேய்நெஞ்சே [ ]

உத்தம குணத்திலுறை உத்தமப் பொருளை நாடி
உன்னாமல் பண்ணாமல் ஒகோ நீ கெடுகின்றாய் [ஏன்]

மத்த வெறியினர்போல் மயங்கி முயங்குகின்றாய்
சித்தந் தெளியாமல் நீ தியங்குகிறாய் பேயே [ஏன்]

சித்தாடுகின்ற வொரு சித்தர் திருப் பொற்றாளை
சிந்தை மயக்கந் தெளிந்துனைப் போற்றாமல் [என்]

சினமதை முனிந்து மனமது தெளிந்து
தினமுந் தாள்பணியாமல மெழுகுபோ லுருகாமல் [என்]

## பல்லவி.

அஞ்சாதே நெஞ்சே அஞ்சாதே
இளமேவ அறுமுகன் வருகின்றார்

## அனுபல்லவி.

பஞ்சாய்ப் பறந்துள்ளம் பரிதவித் தழல்கின்றாய்
விஞ்சை ஓம பிரணவம் மேல்வீட்டுக் கோவித்து [அஞ்]

## சரணங்கள்

சஞ்சலத்தி னாசலா லலைகின்றாய் சத்திய மறவாதே
நெஞ்சை நிலைக்கவைத்தா னீடூழி வாழலாம் [அஞ்]

வஞ்சமன ஆசைவிட்டால் வாராது சஞ்சிதங்கள்
செஞ்சரணச் சேவடிகள் சேர்ந்து சுகித்திருப்பாய் [அஞ்]

கொஞ்ச மனத்தாலே நீயுங் குறைபட்டுக் கெட்டலைந்தாய்
பஞ்சப் புலன்வழிநீ பாய்ந்துள்ளம் நடுங்காதே [அஞ்]

கொஞ்சமென் றெண்ணி எமன் கோபந் தொடுப்பானே
தஞ்சமென் றெண்ணியான் சரணடைந்திடு முக்கால் [அஞ்]

பஞ்சம் நமக்குண்டோ பாவெளி சேருதற்கு
நஞ்சை யுண்டோ ரிதோ நம்மிடத் திருக்கின்றார் [அஞ்]

ஐயன் பதமறந்து நையுமுடம் பெடுத்தாய்
பொய்ய னிவனென்று புறம்விட மாட்டார் நம்மை [அஞ்]

பையன் சிறுமதியாற் பாவத்துக் காளானேன்
செய்யன் சிவலோகன் றிறத்தைநீ மறவாதே [அஞ்]

புழுவாய்ப் பிறக்கினு பிறக்கின்றே னையோ
எழுபிறப்பாயினு மேங்கே னுன் பதந்தனில் [அஞ்]

தொழும்பனேற் கென்னென்ன சுகதுக்கம் வந்தாலும்
பழுதிலா மனதொடு பரமன் பதத்தை யொன்று [அஞ்]

வேதாந்தஞ் சித்தாந்தஞ் சமரச மானால்
வெட்டவெளி நடுவுள் விளையாடலாமே [அஞ்]

பாதாந்த வரையிறு மணக்கமன் றாடும்
பாதார விந்தத்துள் பணிந்துகொள் நீயே [அஞ்]

வேல்முருகன் நாமத்தை விட்டுவிட்டு நினையாதே
தோற்பாவைக் கூத்தாட்டுஞ் சொரூபனை மறவாதே [அஞ்]

வெஞ்சரங் கொண்டுநமன் வெகுண்டு வருமுன்னே
குஞ்சரற் கிளையவன் குமரன் பதத்தையொன்று [அஞ்]

வஞ்சமனச் செயல்போனால் வாழ்வழிப்பான்
பஞ்சப் பொறியடங்கில் பரஞ்சோதி வெளியாமே [அஞ்]

நீயென்று நானென்று மிரண்டாய்ப் பிரிந்ததென்றோ
தானென்ற மனத்தாலே நான்வேறே யாகின்றேன் (அஞ்)

தேனின் றெழுதாஞ் செந்திற்குகனை யுன்று
காணக்குற வள்ளிபங்கன் கழறனை மறவாதே (அஞ்)

துஞ்சா மனமொடுங்கிச் சும்மா யிருந்துவிட்டால்
பஞ்சப் பொறிகரணப் பதைப்பு மடங்கிவிடும் (அஞ்)

கஞ்சமலர்ச் சேவடியைக் கலந்து சுகிப்பாய் நாளும்
நஞ்சைப்போல் வெகுண்டு எமன் நம்மிடத்தில் வாரதில்லை (அஞ்)

——0——

## பல்லவி.

பார்க்கப் பார்க்கத் திகட்டுதே-பரம சொரூபத்தைப்
பார்க்கப் பார்க்கத் திகட்டுதே

## அநுபல்லவி.

பார்க்கப் பார்க்கத் திகட்டுதே-பாவியேனுள்ளங்-கொதிக்குதே
சேர்க்கச் சேர்க்க நிறையுதே தெவிட்டா இன்பஞ்சொரியுதே ()

## சரணங்கள்.

கார்க்க உனக்கு கருணைபொங்கி கலந்துகொள்ளுதே
ஏற்க ஏற்க நடவா வென்னைக்காக்கக் காக்கக்கடவதே (பார்க்)

கற்றுப்பிரிந்த கன்றுபோல கலங்கிக் கலங்கித் துடிக்குதே
நற்றாய் பிரிந்த பிள்ளைபோலே நாடி நாடித்தவிக்குதே (பார்க்)

காலங் கடைசியாச்சுதே கைகால் நடுங்கிப்போச்சுதே
சால மிதுவென்றாச்சுதே சாமியென்னை யாள்வையே (பார்க்)

கோடிகோடி ஜென்ம நான் வாடி வாடி வினைமறந்து
நாடிநாடி ஏமன் என்னை நரகிடைக்கண் வீழ்த்துவான் — (பார்க்)

தேடித் தேடியுன்பதஞ் சிந்தைநைந் துருகிலேன்
பாடிப்பாடிப் பதைப்பொழிந்து பரம இன்பஞ்சேர்வனோ (பார்க்)

மூர்க்கனென்று என்னை நீ முனிந்துவிட்டா லென்செய்வேன்
கார்க்கக் கார்க்கக் கடனுனக்குக் கைநீவிட்டா லுய்வனோ (பார்க்)

பார்க்கப் பார்க்க வெளிப்படுமே பரம இன்பந் தோய்ந்திடும்
சேர்க்கச் சேர்க்கத் திருவருட் செய்கை மூடனறிவனோ (பார்க்)

அருள்பழுத்த பழச்சுவையே ஆராவமுதக் கட்டியே
மருள்பழுத்த மனத்திலுள்ளே வாரா இன்பக் கட்டியே (பார்க்)

உருள உருள விழிக்கினு உன்னையன்றி வேறுண்டோ
கருவுள் ளடிமை வாராமற் காப்பதுன்றன் திட்டியே (பார்க்)

பரமானந்தப் பழச்சுவை பாவியேற்குக் கிட்டுமோ
மறவா நெஞ்சப் பழக்கத்தால் வாரா இன்பம வந்திடும் (பார்க்)

கரணவாதை தவிர்த்திட்டாற் காலனோடி ஒழிப்பனே
அரகரவென் றோதினல் அரி ஓம் எழுத்துப் பரவெளி (பார்க்)

மாண்டுவருமோர் வழிமைபயடைத்திட மாசற்ற சோதிமயமாக்கு
வாயோ, வேண்டுமடியன் வினையறுப்பாயோ வித்தகன் பாதத்
தை நத்தச்செய்வாயோ (பார்க்)

காண்டற்கரிய கழல்கொடுப்பாயோ கடையேன்ற னுள்ளங் களிக்
கச் செய்வாயோ, தூண்டும்படிக்கென்னைச் சுகத்தில்வைப்பா
யோ சும்மா விருக்குந் துணிவறிவேனோ (பார்க்)

தாண்டிச் சமுசாரக்கடல் கடப்பேனோ தானைதன்மைதனை யறி
வேனோ, வேண்டியென்னைக்கொண்டு மேல்வீடு சேர்ப்பாயோ வித்
தகன் பாதத்தில் செத்துக்கிடப்பேனோ (பார்க்)

ஆறுமுகத்த மண்ணலே ஆவைப்பிரிந்த கன்று நான்
சேருங்கதியிலென்னைச் சேர்க்கச் செய்வதுன்றன் றன்னருள் ()

பாரன்முகத்தைப் பாரையா பாராவிட்டா லாரையா
வேறுமுகத்தை யறியேனுன் ஆறுமுகத்தை யன்றியே (பார்க்)

கண்ணும்நீயே கருத்தும்நீயே எண்ணும்நீயே யெழுத்தும்நீ
யே, விண்ணும்நீயே வியப்பும்நீயே வெளியும்நீயே ஒளியும்
நீயே (பார்க்)

அண்ணல்நீ அரசும்நீ ஆரா இன்பப் பொருளும் நீயே
தண்ணமிர்தக்கட்டிநீ தாயிற்சிறந்த தற்பரனே (பார்க்)

உயிருக்குயிரா நின்று யென்னுணர்வை யெல்லாந் தெரியாயோ
வயிறுபசிக்குதென தாயே வாரியமுர்தந் தாராயோ (பார்க்)

அயர்வு வருகுதென் செய்வேன் ஆற்ற ஒருவரிங்கில்லை
பயமுறுதல பாவமல்லோ பன்னிருகை வேலையா (பார்க்)

ஏங்கி ஏங்கித் துடிக்குதே யெந்தனாவி சோருதே
தாங்கித் தாங்கி யெந்தனைத் தன்னடிக்கீழ் சேர்ப்பாயே (பார்க்)

ஓங்கியோங்கி யேமனென்னை யுருக்கும் வினையைத் தீர்ப்பாயே
வாங்கிவாங்கி பேரருளைத் தேங்கத்தேங்கத் தின்பனே (பார்க்)

அத்தநீ யமலநீ யறிவுநீ செறிவுநீ
சுத்தநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ (பார்க்)

கத்தநீ கடம்பநீ கைலைவாழு முதல்வநீ
நித்தநீ நிமலநீ நிறைவுநீ குறைவுநீ (பார்க்)

உற்றதெல்லா முரைத்தேனென் பத்தியிலலாப் பாவியேன்
நற்றவங்கள் செய்கிலே னவம் பிறந்தனன்

செத்திறந்து ஜென்மங்கள் எத்தனை யளவில்லை
கொற்றவா யெண்குணத்தவா யென்கொள்கை யெல்லா மறிவை
யே (பார்க்)

உலகமாயைச் சுற்றுள்ளே யுழன்றுழன்று கோடிநாள்
கலகஞ்செய்ய எமன் வந்தால கலங்கினும் விடுவனோ (பார்க்)

விலக நீயுபாயஞ்செய்து வேல்முருகன் றும்புக
சலனமின்றி வாசியைத் தற்பரத்தி லேற்றுவாய் (பார்க்)

மரணத்தை மறந்துநீ மாதவங்கள் செய்கிலாய்
கரணத்தை யுறவெனக் கலங்கிநாளுந் திரிகிறாய் (பார்க்)

தருணத்தை யறிந்துநீ சாரவெண்ணி வாழ்ந்திலாய்
பிரணவப் பொருளையுன்னிப் பேசாபோகம் பெற்றமே (பார்க்)

—— ($) ——

## பல்லவி.

எந்த நிமிஷத்தில் இந்த உயிர் போமோ
அந்த நிமிஷத்தை யறியே னான் சாமி.

## அனுபல்லவி.

பந்தனைக்குள் ளகப்பட்டுப் பரத்தை மறந்தேனான்
சந்ததியுறு கூட்டஞ் சகலருமென றெண்ணிசாமி சரண்புகுந்தாய்()

## சரணங்கள்.

உந்தனுயிர் போனால் ஒருவர் துணையில்லை
வந்த அயலவர் மாண்டாரென் றோதுமுன்
அந்த நிமிஷத்தி லறிந்துகொள்வா யுன்னை
வெந்து பொடியுமுன் வேல்முருகனை யொன்று (எந்த)

விக்க லெடுக்குமுன் மேல்மூச்சுக் கொள்ளுமுன்
அக்க லடைக்குமுன் கண்ணொளி மாறுமுன்
பக்க லிருந்தவர் பதறிக் கதறுமுன்
ஒக்க உனைச்சூழ்ந்து ஊரா ரழுமுன்னே (எந்த)

காலைக் கரங்களைக் கட்டி யிருத்துமுன்
பாலள்ளி யூத்துமுன் பாடையி லேத்துமுன்
மேலே எமனின்று வீசிப் பிடிக்குமுன்
கோல மயிலின்மீது குலாவுங் குகனையொன்று (எந்த)

இறந்தா ரிவரென்று இளைஞர்கள் பேசுமுன்
பிறந்தா ரிறந்தா ரிப்போ தென்று சொல்லுமுன்
இறந்தா ரிவர்வாழ்ந்தார் செத்தாரென் றோதுமுன்
மறந்து நினைக்காதே மகாதேவன் பாதத்தை (எந்த)

பெற்றாரும் பிள்ளையும் உற்றா ரழுமுன்னே
செத்தா ரிவரென்று தீயிடை யேற்றுமுன்

பற்று ருனக்கினி பரம்பொருள் தனையன்றி
செத்துப் பிறவாமல் திருவடி புகுவாய்நீ (எந்த)

இருவினையாலே எடுத்த சரீரம்
அது ஏகுமுன்னே உனை யேத்திடவேண்டும்
மூதுகு காட்டியோடினும் ஏமன்விடா னுன்னை
ஏகேதது செய்து நீ ஏகமாய் நின்றுகொள் (எந்த)

வந்த இயல்பை மறந்து விடாதே
எந்த இயல்பினும் ஏகமாய் நின்றுகொள்
பந்த இயல்பினிற் பாய்ந்து கொள்ளாதே
முந்த இயல்பினில் முழுதும் பதிந்துகொள் (எந்த)

உடல்விட்டு உயிர் போகுமுன்னே
ஜனனக் கடல்கடந்து கரையேறிக் கொள்வாய் நீ
படலந் திரையோதப் படல மறுத்தாள்நீ
சடலம் பொய்யென்று தானே யறிந்துகொள் (எந்த)

மாயப்பிறவி மயக்கத்தில் வீழாதே
தாயைப் பிதாவைத தஞ்சமென் றெண்ணாதே
சேயும் பொருளுஞ் செத்தா னுனக்குண்டோ
காயம் வராமல் ஐயன் கழல் கொடுத்தாள்கந்தா (எந்த)

——(o)——

## பல்லவி.

உற்றவர் காணேனுன்—உன்னையல்லால்
எனக் குற்றவர் காணேன்

## சரணங்கள்.

பெற்றவ ரிங்கிருந்தேன் பிள்ளைக ளிங்கிருந்தேன்
மற்றவ ரிங்கிருந்தேன் வாலுளோ ரிங்கிருந்தேன்
கற்றவ ரிங்கிருந்தேன் காசுபண மிங்கிருந்தேன்
செத்து வரும்பொல்லாத் தேகமு மிங்கிருந்தேன் (உற்ற)

உற்றவ ரிங்கிருந்தேன் உறவின ரிங்கிருந்தேன்
பற்றி யெமன்பிடித்துப் பாசத்தால் வீசுமுன்னே
வெற்றி வடிவேலா வேல்முருகையாவே
பெற்றவ ருன்னையல்லாற் பேணுவர் காணேனே (உற்ற)

சத்திவடி வேலா தாயில்லாப் பிள்ளையோ நான்
அத்துவித உண்மையறியே னருள் தாயே
பத்தியில்லா நாயேன் மனப்பதப் பொறுப்பாய் நீயே
முத்திக்கும் வித்தேயென் முழுமுதல் நாயகமே (உற்ற)

செத்துப் பிறவாதவுயிர் திருவருள் தாயிருக்க
வத்திவயி ற்றேப்பி வாயுலர்ந் தேக்கமுற்று
கத்திக் கதறுமுன்றன் கையிற் குழந்தையினி
உற்றுப் பிறவாம லுயர்நிலை யேற்றுவிப்பாய் (உற்ற)

பத்தும் புகுந்தேனே பாரினில் வந்தேனே
உற்றதறியேனே உழன்று மயங்குகின்றேன்
சத்தசத் தென்றறியாச் சாசுபத மிழந்தேன்
பெற்றதாய் நீயுமென்னை விற்றுக் கொள்ளொத்தியல்ல (உற்ற)

அத்தனருள் குமரா ஆயன் மருகோனே
கத்தனே கதிர்வேலா கடும்பிழை நீ பொறுப்பாய்
உற்றவுயிரே யென்னுணர்வுக் குணர்வானே
பெற்றபிள்ளை பிழையைக் குற்றமென் றெண்ணாதே (உற்ற)

நத்துஞ் சவலைதனை நற்றாய் மறப்பாளோ
கத்துங் கடும்பாவிதனைக் கையணைத்தாள்வாயே
முற்றும் பொறுத்தாள்வாய் முத்துவடி வேலோய்
செத்தா லினிமேலது செய்து பிழைப்பேனோ (உற்ற)

பற்றியெரியுதையே பதறித் துடிக்குதையே
சத்திவடிவேலா என் தன்மை யறியாயோ



SIVAGNANA MUNIVAR LIB
சிவஞானமுனிவர்
நூல் நிலையம்
திருநெல்வேலி
1927
TIRUNELVELI

வெற்றிவடிவேலா என்னை வேறெண்ணித் தள்ளாதே
சுற்றிவினைமூண்டு இந்தத் தொல்பாவைக் கூத்தாட்டே (உற்ற)

எத்தனை சொன்னாலும் ஏற்காதோ திருவருட்டு
அத்தனை சொல்லுதற்கு அடியேன் தரமாமோ
முத்தனை யுனையல்லால் முற்று மறிவாரில்லை
வித்தனை யுன்னையானும் விட்டுயி ரோம்பேனே (உற்ற)

வானோர் பதம்வேண்டேன் மண்ணோர் புகழ்வேண்டேன்
நானோ பெரும்பாவி நத்தும்வர மருள்வாய்
தானோர் செயலறியேன் தடுத்தாண் டருள்புரிவாய்
ஏனோ உடலெடுத்தேன் இந்நாட்டி லலைவதற்கோ (உற்ற)

ஆருமில்லாப் பாவியெனை யாதரிப்பார் காணேன்
வேறுவகை யறியேன் வேல்முரு கையாவே
பாரி லொருவரில்லைப் பாழிலலைவேனோ
காருங் கதிர்வேலா கள்ளமென் றெண்ணாதே (உற்ற)

வேறு கதிகாணேன் என் வேல்முரு கையாவே
பாரி லொருவரில்லைப் பான்மை யறிவதற்கு
ஊரா ரறிவர்களோ உள்ளுருகும் நிச்சயத்தை
நாறு முடலெடுத்தேன் நற்றவஞ் செய்தறியேன் (உற்ற)

என்செய லுன்செயலே ஏகமாய் நின்றக்கால்
தன்செய லாகுநிற்கில் தப்பித மெனக்காமே
முன்செய்த தீவினையால் மூண்டதே யித்தேகம்
என்செய்வேன் என்செய்வேன் எத்தால் பிழைப்பேனோ (உற்ற)

சின்ன வயதிலெனைத் தேடிவந் தாண்டாய்நீ
முன்ன வந்தாண்டதிறம் முற்றிலும் நினைந்ததினால்
என்னகுறை யெனக்கு யெந்தாய் குகவேளே
தனைக் கலந்துகொண்டு தானே தானாவேனோ (உற்ற)

மலர்ந்த வாசகமுரைத்தும் வண்மை மறந்தேனே
பொருந்தா மனப்பாவி புன்னெறி நன்னெறியோர்

இருந்தே மேல் வீட்டை யெய்தவே யிச்சித்தேன்
வருந்திக் கதறவிடல் வள்ளலுன் சம்மதமோ (உற்ற)

மற்றவ ரிங்கிருந்தேன் மயக்கந் தவிர்ப்பாரோ
உற்றவ ருன்னையல்லால் ஒருவர் துணையுண்டோ
முற்று மறிவாய்நீ மொழிவதுண்டோ வுனக்கு
கற்றறியா வென்னைக் காக்கக் கடனுனக்கே (உற்ற)

முத்தியிற் சேருதற்கே முற்றும் நானாசைப்பட்டேன்
கத்திக் கதறவிடல் கடவுளுன் சம்மதமோ
சத்திவடிவேலா ஷண்முக குணசீலா
தத்திப் பிழைப்பதற்குச் சார்ந்தேன் றிருவடியை (உற்ற)

கழுகு விருந்துகொள்ளும் கருமவினைக் கூட்டை
புழுவுடலைச் சுமக்கப் புண்ணியமோ குமரா
பழுதுசெய்ய யெமன்பத்திப் பிடிக்கு முன்னே
முழுது முனையடுத்தேன் முருகாநீ தாங்குவையே (உற்ற)

எல்லா மறிந்தாலு மேதுபலன் பெறுவாய்
வல்லானை நீயறிந்தால் வாழ்வுறச் செய்வானே
கல்லானைக் கரும்பருந்தக் காட்டிய சொக்கர்பதம்
நல்லா யெனக்கருளும் நாளிந்த நாளிதே (உற்ற)

நற்றணிகை முருகா ஞாய மறியாயோ
செத்து வருவ துன்றன் றிருவருட் சம்மதமோ
உற்ற துரைத்தேனுன் உண்மை யறியாயோ
பெற்றபிள்ளை நானென் பெற்றி யறிவாய்நீ (உற்ற)

பல்லவி

முருகா முருகா முருகா-வென்றால்
பாவம் முற்றிலும் போகுமே

99920

## சரணங்கள்

திருமால் மருகோனே தீவினை யறுத்தோனே
கருவே ரறுத்தோனே கலக்கந் தவிர்த்தோனே
பரிமே லுகந்தோன்றன் பாலா வனுகூலா
அரி ஓம் எழுத்துக்கும் அப்பால் நின்றோனே (முருகா)

ஆங்கத்தைப் பெண்ணாக்கி அசடரைக் கழுவேற்றி
லிங்கத்துக் குள்ளிருந்து நிமிர்ந்தோன் புதல்வோனே
மங்கும் படிக்குயெமன் மார்புதைத்தோன் புதல்வா
இங்கன் வினை தவிர்த்து என்னையாட் கொள்வோனே (முருகா)

பையரவம் பூணும் பரமன் றிருமகனே
உய்யும் படிக்கமரர் ஒளிர்வே லெடுத்தோனே
செய்ய பங்கயனைச் சிறையினி லிட்டோனே
நையு நற்கீரற்காய் நன்மலை பிளந்தோனே (முருகா)

வித்துக்கோ ளொத்தியல்ல வெற்றிவடிவேலா
பத்தும் புகுதாமல் பாரில்வந் தெய்தாமல்
குத்துங் கொலையெமன் கொன்றுபிடியாமல்
பெற்றபிள்ளை நானென் பெருங்குற்றம் பொறுத்துக்கொள் ()

அறிவு கலங்காம லாத்துமாக் குன்றுமற்
றெளிவு வரும்படிக்குச் சிந்தையி லுள்ளிருப்பாய்
பரிபூரணப்பொருளே பரவெளி தனிற்சேர்ப்பாய்
குருவாகி வந்தென்றன் கோள்தவிர்த் தாண்டோனே (முருகா)

ஜென்மம் வருமோவென்று சிந்தை தவிக்குதையே
கன்மம் விடாதேயென்று கலங்கிற்றென் னுள்ளமையே
வன்மம் பிடியாதே யென்வசையெல்லா மெண்ணாதே
தன்ம முனக்குண்டுன் தாளடிக்கீழ்ச் சேர்த்தாள் (முருகா)

பன்னிரு கரத்தோனே பழவினை யறுத்தாள்வாய்
மண்ணி லொருபாவி மயங்கித் தவிக்கின்றேன்

உன்னிரு பாதமல்லால் ஒன்றுந் துணைகாணேன்
கண்ணிரு கண்மணியே கருத்தி லுறைந்தோனே (முருகா)

கண்ணுங் கருத்துனைக் காணத் துடிக்குதையோ
மண்ணாதி யைவரும் வாக்காதி சுரோத்திராதியும்
பண்ணு மனப்பாவி பரிவாரக் கூட்டங்கள்
எண்ணி யுனைநினைத்து ஏகமாய்ச் சேரவொட்டா (முருகா)

ஒன்று மறியாயோ உண்மை தெரியாயோ
வென்று பொடியாக்க வெங்கோப னெழுவானே
அன்று எனைக்காக்க யாருந் துணையில்லை
என்று மெனைக்காத்து இன்பந் தருவாயே (முருகா)

பன்றி வடிவெடுத்தும் பக்ஷிவடி வெடுத்தும்
அன் றிருவர்தேட அதற்கப்பால் நிமிர்ந்தோனே
கண்டு களிப்பேனோ கருத்தி லமர்வாயோ
கொன்று பிடிப்பானே கூத்தனை வெலவாயோ (முருகா)

முத்து வடிவேலா என்னை முற்றிலுங்காப்பாயோ
கத்து மடியேனைக் கையணைத் தாள்வாயே
செத்துப் பிறவாம லுன்றிருவடிக் காளாக்கு
சத்துக்கள் கூட்டத்தெனைச் சாரவருள் புரிவாய் (முருகா)

தாயாகி வந்தென்னைத் தடுத்தாண்டானே
பேயேன் மறந்தநர்தப் பிழைதவிர்த் தாள்வாயே
சேயேன் செய்குற்றஞ் சிந்தையில் வையாதே
வேயுறு தோளிபெற்ற வேல்முருகையாவே (முருகா)

ஆரிருந் தாலென்ன அண்ணால்நீ யில்லாவிட்டால்
ஊரிருந் தாலென்ன உடலிருந் தாலென்ன
பேரிருந் தாலென்ன பேயேன் றனக்கிங்குன்
சீரிருந் தாலுய்வேன் சிந்தா மணிமுத்தே (முருகா)

கிட்டை யில்லாத நீசனென் றெண்ணி
வெட்ட வெளிசேரும் விபரம் விளங்காமல்
கட்டஞ் செய்யாதே கண்ணன் மருகோனே
கட்டை யுடையுமுன்னே கழல்கொடுத் தாள்கந்தா (முருகா)

## பல்லவி.

ஏன் மயங்குகிறாய்-மனமே
ஏன் மயங்குகிறாய

## சரணங்கள்.

சித்தம் பொன்னம்பலத்தில் திருநடஞ் செய்கின்ற
திருத்தாளையே பணிந்து ஜென்ம மீடேற
பத்திவைராக்கிய முத்திநெறியைச் சொல்லும்
பரம சற்குருவின் பாதம நினையாமல் (ஏன்)

தேவாதி தேவனைத் தெக்ஷணா மூர்த்தியைச்
சின்முத் திரையை-நால்வர்க்குத் திடப்படவருளிய
பாவந் தீர்க்கும்பதி பஞ்சாக்ஷர முன்னி
பத்மா சனமிருந்து பரிவத்தைப் போக்காமல் (ஏன்)

ஆகம வேதபுராணங் கற்றுமென்ன
அவனி மாதர் மக்கள் பொன்மா டிருந்தென்ன
சாக எமன்வந்து தண்டனை செய்யுமுன்
சங்கரனைப் பணிந்தே துதிசெய்யாமல் (ஏன்)

அப்பர் சுந்தரர் மாணிக்கர் பாடலுடனே
அம்மை யுலகு சொல்பத மனுதினமும்
செப்பமுடனே பாடியே துதிசெய்திட
தீரும் உன்பவப் பிணிமாறுங் கன்மம நீங்கும் (ஏன்)

## பல்லவி

வேறுமுகம் பாரேன் வேல்முருகனை யன்றி
வேறு செயல் காணேன்

## சரணங்கள்

நானிதற் கென்செய்வேன் ஞாய மறியாவிட்டால்
தேனீபோல் மடிவதுன் றிருவுளச் சம்மதமோ (வேறு)

உனக்கினி யாருரைப்பார் உண்மை யறியாவிட்டால்
வனத்தில் வாழ்வள்ளி பங்கன் மனத்துயர் நீக்காயோ (வேறு)

நற்றணிகை முருகா என் ஞாய மறியாயோ
செத்து வருவதுன்றன் றிருவுளச் சம்மதமோ (வேறு)

உற்ற துரைத்தேனுன் உண்மை யறிவாயே
பெற்ற பிள்ளை நானெனன் பெற்றி யறியாயோ (வேறு)

மற்றவ ரிங்கிருந்தேன் மயக்கந் தவிர்ப்பாரோ
உற்றவ ருன்னையல்லால் ஒருவர் துணையுண்டோ (வேறு)

எல்லா மறிவாயே இயம்புவ தேனுனக்கு
வல்லா யெனைக்காக்க முத்துவடி வேலெடுத்தாயே (வேறு)

சின்ன வயதிலெனைத் தேடிவந் தாண்டாயே
என்ன குறையெனக்கு எந்தாய் வடிவேலா (வேறு)

செங்கை வடிவேலா நான்செப்புவதே னுனக்கு
தங்க வடிவேலா சாற்றுவ தேனுனக்கு (வேறு)

பொன்னின் வடிவேலா நான் புலம்புஞ் சொற் சம்மதமோ
மின்னே ரிடைப்பாலா வீடுறச் செய்வாயே (வேறு)

பன்னிருகை கொண்டும்வினைப் பற்றைத் தாளாக்கு
உன்னிரு பாதமல்லா லொருவர் துணையு முண்டோ (வேறு)

சூது வாதறியேன் சொல்லுஞ் சொற்களிலே
வாது பண்ணுமலென்னுள் வருவாய் வடிவேலா [வேறு]

என்னைநீ கைவிட்டால் நான் ஏது மறியேனே
உன்னையன்றி வேறே ஒருவருமிங்கில்லை [வேறு]

தணிகையில் வாழ்முருகனே சாத்துஞ் சொற்சம்மதமோ
மணிகை கொடுத்துஞான மணியருள் மால்மருகா [வேறு]

அனியாயஞ் செய்யாதே யார்க்கு மடுக்காது
இனியாகிலு மிறங்காய் எந்தாய் வடிவேலா [வேறு]

ஜென்மம் வருமோ வந்த செயலோநா னறியேனே
கன்மங் கரைத்திடுநீ கதிர்வடி வேல்முருகா [வேறு]

## பல்லவி

ஆருமற்ற பாவியையா எனக் காறுமுகந்-தஞ்ச மையா
நான் ஆருமற்ற பாவி யையா

## சரணங்கள்.

சீருபெற்ற செந்திற்குகாபாரு பெற்ற பிள்ளைமுகம்
ஆருபெற்ற பிள்ளையன்றோ நேரில்நின்று பாராவிட்டால் [ஆரு]

சார்ப்பவர்க ளார்கா ணையா சேர்ப்பவர்க ளுன்னையன்றி
பார்ப்பவர்கள் வேறுமில்லை பன்னிருகை வேல்முருகா [ஆரு]

ஊரிலுள்ளா ரென்னைச்சிரிப்பார் பாரிலென்னையார் மதிப்பார்
வேறுமுகம நானறியே னாறுமுகா வுன்னை யுனறி [ஆரு]

கூர்வடி வேலெடுத்தா னையா குராந்தைமுகம் பார்த்தா னையா
பாரிலென்னைக் கார்த்தானையா பக்தருடனே சேர்த்தா னையா(ஆரு)

அன்னையினும் பக்ஷமுள்ளாய் உன்னையல்லால் ஒருவரில்லை
தன்னைநிக ரொப்பிலாத தாயுமில்லை யுன்னையன்றி (ஆரு)

பின்னையெந்தன் பிழைபொறுத்து பேணுபவ ரெங்குமில்லை
உன்னையல்லா லென்றனக்கு உற்றவர்க ளெங்குமில்லை (ஆரு)

என்கோவே என்னரசே யென்கண்ணுள் மாமணியே
நன்கோவே நானெளியே னுய்ய வரமருள்வாய் (ஆரு)

இங்கோர் செயல்காணேன் என்பெருந்தா யுன்னையன்றி
பங்கோ உனக்கு எந்தன்பாவம் பழிகளெல்லாம் (ஆரு)

பாரிலுன்னை யன்றியில்லை பச்சைமயில் வாகனனே
சேராறுகதி யென்றடியேன் சோம்பித் திரியலாமோ (ஆரு)

தாருகனைக் கொன்ற சூரா ஷண்முகனே யென்குருவே
மாறாத மொழியன்றி மாறுமொழியு முண்டோ (ஆரு)

கூவியழைத் தாண்டுகொண்டே கொடிய பிறப்பறுப்பாய்
தாவுவினைக் கோர்மருந்தாய் தழைத்த வென்னாரமுதே (ஆரு)

வாரியுண்ண வாய்துடித்தேன் வாரிக் கொடுத்தென்னையாள்
தேறித்தேறித் திருவருளை வாரிவாரி யுண்பனே (ஆரு)

ஊரா ரறியார்களோ உன்னுடைய பிள்ளையென்று
ஆரா ரறிந்துமென்ன அன்னையன்றிச் சேய்தனக்கு ஆரு)

பாரோ ரிருந்துமென்ன பாலன் பசிக்கிரங்கார்
ஆராக்கருணை பொங்கும் அருட்டாயே பால்கொடுத்தாள் (

ஜென்மம் எனக்குவாராத் திருமுலைப்பா லீன்றருள்வாய்
கன்மங் கடையாசசுன கழலிணை கண்டபோதே (ஆரு

வன்மம் பிடியாதையா வாடிமயங்குகின்றேன்
தன்ம முனக்குமுண்டு தள்ளாதென்னை முகதாலும் (ஆரு

புல்லருறவு வேண்டேன் பொன்னடிக் காளானேன்
நல்லோ ருறவு வேண்டும் நாயேன் வினை தவிர்த்தாள் (ஆறு)

கல்லா ருறவு வேண்டேன் காசினி வாழ்வு வேண்டேன்
வல்லார்க்கும் வல்லானே வாழ்வளித்தா ளென்குமரா (ஆறு)

கண்ணினொளி போற்கலந்த கருத்தை மறந்துவிட்டு
எண்ணிறந்த கோடிஜென்ம மெடுத்துப் பிறந்தலுத்தேன் ()

உண்ணின் றெனையாட்டு முணர்வை மறந்து விட்டேன்
நண்ணுந் திருத்தணிகை நாதாவுன் பதமருள் (ஆறு)

---

## பல்லவி

மாறு முகமாயிருந்தால்—யாருகதி யென்றனக்கு

## சரணங்கள்

நேருமுக மாயிருந்தால்—ஆறுமன மென்றனக்கு
தேருவகை செந்திற்குகா பாருமுகம் பாருமென்னை (மாறு)

கூறுமுகம் பார்த்து நிற்கேன் குளந்தைவடி வேல்முருகா
பாருமென்னைப் பாருமென்னைப் பச்சைமயில் வாகனனே ()

பாருமென்னைப்பாருமென்னைப் பதைப்பொழியப்பாருமென்னை
வாருமுன்னே வாருமுன்னே வந்தாலுனக்கென்னகுறை (மாறு)

புன்சிரிப்பு முகங்கண்டால் புறைதீர்ந்து வாழ்வே நாளும்
நன்சிரிப்பு நகையுங்கண்டால் நாதாவுன் னடிசேர்வேன (மாறு)

கருணைமுகம் பார்த்தவுடன் கண்கள் களிகூர்ந்து நின்றேன்
வருணவடி வேன்முருகா வாய்திறந்தாற் குற்றமுண்டோ (மாறு)

பன்னிரு கண்ணிருந்தும் பாலன்முகம் பாராதென்ன
என்னிரு கண்மணியே எந்தன்முகம் பார்த்தருள்வாய் (மாறு)

கையில்வடி வேலழகுங் காதிற் குழையழகும்
மெய்யிற் றிருநீறழகும் வீரமுடியழகும் (மாறு)

கண்ணிற் கலந்திருக்குங் கருணைச் சொரூபமதை
உண்ணாவெனக் கினிக்குமுன் திருவாய்ப் புத்தமிர்தம் (மாறு)

கருணையமுதே யுன்கால்பிடித்த நாய்க்குத்
தருணமிது தருணம் சாயுச்ய வீடேற்று (மாறு)

மரணம் வாராமலென்னை மகாயோகநிலை நிற்கத்
தருண மீதறிந்து நீயுந்தாழாமற் காத்தருள்வாய் (மாறு)

முத்துவடி வேலழகு மூரல் திருவழகும்
பத்திநினைத் தெந்தன்மனம் பதைத்துப் பதைத்துருக (மாறு)

ஆறுதிருமுடியு மசைந்தாடப் போரில் வென்றோய்
வேறுவுந்தன் பிள்ளை தனக்காரிருந்து மாவதுண்டோ (மாறு)

நஞ்சமு துண்டாவான் நற்கருணை மாமணியே
பஞ்சப் பொறியடங்கப் பன்னிரு கண்ணாற்பாரும் (மாறு)

பாலன்சிறுவதனப் பன்னிரு கண்ணழகும்
கோல விடையழகுங் குழையும் வயிரழகும் (மாறு)

வீசுங் கரத்தழகும் வெற்றிவடி வேலழகும்
பேசு மொழியழகும் பேரழகும் பொட்டழகும் (மாறு)

மாசுபடாச் சொல்லழகும் மார்பினில நூலழகும்
நாசித் திருவழகும் நற்றிருவாய் முத்தழகும் (மாறு)

காலிற் சிலம்பழகும் கங்கணத்தின் சீரழகும்
மேலிற சகலாத்தழகும் வீரகண்டா மணியழகும் (மாறு)

அரையிலணியழகு மங்கைமோதிர மழகும்
குறமகளை யோர்பாகங் கொள்ளுந திருவழகும் (மாறு)

பர்தத் திருவழகும் பாலன் நடையழகும்
நாதவொலியழகும் நற்கை விரலழகும் (மாறு)

மார்பழகுந் தோளழகும் வள்ளிக் கொடியழகுஞ்
சேருந் தெய்வானைபங்கன் சேவற் கொடியழகும் (மாறு)

கண்ணிற் கலந்திருக்கக் கருணைவடி வனைத்தும்
முன்னை வினையெனக்கேன் மொய்கழற் காளாக்கு (மாறு)

## பல்லவி.

என்றைக்குக் காண்பேனோ—எம்மிறையை
என்றைக்குக் காண்பேனோ

## சரணங்கள்

எடுத்தசரீர மிறக்குமுன்னே யுனைஏகமாய்க் காண்பேனோ
தொடுத்த மனவாசி சுத்தவெளியிலேகிச் சுகித்திடக்காண்பேனோ

தடுத்துப் பழவினையைத் தாவாமற்செய்கின்ற தந்தையுனைக்காண்பேனோ, கொடுத்துத் திருவருளைக் கூடிச்சுகிக்கின்ற கொள்கையைக் காண்பேனோ (என்றை)

சினமறுத்தாசையுஞ் சீராக் கொழித்துமேலத் தெருவீதி காண்பேனோ, மனமற்ற பூரணத் தொட்டிக்குள்ளே நான் மடங்கிடக் காண்பேனோ (என்றை)

சாதன நான்குஞ் சார்ந்துமுடித்து நான் தன்ஞானங் காண்பேனோ, ஞாதனமா மணமேலாந்திருச் சபை நோக்கிடக் காண்பேனோ (என்றை)

மேலாமமிர்த மென்மேனு மிகப்பொங்கிவிளையாடக்காண்பேனோ
காலா மனவாசிக் காலிஞலேகிக் கழலடி காணபேனோ (என்றை)

அகத்தி லப்பசு வைந்து மடங்கிப்பால்சொரிந்திட அறியுமறிவினைக் காண்பேனே, யுகத்திலுங்காணாத உண்மைப பொருளை என்னுள்ளத்துட் காண்பேனே (என்றை)

ஈசன்றிருவடியி லெப்போது நானிருக்க ஏகமாய்க் காண்பேனே, பாசவேரறுத்தென்னைப் பரிவாய்க் கரையிலேற்றும் பதமலர் காண்பேனே (என்றை)

தணிகையில்வாழுந் தயாநிதியேயுனைச் சார்ந்திடக்காண்பேனே பணிவார்க்கிரங்கியினி யின்பவீடழித்திடும் பண்பினைக் காண்பேனே (என்றை)

பாலமான மயிற் பாலத்தின் மீதேறிப் பரவெளி காண்பேனே, சாலவு நன்மனதைச் சாயுச்ய மேற்றிநான் தானாகக் காண்பேனே (என்றை)

மோகக்கபட முனைப்பெல்லாம் விட்டொன் முத்தியைக் காண்பேனே, தாகமனதைத் தகித்துவிட் டேகமாய் சார்ந்திடக் காண்பேனே (என்றை)

ஐபன்றிருவடி யழகினைக்கண்டு மன மமர்ந்திடக் காண்பேனே, மெய்யனென்னை வந்து வேண்டிப்பணிகொண்டு மேல்வீடுறக் காண்பேனே (என்றை)

சாதிசமயச் சழக்கை யெல்லாம்விட்டுத் தன்மையைக் காண்பேனே, பாதிப்பிறை யணியும் பரமன் றிருவடியிற் பதிந்திடக் காண்பேனே (என்றை)

ஜென்மக் கடலைக்கடந்து கரையேறி யுன்றிருவடி காண்பேனே, கன்மக்கடலைக் காலாலுதைத்து வாசிக் கால்கொண்டு காண்பேனே (என்றை)

சித்தரு முத்தருந் தேவர் நின்றேத்துமுன் றிருச்சபை காண்பேனே, உற்றமனப்பாவி யோடாம னிறங்கே யொடுங்கிடக் காண்பேனே (என்றை)

பூரண வாழ்விற் பொருந்திநா னுய்ந்தன் பொன்னடி காண்பேனோ, ஆரணா வாகம வேதங்கள் காணா அடிமுடி காண்பேனோ (என்றை)

ஆறுமுகத் தண்ணலடி முடிகண்டுநா னணைந்திடக் காண்பேனோ சாருமவர்க் கருள் கூறுங் கதிர்வேலன் றன்னடி காண்பேனோ ()

எந்தன் மனத்தெண்ணமெலா நிறைவேற இப்போது காண்பேனோ, சொந்தமாயென்னையாண்டு சுகவாழ்வளித்ததிற் சுகித்திடக் காண்பேனோ (என்றை)

பன்னிரு கரத்தண்ணால் பாதத்தைக் கண்டுள்ளே பதித்திடக் காண்பேனோ, என்னிரு கண்மணி யேக வெளிசென்று எங்குமாய்க காண்பேனோ (என்றை)

மாண்டு வருமோர் வழிகளுந் தூர்ந்து மறைந்திடக் காண்பேனோ, தாண்டியெனைப் படைக்குஞ் சுத்தப்பிரமன் கைசோர்ந்திடக் காண்பேனோ (என்றை)

தாய்வயிற்றுக் கருவற்று எனைப்பெறுந் தன்மையைக் காண்பேனோ, பாயுமனப்புலி பாயாமனின்றிடும் பான்மையைக் காண்பேனோ (என்றை)

அலையுமனத்தை யலையாமற் காக்கு மறிவினைக் காண்பேனோ அலையுமனதை யகத்துளடக்கிடி லென்றைக்குக் காண்பேனோ ()

## பல்லவி

அசையாதே நெஞ்சே — அசையாதே
அருளாணி பிடித்துக்கொள் — அசையாதே

## சரணங்கள்.

கோட்டை கொத்தளக் கொடிகட்டிக் கொண்டாலும் — கொடி
யெமன் விடுவானோ

ஓட்டையுருவ முடையுமுன் ஞேடியரன் உபய
பாதத்தி லொன்றிக் கொளவாயே [அசை]

உலகெலா மோர் நொடியி லோடிச்சுற்றுதே யுத்தமன்
பதத்தில் செத்துக்கிடநீ
பல யோசனை பண்ணுதே பாழ்நெஞ்சே பாதிமபிறை
யணியும பரமன பதத்திலொன்று [அசை]

சொன்னது கேளாமற் சுற்றுகின்றாய் நீயே
துடிடபெலா நடவாது சுகவாழ்விற் சென்றேன்
என்ன அலைமிது எனைவீ ணலைக்கிறாய் எழுகோ
டி பிறப்புக்கும ஏகுதல் தகுமோ [அசை]

செய்கின்ற வேலையெல்லாஞ் சூது நான் சொலலுமிட
மெல்லாம வாது
பொய்வழி போவதிங்கன்றி ஆமனம் பொருந்திக்
குகன்பதத்தை யோது [அசை]

மனமே நான் சொன்னபடி நில்லு மயங்குதல்
சீ சீ யதை வெல்லு
தினமும் நம் செந்திற்குகன் சொல்லு நஞ்சிந்
தையிலேயாமற் புல்லு [அசை]

உன்னாலே கெட்டவர் கோடான் கோடி உன்னை
விட்டேகினோர் கோடியி லொன்று
தானே தன் தலையில் மண் தானள்ளிக் கொட்டுகிறாய் [அசை]

கள்ளனைக் கண்டுகொணடேன் கருவில் வரச்செய்யும்
பள்ளப் படுகுழியிற் பாழுமிருட் டறையுள்
தள்ள நினையாதே ஷண்முகனருள் புகுநதேன் [அசை]

கொள்ளைப் பிறப்பறுப்பான் குருநாதன் செந்திற்குகன்
தள்ளிவிட மாட்டான் நம்மைத தாளடியிற் சேர்த்திடுவான்

கள்ளமெலாம் விட்டுவிடு கனகசபை புகுவாய்
மெள்ளமெள்ள விடுறுவாய் வீணைகெட் டலையாதே [அசை]

தாவித்தாவி யலைந்தாயே சாகரத்தி லுழன்றாயே
பாவி பாவி யென்றுன்னைப் பல்லோர்கள் பழிக்கிறார் [அசை]

ஆவியை நீ போக்காம லலைகிறாய் வீணே
பாவியென்ற பேரைமாற்றிப் பரவெளிக்குள் நீ புகுவாய் []

பலனில்லா வில்வாழ்விற் பாய்ந்தென்ன பலன் கண்டாய்
மல மூன்றுந் தள்ளிஞான வாரிதி மூழ்கு நெஞ்சே [அசை]

உன்னாலேநான் பட்டதுன்பமுறைத்திடி லுலகெலா நடுங்கிடுமே,
உன்னாலே கெட்டவர் கோடானகோடி உன் மூர்க்க மனதை
விடு [அசை]

அத்தியுரித்த அரனார் திருமகன் அறுமுகன் றாள்புகுந்தேன்
பதறியறியாத பாவிநெஞ்சே யென் பக்கத்தி லில்லாதே []

ஓடியொழித்துக்கொள் ளுயிரோடும் போய்ப்பிழை
உனையொன்றி வரமாட்டேன் தேடி யெனைப் பிடித்தால்
ஜெயித்து விடுவான் வள்ளிதெய்வானை பங்கனுண்டு [அசை]

கொஞ்சமென் றென்னை யெண்ணியுன்றன் குதிப்பெல்லாங்
காட்டாதே—வஞ்சநமனை வென்ற மகாதேவர்தாள் புகுந்தேன்
மயங்கே னொருக்காலும் [அசை]

மதியேன் மதியையுனுன்றன் வலியிங்கே நடவாது
விதியே தெனையிழுக்க வேல்முருகன் றாளடைந்தேன் [அசை]

சொன்னபடி கேட்கில் சுகவாழ்வி னியிருப்பாய்
வர்ணமயில் வாகனன்றன் மலரடிக்கா ளானேன் [அசை]

தேனுந்தினைமாவுந் தின்று மணப்புரி-நங்-கோனின்
திருவடி யிற்கூடி மகிழ்ந்தனன் யான் [அசை]

இந்தமாய வுலகத்திற் செல்லாதே கந்தன் கடம்பன்
கதிர்வேல் முருகன் கழலிணை மறவாதே [ஆசை]

சொந்தப்பிள்ளை யென்ப தறியாயோ எனைத்துன்
பத்திலாழ்த்த முறையேதோ
கந்தன் கழலடியிற் கலந்து கொண்டேன் காட்டாதே
யுன்சமர்த்தை நீட்டாதே நடவாது [ஆசை]

மற்றவர் போலென்னை மயக்காதே வள்ளல் சரண
டைந்தேன் மருட்டாதே
உற்றதினில்லாம லோடுகிறாய் பேய்மனமே
ஓடித்திரிவதுவு மோமோ கோ பாழவமே [ஆசை]

உன்செய லெல்லா முணர்ந்தேனே உண்மைபாணின்றென்
னோடிருந் தாக்கால்
பின்னைத்துணை நான்வேண்டேனே என்னைப் பொருள்
சேர்க்கவு முன்னுறவே [ஆசை]

## பல்லவி

குதியாதே நெஞ்சே குதியாதே—மாயக்கூட்டை
நிலையென்று—குதியாதே

## சரணங்கள்.

நாயிற் கடைச்சென்மம் எடுத்துக் கோடி கோடி
நவில் முடியாத் துன்பமுற்றது கோடி கோடி
பேயிற் கடைச்சென்மம் பிறந்து கோடி கோடி
பிறந்து பிறந்தலுத்தேன் பேய்மனதே உன்றாலே [குதி]

என்னைக் கெடுத்தாலுனக் கேதுபலன் பாவி
என்னைக் கெடுத்துநீயும் பின்னைக் கெட்டலைந்தாயே
தன்னையறியாமற் றுந்தாமே யாகாமற்
பின்னைப் பழிப்பெல்லாம் பேணி நீ யடைகின்றாய் [குதி]

னாத்தவத் தோரையு மேங்கப் புகுகின்றாய்
என்முன்னே நில்லாதே எழுபிறப்பிலும் பாவி
பத்தர் குழாங்களுட் பதரப் புகுகின்றாய்
பாவி நீ யானாலும் படுபாவி நீ நீயே [குதியாதே]

உனக்கிந்த அதிகாரங் கொடுத்தவர் யாரோ
ஓடிப் பிழைத்துக்கொள் ஞுத்தமன் பதமுற்றேன்
எனக் கிதுவரை நீயு மிடர்செய்த தளவிலே
என்னிடத் துறவில்லை முன்னில்லாதே போ போ [குதி]

தனக்குவமை யில்லான்றாள் சேர நினைக்கின்றேன்
தன் னரசாட்சி தலைமையை விட்டேகு
வனத்தினில் வள்ளிபங்கன் வாவென அழைக்கின்றான்
வாரா வருளிற் சென்றேன் மயங்கேன்பின் வரமாட்டேன் [குதி]

பத்தும் புகுத வைத்தாய் நீயே பாரிற் பிறக்க வைத்தாய் நீயே
செத்தும் பிறக்கவைத்தாய் நீயே சென்ம மெடுத்த லுத்தேன் []
தோண்டியுங் கயறுமானேம் நாமே-நான் சொன்னபடி
நின்றுவிடு தாமே—வேண்டியு முனைத் துதிப்பேன்
வேலன் சரண புகவா வினை யொழித்திடுவது
மெய் மெய் மெய் மெய்யே [குதியா]

அத்தன் சரணமடைந்தேன் ஆயே
அவ்விடத்தில் வரமாட்டாய் நீயே
பித்தனென் றெண்ணாதே பேயே-உன்
பிறப்பிடத்தை யறிந்து பேரா நிலையி னின்றே [குதி]

கொத்தைப் பருத்தி யானாய் நீயே
கோதிலாத் தேனானேன் பேயே
சத்த சத்தென் றறியாய் நீயே
தலைகீழும் புரண்டு நீதான் கெட்டாய் பேயே [குதியா]

முருகன் சரண் புகுந்தேன் நானே
உன் மூர்க்கமெல்லாம் நடவாது தானே

வருவழியைக் கண்டு கொண்டேன் நானே—பொல்லா
வஞ்சகரிடம் போய்ச் சேரு கொஞ்சமேனு மிடமில்லை [குறி]

## பல்லவி

ஓடாதே மனமே ஓடாதே நீ
ஒன்றையு முன்னிலைகொண் டோடாதே

## சரணங்கள்.

நிஷ்டையில் நில்லாமல் நீ யிழந்தாய் பெரு வாழ்வை
கட்டையிற் கிடத்துமுன்னே கழுகு சென்றாய் சூழுமுன்னே
சட்டை போன்ற இவ்வுடலைச் சதமென்று எண்ணாதே
வெட்டவெளி தனிலுற்று மேவி யதீதமாவாய் [ஓடாதே]

புகைபுகா வழியினிற் போய் போய் நீ மீள்கின்றாய்
பகைபாவ மென்றறியாய் பாலர் பெண்டிர் மெய்மை யென்றாய்
நகைக்கின்றா ருன்னை மேலோர் நாணமில்லை யுந்தனுக்கு
பகைக்கின்றார் பத்தர் சித்தர் பாவி நீயும் பழிக்கஞ்சாய் [ஓடா]

எல்லாநீ யேகமும்நீ ஏகபர வஸ்துவும் நீ
வல்லாநீ வையமும் நீ மற்றுந் தொழில்களுநீ
நல்லாநீ நன்மையுநீ நல்ல மனதோ டிருந்தால்
வல்லா ருனைக்கூடிப் பெரு வாழ்வடைவார் நிச்சயமே [ஓடா]

காலன் வெட்டுங் கட்டையிது கழுகு செந்நாய்க் கோர்விருந்து
சாலக் கபாடத் தடைதீர்ப்பா நம் பெருமான்
ஓலக்க மண்டபத்தி லொன்றிப் பிழைப்பாய் நீயும்
மால மயக்க மாதர் சாலமென் றறியாயோ [ஓடா]

சொற்பனத்திற் கண்ட காக்ஷி சொந்தமாமோ வுந்தனுக்கு
வரப் புகுத்தி யென்னை நீயும் வாதனைக்குள் ளிழுக்கிறாய்
நற்புத்தி யென்று வரும் நாணமில்லா மடநெஞ்சே
சொற் கிளிப்பிள்ளை யேனும் சொன்னபடி கேட்பதுண்டு [ஓடா]

## பல்லவி.

உற்ற வடிவேலா எனக் குற்றவர் காணேனென்

## சரணங்கள்

வெற்றி கொள்ளு வீர வென்வினை யுனக்குப் பெரிதா
பக்தி யறியா நாயேன் பவமெல்லா மறுத்தாள்வாய்
கத்திக் கதறி யுந்தன் கால் பிடிததே நிற்கு மென்னை
முற்றுன் றிருவடியில் முக்காலுஞ் சேர்த்தாள்வாய் [உற்ற]

உலகோ ருனைச் சிரிப்பார் உற்ற துரையாவிடில்
பலவித யோசனைகள் பண்ணுவ துனக்குண்டோ
விலக முடியாதென்னை விட்டிடில் நான் விடேன்
சலன முனக் குண்டோ தள்ளுதல் புண்ணியமோ [உற்ற]

சாமானிய மனிதருஞ் சார்ந்தவர் தமை விடார்
ஏமாந் திருந்த தடிமை யிறப்பதுன் சம்மதமோ
ஆமா உனககிந்த அநியாயந் தானுமா
மாமாயஞ் செய்யாதே மறுத்தென்னைத் தள்ளாதே [உற்ற]

சொற்பனத் தாகிலுமுன் சொரூபத்தைக் காணேனே
வறபுறுத் தென்னையாளும் வள்ளி மணவாளா
கெற்பத் தெனைவளர்த்த கிருபைதனை மறந்தேன்
நற்பதவி யுன் கழலே நாதா வடிவேலா [உற்ற]

உற்றுநினைக்கிலென் னுள்ளங் கொதிக்குதையே
நத்துஞ் சவலையானேன் நற்றாய் வரக்காணேன்
பெற்று விடுவாளோ பெற்ற தாய் பிள்ளைதனைச்
சற்றுந் தெரியாயோ தாங்கிக்கொள் வேல் முருகா [உற்ற]

நீயிருந்தும் நான் மயங்கல் நீதியதோ வேல்முருகா
நானிருந்து முன்னைக்காணு ஞாயமேதோ செந்திற்குகா
நாதியில்லாப் பிள்ளையாகி நானிருந்து வாடுகின்றேன்
போதியென்று லெங்கே நான் போய்ப் பிழைப்பேன் செந்திற்
குகா [உற்ற]

நீ வெறுத்தால் நீதியோ நித்தியானந்தநா
நான் வெறுத்தேன் சாதி குலம் நம்பியுன்றன் றுழடைந்தேன் ()

தநதை யினித் தள்ளிவிட்டால் சாருங் கதிவே றிங்கிலே
பந்தமுநீ சொநதமுநீ பார்த்திரங்கு வேல்முருகா [உற்ற]

இச்சை யெல்லா முன்கழற்கே எங்கவிடல் சம்மதமா
பக்ஷமில்லா தெனைவெறுக்கில் பாவமல்லோ வுநதனக்கு [உற்ற]

உன்னை யல்லால் வேறறியேன் உற்றதுணை யெந்தனக்கு
பின்னை யெனைத தள்ளிவிடல பிழை யெல்லா முந்தனக்கே []

நம்பி நின்றே னுன்பதத்தை நாதா வெனைக் காப்பாயென்று
வெயபியழப் பார்த்திருந்தாய் வேல்முருகா நீதியிதோ [உற்ற]

## பல்லவி

ஞாய நடிவிதுவோ நற்றணிகை வேல்முருகா

## சரணங்கள்

உண்டுமென நம்பி நின்றே னுன்னடியே தஞ்சமென்றேன்
பண்டுமின்று மென்னைக் காத்தாள் பன்னிருகை வேல்முருகா []

தள்ளிவிட்டா லுய்யவேறே தஞ்சமொன்றுங் காணேனையா
வள்ளிக்குகந்த வையா வஞசனை நீ செய்யாதே [ஞாய]

புள்ளிமயி லூருமையா பொன்னடியே வந்தடைந்தேன்
தள்ளித்தள்ளி யென்னைவிடில் சத்தியமா யுயிர் விடுவேன் [ஞா]

மக்கள் சுற்றத்தாசை விட்டேன் வந்தடைந்தே னுன்பதத்தில்
ஒக்க எனைத் தள்ளிவிட்டா லுயிர்விடுவே னுன்னிடத்தே[ஞாய]

தள்ளுதல் நீ புண்ணியமா தங்க வடிவேல் முருகா
அள்ளிபுண்ணவநதடைந்தேன் அறுமுகத்தோய் செந்திற்குகா()

ஈரல் துடிக்குதையா யென் சொல்லினுந் தேரவில்லை
தேருவகை செப்பி யென்னைத் தேற்றிடுதல் புண்ணியமே(ஞாய)

கருந்துள்ளுனைக் காணேனையா
கதிர்வடி வேலெடுத்த வையா
திருத்தி யென்னைக் காருமையா
திகதறியேன் செந்திலையா [ஞாயமே]

ஆறுதில்லை யென்மனது ஆற்றிடினுந் தேருதில்லை
சேரவில்லை யுன் பதத்திற் சேர்த்திடுவாய் செந்திற்குகா (ஞாய)
பொறுத்து முடியுதில்லைப் புத்தி மிகத் தேறுதில்லை
வருத்தி யமுதளிப்பாய் வள்ளி மணவாளா யிப்போ [ஞாய]

## பல்லவி

அன்னங் கொடுத்தருள்வா யென்னருமை பதிதீர
அன்னங் கொடுத்தருள்வாய்

## சரணங்கள்

கருங் கல்லோ உன் மனந்தான் கவலை தீர்த் தென்னையாள்வாய்
தருஞ் சமயமிதுவே தாமதியாதே வேல்முருகா [அன்ன]

இரக்க முனக் கில்லையோ என்மட்டும் மனங் கல்லோ
பறக்க விழிக்கேனே நீ பார்த்து மிரங்கலையே [அன்ன]

இரங்கா மனதுனக்கு ஏன்மட்டும் வந்த தென்றோ
அறக்கொடுமைப் பாவி நான் அருளருமை யறியாத [அன்ன]

அருண கிரியார்க்கு அருள் அருளிய வரசே நீ
தருணமிது தருணம் உன்தா ளடிக்கீழ்ச் சேர்க்க [அன்ன]

போதுநான் பட்டசள மிந்தப்பொய் மனப் பாவியாலே
ஏது கதி யெனக்கு எந்தா யுந்தனையன்றி அன்ன

பாதுகாத் தருள்வது நீ பன்னுவதே னுனக்கு
இது மனப்பாவி செய்த கொடுமை மிக [அன்ன]

உள்ளிருந்து மாட்டுமுனை மனமுற்று நினைக்க வோடா
தள்ளுந் தள்ளையா நான் செய்த தப்புப் பிழைகளெல்லாம் [அ]

மத்திடுந் தயிரானேன் மனமொத்த நொந்து விட்டேன்
சற்றுந் தெரியே னன் சாமி நீ யாளாவிட்டால் [அன்ன]

அவசரம் அவசரமே அடியேன் றனைக்காக்க
பவ சாகரம்விட்டுன்பாதம் புணை கொடுத்தாள் [அன்ன]

போன ஜென்மத்திற் புண்ணியஞ் செய்யாதிருந்தேன்
கானக் குறத்தி பங்கா உன் கைவிட்டகலேனே [அன்ன]

அரைக்கணமும் போக்கே னுன்னை யறியு மறிவை யல்லால்
மறப்பு நினைப்பும் போக்கு உன் மலரடி ததாள் புகுவேன் [அன்]

எத்தனை சொன்னலு முன்சித்த மிரங்கலையோ
அத்தனை பாவமுன் னடிமையேன் செய்திட்டேனோ [அன்ன]

இனிமேல் விடுவேனோ மனமேரு மிடமெல்லாம் .
அநியாய மென்றறிந்தேன் அவன்செய் தொழிலெல்லாம் [அன்]

பழிகார னெந்தனக்குப் பாவி மனம் நீயே யே[அன்]
விழித்துக் கண் மூடுமுன்னே வேலா வென்னை வீடேறச் செய்வா

ஆர்க்குமினி யஞ்சேன் நான் ஆறுமுகன் றுள் புகுந்தேன்
பார்க்கு ளொருவருண்டோ உன் பாத மலரை யல்லால் [அன்]

மென்மேலும் பொங்குதையா வெப்பங் கொதிக்குதையா
என்னலே யென் செய்வேன் அந்த யிடர் தவிர்த் தாளுதற்கு[]

உன்னை யெண்ணிக் களித்திருந்தேன் என்னை யேங்கவிட் டேகா [தே
பின்னைப் பிழை பொறுண்டா லென்னைப் பேணுவார் காணேனே []

பக்த ரக்ஷகரென்று உன்னைப் பல்லோருஞ் சொல்வாரே
சித்த மிரங்கா தேனோ என் தீவினைப் பயன்தானோ [அன்ன]

## பல்லவி

ஆரனருளிய சிறு பாலா என்னை யாண்ட குருபரனே

## சரணங்கள்

எல்லாம் பொய்யென் றறிந்தேன் இனி யேதும் வழி காணேன்
வல்லா நீ வந்தென்னை அருள்வழி யுறச்செய்வாயே [அர]

தேவரைக் காத்தாயே அவர் திடுகெல்லாந் தீர்த்தாயே
மூவர்க்கு முதல்வோனே என் முன் வந் தருள்வாயே [அர]

என் மனக்கவலை நீக்கும் ஏழை பங்கா நாளும்
வன்மனதோ உனக்கு யென் முன்வர மயில் வேலிலையோ [அர]

தள்ளி விடிலும் நான் சாரேன் பிறரிடத்தே
கொள்ளி மனத்தின் கொதிப படக்கும் வல்லோனே [அர]

என்னை வருத்தாதே இது உனக்காகாதே
தன்னை யடைந்தவரைத தள்ளுதல் பாவமல்லோ [அர]

ஏற்றுங் கழுவில் நான் இருந்த பிணமானேன்
பாத்திரங்காதிருந்தால் பாவம பிடிக்குமையா [அர]

எல்லா மறிவாயே யென்னுள்ள மறியாயோ
வல்லாய் நீ யெல்லார்க்கும் என் வணமை யறியாயோ [அர]

அறியா திருந்ததுவு மென்னெடிய வினைப்பயனே
நெறியா இது உனக்கு நேசித்தோர் தன்னைத் தள்ளல் [அர]

ஆரிடம் போயுரைப்பேன் என்னகம் புறம் நீதானே
சேரிடம் வேறறியேன் உன் திருத்தாளைத் தஞ்சமென்றேன் [அ]

மனது சலித்துதையா வாயும் வலித்துதையா
தினமுங் கழிந்ததையா இனிச் செல்நாளும் வந்ததுவே [அர]

தாமதஞ் செய்யாதே சரீரம் விழுந்துவிடும்
மாமிசக் கூடிது தானே மாண்டாக்கால் வாராதே [அரன]

அவசர மவசரமே உன் அடியிணைக் காளாக
எவரென்னைக் காத்திடுவார் இத் தருணத்தில் வந்து [அரன]

மேல்மூச்சு வாங்கும்போது விழுந்திடு மித் தேகம்
கால்கொடுத் தென்னையாளுங் கருணா கர மூர்த்தி [அரன]

## பல்லவி

இப்போ தாகிலு மடைவாய் மனமே
ஈச னிணை யடியை

## சரணங்கள்

இப்போதே யெப்போதோ இமைத்து விழிக்கு முன்னோ
அப்போ தன்னுயி ரேகு மத்தை நீ யறியாயோ [இப்போ]

எப்போது மீசன்பத மேத்தித் துதிப்பாய் நீயே
இப்போ தாகிலும் லோக விச்சை மயக்கம் விட்டே. [இப்]

ஆரு துணை யுந்தனக்கு ஆவிபோனால் மூடநெஞ்சே
சேரு சேரு திருத்தாளை சிச்சி யிதென்ன புத்தி [இப்போ]

அல்லும் பகலு மசைந்து கொண்டிருக்கிறாய்
நில்லு நில்லு நீ மனமே நின்செயல் தனைவிட்டே [இப்போ]

மனைவாழ்வை நம்பிமிக மதிகெட்ட மடநெஞ்சே
தினைப்போதும் நில்லா திருந்தத் தேக மெமன் காடுபோவான் [ ]

அறுபது நாழிகையும் அரஹரா வென்றோது
திருமாலும வேதன்காணுத் திருத்தாள் சென்றடைவாய் நீ [ ]

## பல்லவி

சடாக்ஷரப் பொருளே என்னைச்
சார்ந்த வருட்டாயே சரணஞ் சரண மையனே

## சரணங்கள்.

சகலருங் கைவிட்டார் தஞ்சமொருவர் காணேன்
சாமி நீ கைவிடாதே
சார்ந்து நிற்கின்றே னுனைத் தள்ளி லென்னுயிர்
வாளேன்-சரவண பவகுகனே [சடாக்ஷரப்]

உற்றாருங் கைவிட்டார் உடலமும் விட்டோடும்
ஒருவர் துணை யிங்கில்லை
மற்றவாரார் காப்பார் மலரடித்தாள் தஞ்சம்
வந்தெனைக் காரு மையே [சடாக்ஷரப்]

உண்டென்றே னிவ்வுடலை ஓர்மையில்லா நெஞ்சத்தால்
உன்னையறியா திருந்தேன்
பண்டென்றே நீ யுணர்த்த பரமார்த்த தெரிசனத்தை
கண்டுகளிததுக் கருத்துள் ளுணர்ந்தேனே [சடாக்ஷரப்]

இன்னந் தயவில்லையா என்மீதில் ஏனின்னம்
வாதையா ஏழை யுமதடிமை
பின்னமா யெனையெண்ணில் பெரும்பாவம்
பேணுதல் புண்ணியமே [சடாக்ஷரப்]

அன்னநடை வள்ளிபங்கா யார்பெற்ற பிள்ளையென்றோ
ஆதரியாது விட்டால்—பின்னை யொருவரில்லைப்
பேரருள் தஞ்சமென்றேன் பேறுபெற்ற செந்திற்குகா [சடா]

தேடிவந் தாண்டவையா என் செல்வத் திரவியமே
ஓடிவந் தென்முன்னே எனக் குற்ற துரைப்பாயே
பாடித் தவித்தேனையா என் பக்கம் வருவாயே
நாடிவருவா யென் னற்றணிகை வேல் முருகா [சடா]

சூது நினையாதே எனைச் சொந்தமா யாண்டவையா
வாது புரியுமனம் என் வசம் நிற்கவே யருள்வாய்
ஏதேது தாமசமோ என்முன்வரத் தாள்த்தாய்
ஈதுனக்கு பெரிதோ எல்லாஞ்செய் வல்லசித்தாய் [சடா]

சிறுபிள்ளை யென்றுரைத்த அரக்கன் சேனை தளமாய்த்தோய்
பர்வதம் போலச்சூரர் பல்லோரையுங் கொன்றாய்
மருமஞ்செய் சமணர்களை வாதிலோர் நொடியில் வென்றாய்
கருமவினை தவிர்த்துன் கழலிணைக்கா ளாக்குமையா [சடா]

என்னப்ப னிருக்கா னென்று யாரையும் நான்மதியேன்
தன்னொப்பிலா நீ யென்றனையு மறவாதே
வன்னப் பணித்தமுலை வள்ளிபங்கா உன் பிள்ளைநான்
பன்னுவதே னுனக்கு என்பாவ மறியாயோ [சடாக்ஷரப்]

## பல்லவி.

எப்போ தனக்கு நேரம்—ஈச னிணையடி தெரிசிக்க
எப்போ துனக்கு நேரம்

## சரணங்கள்

இங்கு மங்குமா யலைந்தால் ஏதுபலன் பெறுவாய்
தகைவேறு இடமில்லை ஷண்முகன் றன் றாள்புகுவாய் (எப்போ)

எப்போது மிருப்போமென் றெண்ணாதே பாழ்நெஞ்சே
அப்போதைக்கப்போ தருளறியு மறிவையுன்னு (எப்போ)

செப்பமுடனே நீயும் ஜெகவாழ்வைப் பொய்யென்றெண்ணு ()

## பல்லவி

எத்தனை நாட்செல்லுமோ நான்
யோக வெளியிற் செல்ல

## சரணங்கள்

சாமிநான் வேறிடம்போகேன் உன்னைச்சார நினைத்
திங்கே வந்தேன்
காமியாகிலு முனைக்கலந்து கொள்வேனோ கருணைக்
கடலே யெனைக் காத்தருள் புரிய (எத்தனை)

உயிரிலுங் கலந்தேன் உடலிலுங் கலந்தேன்
உள்ளத்திலுங் கலந்தேன்
அறிவிலுங் கலந்தேன் அகத்திலுங் கலந்தேன்
அதீத மதிற் கலக்க (எத்தனை)

பின்னு முன்னு மெனை விலக்க முடியாப்
பேரருளிற் கலந்தேன்
மன்னு நற்றேன் பால்போலெனை
மருவி மாசற வெளிதனிற் கலக்க (எத்தனை)

என்னைக் காணேன் உண்மைய மானேன்
எந்தவிதம் பிரிவாய்
தன்குணம் விட்டே னுன்குண மாகித்
தனித்துத் தானு யிருக்க (எத்தனை)

நீ யெங்கிருந்தாய் நினைப்பெங் கிருந்தது
நேர்நின் றுருவிபோர் நிலையாக நிற்கில்
சியாம் வெளியினடைச் சென்றுசென றேடித்
தேசுரு வெளிக்குள்ளே சேர்ந்து கலந்திருக்க (எத்தனை)

தாவித் தாவியோடிப் பார்த்தேன்
தன்னையல்லால் வேறு காணேன்
பாவி மனத்தையுங் காணேன்
பரமாகித் தானிருக்க (எத்தனை)

அண்ட சராசரமெலா மன்றியுனை வேறிலை
பிண்டமுதற் ஜீவர்களும் பின்னமில்லா தருள்சேர (எத்தனை)
எங்கு நிறைவாயிருந்தா யென்னைவிட் டெங்கே பிரிந்தாய்
தங்கு மிடமுந் தலமுந் தானே தானுயிருக்க (எத்தனை)

## பல்லவி

சுத்த வொளியினைச் சுட்டறப் பார்க்கில் நீ
சும்மா விருப்பாயே மனமே
சும்மா விருப்பாயே

## சரணங்கள்

காடுமேடுஞ் சுற்றிடினுங் காணே னுன்றன் றிருவடியை
ஊடுருவி யுட்கலந்தா லுன்னையல்லாற் பின்னைக காணேன் (சுத்த)

விண்ணைமூடி வெளியிற் சென்றால் விகற்பமனந் தாமடங்கும்
கண்மணியைக் கலந்துநின்றால் காணுமே பரவெளிதாமே (சுத்த)

பார்த்த உன்னைப் பார்த்தறிந்தாற் பாவம் பழியெனக்குண்டோ
சேர்த்தறிவைத் தெளிந்துபார்க்கிற் செய்கையும நீசெய்பவனீ ()

நீ நினைத்தால் நானினைப்பேன் நீ மறந்தால் நான் மறப்பேன்
சயுஞ சீயு மேகமானால் நீயும் நானுந் தூரமாமோ (சுத்த)

சூக்ஷாதி சூக்ஷமல்ல தூரமல்லக் காதமல்ல
காக்ஷியாரும் பால் நெய்போலக் கலந்து பிரிவின்றி நின்றே ()

என்னை நீ யேன் மறந்தாய் எத்தனையோ கோடி காலம்
தன்னை யறியா மனத்தினை றன்குழாத்தி னலலவோ (சுத்த)

உப்புமப்பும் போற்கலந்தேன் உன்னை யல்லா லென்னைக்காணேன்
செப்பும் பந்து மொன்றதானால் செய்தவறூர் செய்கையேது ()

தேனையுண்ட வண்டுபோலத் தியங்கி நின்றே னுள்ளருளில்
தானே தானே யேகமாகிச் சாரும் பரவெளியாச்சு (சுத்த)

உன்னியு முன்னுமனுன்னை ஓரெழுத்துக் குள்ளடக்கி
மன்னிமன்னிப் பேரருளில் வாய்மடுத்துத் தியங்கிநின்றே (சுத்த)

உற்றுணர்ந்து பார்க்கும்போது உன்னையலா லென்னைக்காணேன்
சற்றே உனைமறந்துவிட்டால் சகல தோற்றமும் விரிவே (சுத்த)

போகமும் நீ போக்கியம் நீ போத வதீதமு நீ
ஏகமயமாய் நிறைந்தா லென்செய லுன்செயலாமே (சுத்த)

## பல்லவி

கோபி ஞன் வரலாமோ—கோபுர
தெரிசனந் தரலாமோ

## அனுபல்லவி

கோயினன் வரலாமோ—கொடுவினை யறலாமோ
நாவிற் பலநாளும்—நாமம நவில லாமோ (கோயினன்)

## சரணங்கள்

சிங்கெனு மோர்மொழி மந்திரத்தாலே
சிந்தை கரிநதது தீபபடலாலே
அங்கெனு மகாரா மதீதமதாக
ஆனந்தப் பெருவெள்ளத் தாடினன் தானாக (கோயினன்)

சாதி சமயச் சழக்கை யெல்லாம் விட்டேன்
சாமி நான் சந்நிதி வந்துனை நட்டேன்
பேதை மன மடங்காமலே கெட்டேன்
பின்னது அடங்கினு லல்லது கிட்டேன் (கோயினன்)

வீதியிலே மேலவீதியிலே பரிவேடிக்கை
பார்த்துக் கொண் டிருந்தேன்
ஆதியில் போன மனந் திரும்ப
அந்த நிலையை மறந்து விட்டேன் (கோயினன்)

நிலையைப் பிரியாம லோர் நிலையாக்க
நிச்சய மருள்வாய் பவத்தினைப் போக்க
உலகம்மை பரவிடுஞ் சுகவழி தேக்க
வழி சென்றிடுமோ வென்றனைக் காக்க (கோயினன்)

## பல்லவி

வந்தே யருள் செய்தான்—எனக்கு முன்
வந்தே யருள் செய்தான்

## சரணங்கள்.

காகா கிணைநாதா கந்தயன் சுந்தரனே
தேவர் பணிநீதன் தேசம் புகழ் பாலன் (வந்தே)

வீரன் ஜெயவீரன் எமன் சீறும் வினைதீர
பார்முதற் றோற்றமெல்லாம் படற்கானல் சலமென்ன (வந்தே)

எல்லா மறிவித்தான் நீ யில்லா தல்லவென்றான்
பல்லாயிரங்கோடி அண்டம் உற்றுப்பார்க்கில் பரவெளியென்
[றான் (வந்தே)

போருக்கெமகாலன் இப்பாருக் கனுகூலன்
தேறுநீ யாரென்றான் ஜெகமெல்லாம் பொய் யென்றான் (வந்தே)

மனதுட் கழங்கத்தை மாற்றிவிட்டான் குகன்
எனது செயலையெல்லாம் எடுத்து விழுங்கிவிட்டான் (வந்தே)

எல்லாம் நீ யென்றறியும் இயல்பு மெனக்களித்தான்
வல்லான் பரமகுரு வடிவே லெடுத்தவையன் (வந்தே)

முத்தன் பரமகுரு முக்கண னருள்பாலன்
அத்த னறுமுகவன் அன்பர்க் கருள்சீலன் (வந்தே)

சித்தன் லோகபிரான் என் சிந்தை தெளிந்த வையன்
வித்தில்லாமலே யாதும் விளைவிப்பா னெம்பெருமான் (வந்தே)

உன்னுடைய சுற்றமுடன் உலகமும் பொய்யென்றான்
தன்னையறியு மறிவுதானே தானென் றுரைத்தான் (வந்தே)

## பல்லவி

மயக்க முனக்கேன்—மனமே-குகனிருக்க
மயக்க முனக்கேன்

## அனுபல்லவி

மானே குறமகளை மருவுங் குருபரனே
வானோர் புகழுங்கோனை வந்து வணங்காமல் (மயக்க)

## சரணங்கள்

அருவில் வளர்த்தவையன் உருவில் வளர்க்கானோ
தெருவில் விடுவானோ பருவஞ் செய்விப்பானோ (மயக்க)

உன்னிச் சடாக்ஷரத்தை மன்னித் திருவருளால்
சென்னியில துவாதசாந்தம் உன்னற் கரியவெளி (மயக்க)

உன்குறை யார்க்குரைப்பேன் ஒன்றும் முன்பின் னறியாய்
தன்குறை நீக்கவே ஷண்முகன் றானிருக்க (மயக்க)

இச்சை வழிபுகுந்து எங்கெங்கு மலைந்தாயே
பச்சைமயில் வாகனன் பாதப் புணையிருக்க (மயக்க)

## பல்லவி

தெரிசிக்க வேண்டுமையே—தில்லைப் பெருவெளியைத்
தெரிசிக்க வேண்டுமையே

## அனுபல்லவி

தெரிசிக்க வேண்டுஞ் செனனமீடேற
திருமால் தேடியுங் காணக் கிடையாது

## சரணங்கள்.

சிங்கெனும் வங்கெனு மென்னமேவார் சேதிரஞ்
ஜீவப் பதியது சிதம்பர வீடு
எங்கும பெருவெளி கோயிலுட் சோதி
ஏகபரத்தைக் கலந் தெப்போதும் வாழ [தெரிசிக்க]

பேரான யாவர்க்கும் பெரிதான மூலம்
சீரான வேதந் தெளிவிக்கு மூலம்
சித்தர் குழாங்கள் தெரிந்திடு மூலம்
அத்வித ரூப வானந்த வடிவை [தெரிசிக்க]

கற்றோர் பரவுங் கயிலைவா ழீசனைக்
காண்டற் கரியானை வேண்டிச் சபைபுகு
முத்தருஞ் சித்தரும் மூவர் தொழுதேத்தும்
மோனமுற்றோர் தொழுந் தானவனைத் [தெரிசிக்க]

எல்லா மறிந்தாலு மேகமாய் நின்றாலும்
வல்லா ளொருவனை வாரியுண்ண வேணும்
எல்லா மவன்செயலாலே வெளிப்படும்
இன்ப அநுபவ மெடுத்து விழுங்கிட [தெரிசிக்க]

## பல்லவி

தனிப்ப தெப்போது நெஞ்சே—தானவனாகத்
தனிப்ப தெப்போது நெஞ்சே

## அநுபல்லவி

தனிப் பெரும்பொருளை நீ சார நினையாமல்
இனியேது வகைசெய்து ஈடணை தவிர்ப்பாய் நீ [தனிப்ப]

## சரணங்கள்

கணக்கில்லா வினைசெய்து கடுந்தவ மறந்தேன்
பிணக்கில்லாப் பொருளை பேணித்தர மென்றேன் [தனிப்ப]

வாழ நினைக்காமல் மண்மேல் வயிறோம்பி
தாழ நினைத்தாயே சண்டாள மடநெஞ்சே [தனிப்ப]

சித்திர தீபம்போலே சிந்தை யொடுக்கியே
சூத்திர கரணங்கள் குவியச்செய் தடக்கியே [தனிப்ப]

உலமதி யுலகம்மைக் கருளு மொருபொருளை
நிலையாக நிறுத்தியே நித்திய முன்னுடன் [தனிப்ப]

## சரணப் பற்று.

சரஹணபவனே சரணஞ் சரணம்
சாமிவந் தடைந்தேன் சரணஞ் சரணம்
கந்தா சுந்தர சரணஞ் சரணம்
கடம்பவ நேசா சரணஞ் சரணம்
குஞ்சித பாதா சரணஞ் சரணம்
கோமழக் கொழுந்தே சரணஞ் சரணம்
மயில் வாகனனே சரணஞ் சரணம்
மாதுமை பாலா சரணஞ் சரணம்
காமனை யெரித்தாய் சரணஞ் சரணம்
காலனை யுதைத்தாய் சரணஞ் சரணம்
வாமன ரூபா சரணஞ் சரணம்
வள்ளிம ணாளா சரணஞ் சரணம்
தேவர்கள் கோனே சரணஞ் சரணம்
தேசம்புகழ்வோய் சரணஞ் சரணம்
முத்திக்கு வித்தே சரணஞ் சரணம
மூவர்கள் தேவா சரணஞ் சரணம்
சத்தியப் பொருளே சரணஞ் சரணம்
சார்ந்து நிற்கின்றேன் சரணஞ் சரணம்
பன்னிரு கரத்தோய் சரணஞ் சரணம்
பரம தயாளா சரணஞ் சரணம்
என்னையு மாண்டோய் சரணஞ் சரணம்
ஏகமாய் நின்றோய் சரணஞ் சரணம்
வள்ளி மணாளா சரணஞ் சரணம்
வடிவேல் முருகா சரணஞ் சரணம்
போருக் குகந்தோய் சரணஞ் சரணம்
புள்ளி மயிலோய் சரணஞ் சரணம்
வேழ முகத்தோய் சரணஞ் சரணம்
வேலுடை யையா சரணஞ் சரணம்
உத்தாரப் பொருளே சரணஞ் சரணம்

உமையாள் பாலா சரணஞ் சரணம்
தஞ்சம் வந்தடைந்தேன் சரணஞ் சரணம்
தள்ளாய் முக்காலுஞ் சரணஞ் சரணம்
பவப்பிணி தீர்த்தோய் சரணஞ் சரணம்
பக்தரைக் காத்தோய் சரணஞ் சரணம்
சூரரைக் கொன்றோய் சரணஞ் சரணம்
சொந்தமா யாண்டோய் சரணஞ் சரணம்
எந்த னுயிரே சரணஞ் சரணம்
என்னை யீன்றோய் சரணஞ் சரணம்
என்னுடை குருவே சரணஞ் சரணம்
எனக் கினியானே சரணஞ் சரணம்
என்னனுபவமே சரணஞ் சரணம்
எந்தன் விருப்பே சரணஞ் சரணம்
பாரென் முகத்தை சரணஞ் சரணம்
ஆறு முகத்தோய் சரணஞ் சரணம்
தணிகை வாழீசா சரணஞ் சரணம்
தனிவளர் பொருளே சரணஞ் சரணம்
சுப்பிர மணியா சரணஞ் சரணம்
சுந்தர தேவா சரணஞ் சரணம்
சிவ சிவ சிவ சிவ சரணஞ் சரணம்
சின்மய தேசா சரணஞ் சரணம்
உமையொரு பாகா சரணஞ் சரணம்
உற்றவர் நேசா சரணஞ் சரணம்
நினைவின் பயனே சரணஞ் சரணம்
நித்தியப் பொருளே சரணஞ் சரணம்
நம்பி யுகந்தேன் சரணஞ் சரணம்
நாயெனைக் காத்தாள் சரணஞ் சரணம்
அடியிணை தொழுதேன் சரணஞ் சரணம்
அரகர சிவ சிவ சரணஞ் சரணம்
சந்நிதி வந்தேன் சரணஞ் சரணம்
சார நினைந்தேன் சரணஞ் சரணம்
கோயிலுட் புகுந்தேன் சரணஞ் சரணம்

குருவடி கண்டேன் சரணஞ் சரணம்
குருவருள் பெற்றேன் சரணஞ் சரணம்
குருமொழி யொன்றே சரணஞ் சரணம்
உற்றுப் பார்த்தேன் சரணஞ் சரணம்
உருவெளி யாச்சு சரணஞ் சரணம்
பார்த்தானைக் காணேன் சரணஞ் சரணம்
பரவெளி யாச்சு சரணஞ் சரணம்
என்னையுங் காணேன் சரணஞ் சரணம்
ஏகம தாச்சு சரணஞ் சரணம்
கங்கைச் சடையோய் சரணஞ் சரணம்
கண்டங் கறுத்தோய் சரணஞ் சரணம்
பாம்பணி பாதா சரணஞ் சரணம்
பரையுமை பாலா சரணஞ் சரணம்
மான்மழு கரத்தோய் சரணஞ் சரணம்
மகாதேவா சரணஞ் சரணம்
ஆடிய பாதா சரணஞ் சரணம்
அன்பரைக் காத்தாய் சரணஞ் சரணம்
கோமழக் கொழுந்தே சரணஞ் சரணம்
கோ கோ கொடியேன் சரணஞ் சரணம்
நடன சபேசா சரணஞ் சரணம்
நாரண நான்முகா சரணஞ் சரணம்
சங்கர சம்பூ சரணஞ் சரணம்
சதாசிவப் பொருளே சரணஞ் சரணம்
விடையூர் தேவா சரணஞ் சரணம்
வேத முடிவே சரணஞ் சரணம்
கருவில் வளர்த்தாய் சரணஞ் சரணம்
கடிதில் வந்தாண்டாய் சரணஞ் சரணம்
பந்த மறுத்தாய் சரணஞ் சரணம்
பாரில்வந் தாண்டாய் சரணஞ் சரணம்
உன்னை மறவேன் சரணஞ் சரணம்
உயிருள வினினுஞ் சரணஞ் சரணம்
என்னுயிர்த் தலைவா சரணஞ் சரணம்

என்னை விட்டேற்றாஞ் சரணஞ் சரணம்
பாவனாசா சரணஞ் சரணம்
பார்புகழ் நாதா சரணஞ் சரணம்
கலியுக வரதா சரணஞ் சரணம்
கைவிட மாட்டாய் சரணஞ் சரணம்
நம்பிவந் தடைந்தேன சரணஞ் சரணம்
நாயிற் கடையேன் சரணஞ் சரணம்
ஒன்று மறியேன் சரணஞ் சரணம்
ஓகோ கொடியேன் சரணஞ் சரணம்

சரணப் பற்று முற்றிற்று.

# அஞ்சலிப் பற்று.

சரவணபவனே அஞ்சலிபுரிந்தேன்
சாமியெனையாள் அஞ்சலிபுரிந்தேன்
சத்திவேலா அஞ்சலிபுரிந்தேன்
சங்கரிபுதல்வா அஞ்சலிபுரிந்தேன்
வெற்றிவேலுடையாய் அஞ்சலிபுரிந்தேன்
வேதபொருளே அஞ்சலிபுரிந்தேன்
கதிர்வடிவேலா அஞ்சலிபுரிந்தேன்
காத்தெனையாள்வாய் அஞ்சலிபுரிந்தேன்
சூரனை வென்றாய் அஞ்சலிபுரிந்தேன்
சூரர்கள் சூரா அஞ்சலிபுரிந்தேன்
தணிகைக்கரசே அஞ்சலிபுரிந்தேன்
தந்தையென் குருவே அஞ்சலிபுரிந்தேன்
என்னுடை யறிவே அஞ்சலிபுரிந்தேன
என்னுடை யுயிரே அஞ்சலிபுரிந்தேன்
அரகரசிவனே அஞ்சலிபுரிந்தேன்
ஆராவுணர்வே அஞ்சலிபுரிந்தேன
ஆடியபாதா அஞ்சலிபுரிந்தேன்

அருளுடையப்பா அஞ்சலிபுரிந்தேன
திருச்சிற்றம்பலவா அஞ்சலிபுரிந்தேன்
தில்லைக்கரசே அஞ்சலிபுரிந்தேன்
பொன்னம்பலவா அஞ்சலிபுரிந்தேன்
பொற்சபை யப்பா அஞ்சலிபுரிந்தேன்
நாரண நான்முகா அஞ்சலிபுரிந்தேன்
நாரணி சகோதரா அஞ்சலிபுரிந்தேன்
பஞ்சவர் சகாயா அஞ்சலிபுரிந்தேன்
பக்த ரக்ஷகனே அஞ்சலிபுரிந்தேன்
கலைமகள் நான்மகட் கஞ்சலிபுரிந்தேன்
கடையேன் றனையாள் அஞ்சலிபுரிந்தேன்
பண்ணிசை மூவர்க் கஞ்சலிபுரிந்தேன்
பக்தர் குளாங்கட் கஞ்சலிபுரிந்தேன்
அடியார் குளாத்துக்கு அஞ்சலிபுரிந்தேன்
அருள்தவத் தோர்கட் கஞ்சலிபுரிந்தேன்
பட்டினத்தடிகட் கஞ்சலிபுரிந்தேன்
பார்முதற்றுறந்தோர்க் கஞ்சலிபுரிந்தேன்
என் குரு நாதர்க்கு அஞ்சலிபுரிந்தேன்
என் குலதெய்வத்துக்கு அஞ்சலிபுரிந்தேன்
அடியா ரெவர்க்கும் அஞ்சலிபுரிந்தேன்
அரனருள் பெற்றோர்க்கு அஞ்சலிபுரிந்தேன்
நாயிற் கடையேன் அஞ்சலிபுரிந்தேன்
நன்மை யறியேன் அஞ்சலிபுரிந்தேன்
கற்றறிவில்லேன் அஞ்சலிபுரிந்தேன்
கருங்குணப் புலையேன் அஞ்சலிபுரிந்தேன்
எல்லாம் பொறுப்பாய் அஞ்சலிபுரிந்தேன்
ஏகநாயகனே அஞ்சலிபுரிந்தேன்
புழுவிற் கடையேன் அஞ்சலிபுரிந்தேன்
பூதநாயகனே அஞ்சலிபுரிந்தேன்
என்னையுங் காத்தருள் அஞ்சலிபுரிந்தேன்
ஏகப்பொருளே அஞ்சலிபுரிந்தேன
கல்வியறியேன் அஞ்சலிபுரிந்தேன்

கருத்தைத் திருத்தேன் அஞ்சலிபுரிந்தேன்
சொற்சுவை யறியேன் அஞ்சலிபுரிந்தேன்
சொற்குற்றம் பொறுத்தாள் அஞ்சலிபுரிந்தேன்
பொருட்சுவை யறியேன் அஞ்சலிபுரிந்தேன்
பொறுததென்னை ரக்ஷி அஞ்சலிபுரிந்தேன்
உனனருளாலே அஞ்சலிபுரிந்தேன்
உன்செயலாலே அஞ்சலிபுரிந்தேன்
ஓதத்துணிநதேன் அஞ்சலிபுரிநதேன்
பாதச் செயலால் அஞ்சலிபுரிந்தேன்
என்செயலில்லை அஞ்சலிபுரிநதேன்
எல்லா முன்செயல் அஞ்சலிபுரிந்தேன்
உணர்த்த உணர்ந்தேன் அஞ்சலிபுரிந்தேன்
உணர்விலேன் என்செய்வேன் அஞ்சலிபுரிந்தேன்
என்குறையில்லை அஞ்சலிபுரிந்தேன்
ஏகமதாக்கு அஞ்சலிபுரிந்தேன்

(அஞ்சலிப் பற்று முற்றிற்று.)

## நமோப் பற்று.

பக்த ரக்ஷகனே நமோ நமோ
பண்ணவர் முதல்வா நமோ நமோ
சித்தர் தொழுங்குக நமோ நமோ .
தீவினை யறுத்தாள் நமோ நமோ
முத்து வடிவேல் நமோ நமோ
மூர்க்கரைக் கொன்றோய் நமோ நமோ
வள்ளிக் குகந்தோய் நமோ நமோ
வந்தெனை யாண்டாய் நமோ நமோ
மேல்வழி காட்டாய் நமோ நமோ
மேல்வீ டேற்று நமோ நமோ
என்னுள மமர்ந்தாய் நமோ நமோ

ஏகனே நாதா நமோ நமோ
எல்லா மானாய் நமோ நமோ
ஏக வெளியே நமோ நமோ
பல்லுயிர காத்தாய் நமோ நமோ
எல்லாஞ் செய்வாய் நமோ நமோ
என்குரு தந்தை நமோ நமோ
என்பெருந் தெய்வம் நமோ நமோ
பொய்க்கட் டறுத்தோய் நமோ நமோ
போத பூரணமே நமோ நமோ
அறிவுக் கறிவே நமோ நமோ
அலைமனந் தெளித்தோய் நமோ நமோ
கருவழி யடைந்தோய் நமோ நமோ
காததெனை யாண்டாய் நமோ நமோ
பேத மறுத்தாய் நமோ நமோ
பேயுல கென்றாய் நமோ நமோ
உடல் பொய் யென்றோய் நமோ நமோ
உணர்வி னுரைத்தோய் நமோ நமோ
வள்ளியை மணந்தோய் நமோ நமோ
வல்வினை மாய்த்தோய் நமோ நமோ
வந்தென்னை யாண்டோய் நமோ நமோ
வரும்வழி யடைத்தோய் நமோ நமோ
எதையும் நானென்றோய் நமோ நமோ
ஏகவெளியே நமோ நமோ
உலகுபொய் யென்றோய் நமோ நமோ
உன்னைத் தோன்றும் நமோ நமோ
கருவிகள் மாய்த்தோய் நமோ நமோ
காலனை யுதைத்தோய் நமோ நமோ
என்பெரு வாழ்வே நமோ நமோ
என் மனதுடையாய் நமோ நமோ
என் கண்மணியே நமோ நமோ
எனக் கயலில்லாய் நமோ நமோ

தித்திக்குந் தேனே நமோ நமோ
தெவிட்டா இன்பே நமோ நமோ
முத்திக்கு வித்தே நமோ நமோ
முருகா சரணம் நமோ நமோ
முன்னவ நின்றால் நமோ நமோ
முடியாதேது நமோ நமோ
சித்தாடுஞ் சித்தே நமோ நமோ
தேவர் கடேவே நமோ நமோ
பவப்பிணி மருந்தே நமோ நமோ
பாவ மறுத்தாள் நமோ நமோ
என்னனுபவமே நமோ நமோ
ஏடணை தவிர்த்தாய் நமோ நமோ
இனிப் பிறவாமை நமோ நமோ
எனக் களித்தவனே நமோ நமோ
உலகி னுழன்றேன் நமோ நமோ
உற்றறிந்துகொண்டேன் நமோ நமோ
கானற் சலமே நமோ நமோ
காசினி வாழ்வு நமோ நமோ
ஜாதிபேதம் நமோ நமோ
சகலதும் பொய்யே நமோ நமோ
ஆசையினாலே நமோ நமோ
அடையும் வினைகள் நமோ நமோ
வினைகளோ ரிரண்டும் நமோ நமோ
உனைச்சாரிலோடும் நமோ நமோ
மக்கள் சுற்றத்தில் நமோ நமோ
மயங்கநான் மாட்டேன் நமோ நமோ
தெளிந்து கொள்வாய் நமோ நமோ
தீவினை யனைத்தும் நமோ நமோ
வினைக்கூ டுடலம் நமோ நமோ
வீட்டுவன் கூற்று நமோ நமோ
தஞ்ச மொன்று நமோ நமோ

தாள் கெதியாமே நமோ நமோ
காலனை வெல்வேன் நமோ நமோ
கண்டா லஞ்சேன் நமோ நமோ
உறுதுணை வேண்டேன் நமோ நமோ
உள்ளுணர் வறிந்தேன் நமோ நமோ
கைப்பாச் சுலகம் நமோ நமோ
கானற் சலமே நமோ நமோ
பெண்டுகளாசை நமோ நமோ
பித்திலும் பித்தே நமோ நமோ
உன் மக வென்றாய் நமோ நமோ
உண்டாக்குவாயோ நமோ நமோ
உன்னுடைய செலவம் நமோ நமோ
உயிர் போனால் வாரா நமோ நமோ
பொன்னிருந்தாலும் நமோ நமோ
போதந தருமோ நமோ நமோ
எல்லா மவன்செயல் நமோ நமோ
இல்லை யுன்செயல் நமோ நமோ
ஆடுவா னாட்ட. நமோ நமோ
ஆடிடுவாய் நீ நமோ நமோ
சூத்திரப்பாவை நமோ நமோ
சூக்ஷத்தைப் பாரு நமோ நமோ
உன்னை யறிந்தால் நமோ நமோ
ஒருகுறை யில்லை நமோ நமோ
அயனெழுத் தழித்து நமோ நமோ
அரன்றாள் புகுந்தேன் நமோ நமோ
பல ஜென்ம மெடுத்தேன் நமோ நமோ
பார்வர மாட்டேன் நமோ நமோ
தேசுரு வெளியில் நமோ நமோ
சென்றேன் திரும்பேன் நமோ நமோ
அல்லுண்ட பகலாய் நமோ நமோ
ஆயெதிர் காணேன் நமோ நமோ
சட்டை யென்றறிந்தேன் நமோ நமோ

சார் பொய்யுடலே நமோ நமோ
நம் தீவினையால் நமோ நமோ
நான்முகன் படைத்தான் நமோ நமோ
ஓர் குற்றமில்லை நமோ நமோ
உயிர் செய்திங்கே நமோ நமோ
உள்ளதை மறந்தாய் நமோ நமோ
உன் மனவிரிவால் நமோ நமோ
அறிவாய் நில்லு நமோ நமோ
அது பூரணமே நமோ நமோ
பாராதிருந்தால் நமோ நமோ
பாழுல கெங்கே நமோ நமோ
காலித் துள்ளல் நமோ நமோ
கனவிற் கண்டாயோ நமோ நமோ
காசினி வாழ்வு நமோ நமோ
கானற் சலமே நமோ நமோ
அவனசை வின்றி நமோ நமோ
அணு வசையாது நமோ நமோ
அரசர் வாழ்வு நமோ நமோ
ஆற்று நீரே நமோ நமோ
அறுசுவை யுணவு நமோ நமோ
அருந்திலும் வீடோ நமோ நமோ
தேவர் செங்கோல் நமோ நமோ
தேடேன் வேண்டேன் நமோ நமோ
இச்சை யுன்பதமே நமோ நமோ
ஏக மாவேன் நமோ நமோ
உள்ள துரைத்தேன் நமோ நமோ
உன்மே லாணை நமோ நமோ
வினை யத்தனையும் நமோ நமோ
விட்டேன் விரும்பேன் நமோ நமோ
பல்லக்கேறிப் பவனிவரும் நமோ நமோ
பார்மன்னர் வாழ்வுபொய் நமோ நமோ
அரைக்ஷணமுந் தாக்காதே நமோ நமோ

ஆசையாலே மெலியாதே நமோ நமோ
தேகம் பிடிச்சாம்ப லல்லோ நமோ நமோ
தெரியாதோ உந்தனக்கு நமோ நமோ
ஒன்றையும் எதிர்பாராய் நமோ நமோ
உன்னுடல் சொந்தமாமோ நமோ நமோ
உன்னிமிக அகங்கரித்தாய் நமோ நமோ
உனை நால்வர் சுமந்தார் நமோ நமோ
ஆனை குதிரை யேறும் நமோ நமோ
அவ்வுட லுடலொட்டை நமோ நமோ
இராசாதி பதியுமே நமோ நமோ
இராக்ஷியம் பொய்யல்லவோ நமோ நமோ
அத்தவீரர் தளகர்த்தர் நமோ நமோ
சூரரெங்கே ஆவிபோனால் நமோ நமோ
செங்கோ லரசர்களும் நமோ நமோ
செத்தா லெழுவர்களோ நமோ நமோ
முத்தாரம் பணிமாலை நமோ நமோ
மூச்சுப்போனாற் காத்திடுமோ நமோ நமோ
ஆங்காரங் கொண்டாயே நமோ நமோ
ஆவிபோனால் நடப்பாயோ நமோ நமோ
மலஞ்சலங் கழிந்ததுபோல் நமோ நமோ
மக்களெனைப் பிரிந்தார் நமோ நமோ
எல்லாஞ்செய் வல்லனென்றாய் நமோ நமோ
இறந்தாற் பலருங்கூடி நமோ நமோ
கையைக் காலைக் கட்டுகின்றார் நமோ நமோ
கடியபிணமாய்க் கிடந்தாய் நமோ நமோ
என்செயலென் றெண்ணாதே நமோ நமோ
எல்லா மவன்செயலே நமோ நமோ
சலனமற்ற பாற்கடலே நமோ நமோ
சார்மன மொடுங்கிவிட்டால் நமோ நமோ
சார்வையெல்லாம் விட்டகன்றாய்நமோ நமோ
சார்ந்தோம் பரவெளி நமோ நமோ
எலலாம் பொய் யென்றறிந்தால் நமோ நமோ

ஏகபரம் மெய்யல்லோ நமோ நமோ
வல்லா னொருவனல்லால் நமோ நமோ
வாராது மெய்யுணர்வு நமோ நமோ
லெக்ஷாதிபதியும் நமோ நமோ
லெச்சையல்லோ உனைமறந்தால் நமோ நமோ
புழுக்கூ டென்றறியாயோ நமோ நமோ
பூஷணங்க ளணிந்துமென்ன நமோ நமோ
ஜென்ம மெடுத்தபலன் நமோ நமோ
சேரிடத்தை யறிதல் நமோ நமோ
எத்தனை கோடி ஜென்மம் நமோ நமோ
எடுத்தெடுத்து நாண்பிறந்தேன் நமோ நமோ
கருக்குழிநான் புகமாட்டேன் நமோ நமோ
காப்பதுன்றன் கடனல்லோ நமோ நமோ
காலனெனைத் தொடமாட்டான் நமோ நமோ
கருமவினை விட்டகன்றேன நமோ நமோ
உலகாளும் மன்னர்வாழ்வும் நமோ நமோ
உற்றுணர்ந்தார் பொய்யல்லவோ நமோ நமோ
உண்டுமென்று நம்பாதே நமோ நமோ
உற்றறிந்துகொள் ளுன்னுள்ளே நமோ நமோ
மாயா மயக்கமிது நமோ நமோ
மகாதேவர் கற்பனையே நமோ நமோ
எத்தனைபேர் சூழ்ந்திருந்தும் நமோ நமோ
எட்டாமற் போகுமுயிர் நமோ நமோ
அத்தனையுந் தெரியாதோ நமோ நமோ
அறிந்துநீ கெட்டலைந்தாய் நமோ நமோ
எமன்றமர் வந்திடுவார் நமோ நமோ
ஏதுரைப்போ மென்றிருந்தாய் நமோ நமோ
மக்கள் பெண்டிர் மெய்யென்றாய் நமோ நமோ
மாண்டாற் பின்வருவரோ நமோ நமோ
எத்தனையோ பேரிறந்தார் நமோ நமோ
எத்தனை நா ளிங்கிருப்பாய் நமோ நமோ
சரவண பவகுகன் நமோ நமோ

சடாக்ஷரப் பொருளாளும் நமோ நமோ

(நமோப் பற்று முற்றிற்று.)

## சடாக்ஷரப் பற்று.

எந்தனையாண்டாய் சரஹணபவனே
இமையவர் முதல்வா சரஹணபவனே
பந்த மறுத்தாள் சரஹணபவனே
பாத மளித்தாள் சரஹணபவனே
முத்தே முதல்வா சரஹணபவனே
முன்னோனை புதல்வா சரஹணபவனே
பக்தரக்ஷகனே சரஹணபவனே
பாவ மறுத்தாள் சரஹணபவனே
என்குருநாதா சரஹணபவனே
எனைக்காத் தருள்வாய் சரஹணபவனே
தயாநிதியே என் சரஹணபவனே
தஞ்சம் வந்தடைந்தேன் சரஹணபவனே
காத்தருளையா சரஹணபவனே
கடிவினை கடிந்தாள் சரஹணபவனே
சங்கரன் மகனே சரஹணபவனே
சங்கரி புதல்வா சரஹணபவனே
இங்கெனை யாண்டாய் சரஹணபவனே
இன்பங் கொடுத்தாள் சரஹணபவனே
என்னருட்டாயே சரஹணபவனே
ஏனையின் றெடுத்தாய் சரஹணபவனே
அம்மையே யப்பா சரஹணபவனே
ஆரா வமுதே சரஹணபவனே
தேனே பாலே சரஹணபவனே
தெவிட்டா இன்பஞ் சரஹணபவனே
தணிகைவாழ் குகனே சரஹணபவனே

தாயா யாண்டாய் சரஹணபவனே
போருக் குரியோய் சரஹணபவனே
போதப்பொருளே சரஹணபவனே
வள்ளிக் குகந்தோய் சரஹணபவனே
வாதினில் வென்றோய் சரஹணபவனே
மயில் வாகனனே சரஹணபவனே
மாதுமை பாலா சரஹணபவனே
சூர சம்ஹாரா சரஹணபவனே
சூதனக்குண்டோ சரஹணபவனே
ஏழைநா னையா சரஹணபவனே
ஏதுநா னுரைப்பேன் சரஹணபவனே
முத்திக்கு வித்தே சரஹணபவனே
மூவர் முதலே சரஹணபவனே
பவப்பிணி மருந்தே சரஹணபவனே
பரம தயாளா சரஹணபவனே
எந்த னறிவே சரஹணபவனே
என்னறிவுக் கறிவே சரஹணபவனே
வானே வெளியே சரஹணபவனே
வான்பெருந் துணையே சரஹணபவனே
மலையே கடலே சரஹணபவனே
மலைமகள் பாலா சரஹணபவனே
ஊனே யுயிரே சரஹணபவனே
உட்புகுந் தாண்டாய் சரஹணபவனே
தெவிட்டா வமுதே சரஹணபவனே
தேன்மொழிச் சுவையே சரஹணபவனே
எல்லாம் பொய்யே சரஹணபவனே
ஏக மொன்றே சரஹணபவனே
தஞ்சம் வந்தடைந்தேன் சரஹணபவனே
தள்ளாய் முக்காலும் சரஹணபவனே
பஞ்சப் பொறிகள் சரஹணபவனே
பார்த்து நகைக்கே சரஹணபவனே
துஞ்சா மனதைச் சரஹணபவனே

துடிப்பை யடக்கு சரஹணபவனே
பஞ்சாய்ப் பறந்தேன் சரஹணபவனே
பாவமலவோ சரஹணபவனே
இரக்க மில்லையோ சரஹணபவனே
என் பெரும்பாவம் சரஹணபவனே
மாளும் பொழுது சரஹணபவனே
மறவா வரந்தா சரஹணபவனே
திக்குவே றறியேன் சரஹணபவனே
திகையா தாள்வாய் சரஹணபவனே
கடலிற் றுரும்பேன் சரஹண வனே
கலங்கித் திரிந்தேன் சரஹணபவனே
பாதம்வந் தடைந்தேன் சரஹணபவனே
பாரே னென்றும் சரஹணபவனே
அவனி முழுதுஞ் சரஹணபவனே
ஆசைப் படுதி சரஹணபவனே
பொய்யா ருலகம சரஹணபவனே
புனல்மே லெழுத்து சரஹணபவனே
சகடக் கால்போல் சரஹணபவனே
சாவும் பிறப்பும் சரஹணபவனே.
பந்தமும் வீடும் சரஹணபவனே
பாதத் தாமரையே சரஹணபவனே
மக்களுஞ் சுற்றமும் சரஹணபவனே
மாயா மயக்கஞ் சரஹணபவனே
உற்றுநா னறிந்தேன் சரஹணபவனே
உண்மை யிதல்லவோ சரஹணபவனே
பற்றது அறுத்தால் சரஹணபவனே
பற்றது பற்றும் சரஹணபவனே
என்மன தறிவாய் சரஹணபவனே
என்குரு நாதா சரஹணபவனே
கோனே குகனே சரஹணபவனே
கோகோ அயர்ந்தேன் சரஹணபவனே
உலகஞ் சதமோ சரஹணபவனே

உண்மை யிதுவோ சரஹணபவனே
சரீரம் விழுமே சரஹணபவனே
சாகபதமாமோ சரஹணபவனே
பொன்னும் பொருளும் சரஹணபவனே
போதந் தருமோ சரஹணபவனே
பொய்க்கூடிதுவே சரஹணபவனே
போதத் துணையோ சரஹணபவனே
சாருங் கதிநீ சரஹணபவனே
சாலோக மீன்றருள் சரஹணபவனே
என் னாயகனே சரஹணபவனே
என்னிரு கண்ணே சரஹணபவனே
வேல்முருகையா சரஹணபவனே
வேதப் பொருளே சரஹணபவனே
சிவ சிவ சிவ சிவ சரஹணபவனே
சிவகாமி பாலா சரஹணபவனே

(சடாக்ஷரப்பற்று முற்றிற்று.)

## நமஸ்காரப் பற்று.

கந்தா கந்தா நமஸ்கரித்தேன்
கடம்பவனேசா நமஸ்கரித்தேன்
வேதப் பொருளே நமஸ்கரித்தேன்
விண்ணவர் கோவே நமஸ்கரித்தேன்
முத்து வடிவேலா நமஸ்கரித்தேன்
மூர்க்கனைக் கொன்றோய் நமஸ்கரித்தேன்
தந்தி முகத்தோன் நமஸ்கரித்தேன்
தானவனையே நமஸ்கரித்தேன்
மூஷிக வாகனு நமஸ்கரித்தேன

முத்திக்கு வித்தே நமஸ்கரித்தேன்
முன்னோன் புதல்வா நமஸ்கரித்தேன்
முற்றிலுங் காப்பாய் நமஸ்கரித்தேன்
தேனே யமுதே நமஸ்கரித்தேன்
தெள்ளிய பாகே நமஸ்கரித்தேன்
ஊனே யுயிரே நமஸ்கரித்தேன்
உள்ளுணா ரின்பே நமஸ்கரித்தேன்
வானே வெளியே நமஸ்கரித்தேன்
வாரா வரவே நமஸ்கரித்தேன்
ஏகப் பொருளே நமஸ்கரித்தேன்
எங்கு மிருந்தாய் நமஸ்கரித்தேன்
அகமே யறிவே நமஸ்கரித்தேன்
ஆரா வுணர்வே நமஸ்கரித்தேன்
எல்லா முடையாய் நமஸ்கரித்தேன்
எல்லா மில்லாய் நமஸ்கரித்தேன்
வெட்ட வெளியே நமஸ்கரித்தேன்
வேண்டிக் கலப்பாய் நமஸ்கரித்தேன்
சுட்டொன் றாமில்லாய் நமஸ்கரித்தேன்
சுயஞ்சோதி யானாய் நமஸ்கரித்தேன்
தத்துவங் கடந்தோய் நமஸ்கரித்தேன்
தானவ னானாய் நமஸ்கரித்தேன்
எங்கும் நிறைந்தோய் நமஸ்கரித்தேன்
ஏக வெளியே நமஸ்கரித்தேன்
வந்து கலந்தேன் நமஸ்கரித்தேன்
வாரா வரவே நமஸ்கரித்தேன்
பொய்மையைக் கடிந்தாள் நமஸ்கரித்தேன்
போதங் கொடுத்தாள் நமஸ்கரித்தேன்
நமச்சி வாயவே நமஸ்கரித்தேன்
நாதாந்த ரூபா நமஸ்கரித்தேன்
ஓமெனு மெழுத்தே நமஸ்கரித்தேன்
ஓங்காரத் தொளியே நமஸ்கரித்தேன்
வசியெனும் பொருளே நமஸ்கரித்தேன்

வா சிவா யிங்கே நமஸ்கரித்தேன்
மௌனப் பொருளே நமஸ்கரித்தேன்
மகா யோக நிலையே நமஸ்கரித்தேன்
எட்டிரண் டறியேன் நமஸ்கரித்தேன்
எனக்கறி விப்பாய் நமஸ்கரித்தேன்
மௌன நிலையே நமஸ்கரித்தேன்
மாரு இன்பே நமஸ்கரித்தேன்
சின்னஞ் சிறுவன் நமஸ்கரித்தேன்
சித்த சுத்தியாக வேணும் நமஸ்கரித்தேன்
பகுதி யில்லாப்பாவி நமஸ்கரித்தேன்
பாவியைத் தள்ளேல் நமஸ்கரித்தேன்
உன்னுட் கலந்தேன் நமஸ்கரித்தேன்
ஊனுடல் காவா நமஸ்கரித்தேன்
எனையார் காப்பார் நமஸ்கரித்தேன்
எனைக் கைப்பிடித்தாள் நமஸ்கரித்தேன்
என்மிகு ஆசை நமஸ்கரித்தேன்
ஏகத்திற் சேர நமஸ்கரித்தேன்
எத்தனை பிறந்தேன் நமஸ்கரித்தேன்
ஏது மறியேன் நமஸ்கரித்தேன்
வான் புகழ்வேண்டேன் நமஸ்கரித்தேன்
வாடிடு கின்றேன் நமஸ்கரித்தேன்
சந்தையிற் கூட்டம் நமஸ்கரித்தேன்
ஜகவாழ் வனைத்தும் நமஸ்கரித்தேன்
பாடிநா வயர்ந்தேன் நமஸ்கரித்தேன்
பார்த்திரங் காதேன் நமஸ்கரித்தேன்
ஐந்து கரத்தோய் நமஸ்கரித்தேன்
அரனருள் பாலா நமஸ்கரித்தேன்
பேழை வயிற்றோன் நமஸ்கரித்தேன்
பெரும்பாரக் கோட்டோய் நமஸ்கரித்தேன்
வல்லபை நாதா நமஸ்கரித்தேன்
வாமன ரூபா நமஸ்கரித்தேன்
முன்னூல் மார்போய் நமஸ்கரித்தேன்

மூலப் பொருளே நமஸ்கரித்தேன்
கணேசா உன்னை நமஸ்கரித்தேன்
காத்தருள் புரிவாய் நமஸ்கரித்தேன்
அல்லும் பகலும் நமஸ்கரித்தேன்
அரன் திருமகனே நமஸ்கரித்தேன்
தணிகை வாழீசா நமஸ்கரித்தேன்
தாருகன் காலா நமஸ்கரித்தேன்
தெவிட்டா அமுதே நமஸ்கரித்தேன்
தெள்ளிய பாகே நமஸ்கரித்தேன்
அன்பே அறிவே நமஸ்கரித்தேன்
ஆருயிர் நாதா நமஸ்கரித்தேன்
இன்பப் பொருளே நமஸ்கரித்தேன்
என்னுயிர் நாதா நமஸ்கரித்தேன்
நாயேன் பேயேன் நமஸ்கரித்தேன்
நாடிப் பொறுத்தாள் நமஸ்கரித்தேன்
பேயேன் பித்தேன் நமஸ்கரித்தேன்
பெருமை கொடுத்தாள் நமஸ்கரித்தேன்
அருட்பெருந் தாயே நமஸ்கரித்தேன்
அன்னை யப்பா நமஸ்கரித்தேன்
புழுவிற் கடையேன் நமஸ்கரித்தேன்
பொன்னடி தந்தாள் நமஸ்கரித்தேன்
உற்ற துணையே நமஸ்கரித்தேன்
உயிருக் குயிரே நமஸ்கரித்தேன்
உன்னருளாலே நமஸ்கரித்தேன்
உன்னை யறிந்தேன் நமஸ்கரித்தேன்
உள்ள மறிவாய் நமஸ்கரித்தேன்
உட்புகுந் தாண்டோய் நமஸ்கரித்தேன்
எந்நாளு மறவேன் நமஸ்கரித்தேன்
ஷண்முக தேவா நமஸ்கரித்தேன்

(நமஸ்காரப் பற்று முற்றிற்று.)

## உலகர் கோளுரை.

உன்னையல்லா லெனக்கோ ருறுபொருள் வேண்டிலனே
பின்னைப் பேயுலகரென்னை பேசல் சம்மதமோ தேவே
அன்னை நீ யுன்னையல்லா லாரெனைக் காப்பார் காணேன்
முன்னை யென்வினைப்பயத்தால் மூடர்நின் றிகழுவாரே (௧)

பாவியென் றுலகரென்னைப் பண்ணுவ தேதோ வேலா
சாவிபோல் மயங்கி மண்ணோர் சாற்றுறுசொல் சரிபதாமோ
கூவியே யுலகரென்னைக் கோட்சொல்வ தழகோ நாதா
மா விகாரத்தில் மூடர் வழங்குஞ்சொல் வண்மையாமோ (௨)

பொய்யுலகப் பொய்யர் புகலுஞ்சொற் புண்ணியமோ
மெய்தா னடுங்காமல் விளம்புஞ்சொற் சம்மதமோ
ஐயகோ நான்பாவிக் கருந்துணை நீயலையோ
வையகத்தில் மாமூர்க்கர் வளங்குகோள வண்மையதே (௩)

கேள்வி முறையிலையோ கேள்ப்பவர்க ளிங்கிலையோ
மாளும் பதர்களெனை மதியிலி யென்னலாமோ
பாழ்வினை விட்டகலாப் பாவிகள்சொற் சம்மதமோ
கோள்வினையை நீக்கவொரு கூர்வடிவேல்தா னிலையோ (௪)

நன்மை யறியாதார் நரசென்மமா யெடுத்துத்
தின்மை பறைதலுன் றிருவுளத்துக் கேற்றிடுமோ
பன்மை யறியாத பதகர் சிலர் பேசுவது
தன்மையதோ குகனே தன்கையில்வே லிலையோ (௫)

மூடர்சிலர் கூடியெனை முற்று மிகழ்ந்துரைத்தல்
பாடற்கினியானே பன்னிரண்டு காதிலையோ
வேடபுலையரெனை வெகுண்டுரைத்தல் சம்மதமோ
சேடரவர்க் கஞ்சுவனோ கேள்வியெல்லாம் வீணாமே (௬)

பகலை யிருளென்ற கல்லாப் பாமரர்க ளிகழ்வதுவும்
நகை தரவே குடிகேடர் நாடித் தூஷிப்பதுவும்
யுகம் வெளிகாணார் ஊமர்க ளுருட்டுவதும
தகவிலார் சொல்லும் வசைதமக்கே அது வாமே (௭).

குவலயந் தன்னிற் குருட்டுமோ டதுபோல்
குருபரா மூடர்கள் குதிப்பார்
அவலமா முலகர் அறநெறி ஞாய
மறிய வல்லார்களோ புகலாய்
சவலையா மனத்தர் சத்தசத் துண்மை
தன்னையு மறிந்திடார் சராசரச்
சவமென வுலகில் வாய்கொண்ட மட்டும்
உருட்டியே ஞமலியாய் ஜனிப்பார் (அ)

பொய்யினர் பொய்யைப் பொருந்த நின்றுரைத்தல்
புண்ணிய மாகுமோ முருகா
பைய வினையார் பிதற்றுதலெல்லாம
பாவமும் பிறவியும் விளையும்
உய்யுமா றறியார் அறிந்தவர் தம்மை
அவமொழி யுரைபபது நலமோ
கையகத் தவர்கள் பொய்யை நீ செவியால்
வாங்குவ தாகுமோ குமரா (சு)

என்னை யொருவர் சுடவுரைத்தால்
எனக்கே யில்லை யுனக்குண்டே
பின்னைப் பலனென் பேசுவ தென்
பெருமை சிறுமை யெனக்கில்லை
அன்னை வயிற்றில் வளர்த்தோனே
அருந்தவமிர்தங் கொடுத்தோனே
மண்ணும் பிறவி தவிர்ப்போனே
மான்வந் தற்றுல் மகிழ்வோனே (ம)

# பராபரக் கண்ணி.

பஞ்சப் பொறிகரணப் பாவிகளை வென்ற நல்லோர்
செஞ்சி துதிக்கும் நிறைவே பராபரமே (க)

நஞ்சையுண்டோன் றன்பதத்தை நாடித் துதிப்பவர்க்கும்
பஞ்சமுண்டோ ஐயா பகராய் பராபரமே (௨)

பகருவதெல்லா முன்னைப் பற்றுவதெல்லா மருளில்
அகமுடையார்க் கன்றோ அருளாவாய் பராபரமே (௩)

சரீரம்பொய் யென் றறிந்த சாஸ்வதா னந்தருக்கு
துரியவெளி மேலான தோற்றம் பராபரமே (௪)

தன்னையறிந்தோர் கடமைச் சதாநந்த வீட்டேற்றும்
அன்னை பிதா வொப்போ நீ ஐயா பராபரமே (௫)

இன்னம் பிறவாம லெமவாதை சிக்காமல்
தன்னந் தனிமுதலே தந்தாள் பராபரமே (௬)

ஒட்டுமிலேன் பற்றுமிலே னொருவர் துணையுமிலேன்
கட்டியெனை யாண்டருள்வாய் கண்ணே பராபரமே (௭)

ஈடணைகள் மூன்று மெரித்தசிவ பக்தருக்கு
தேடரிய வின்பமிகச் சிக்கும் பராபரமே (௮)

மும்மலத்தைப் போக்கிவிட்டால் மூதறிவு மேலெழும்பும்
அம்மா யிவர்க்கு அருளாகூதி பராபரமே (௯)

ஆசைக் கடலை யறுத்துவிட்ட மேலோர்தாம்
பாவக் கடலில் பதியார் பராபரமே (௰)

இன்றிருந்தார் நாளை யிறந்தார் பிணமானார்
நன்றிருந்தார் சாகலையோ ஞாயம் பராபரமே (௰௧)

இராசாதி ராசரவர் நற்பூமி சேனைகளும்
தேசாதி தேசப்பொய் செப்பாய் பராபரமே (௰௨)

அந்தரங்கச் சாவடியு மரசர்புரி செங்கோலும்
எந்தப பெருவாழ்வு மேகும் பராபரமே (௰௩)

பொய்ப்பொருளை நம்புவரோ புண்ணியஞ்செய் நல்லோர்கள்
மெய்ப்பொருளை வேண்டுவதே மெய்மெய் பராபரமே (௰௪)

அன்பே யகமே யகங்குளிர்ந்த செந்தேனே
இன்பரிடத்தே வசிக்கு மிறையே பராபரமே (௰௫)

செக்கிலெள்ளுப் பட்டதுபோற் செத்துழன்றேன் ஜென்மமெல்
லாம், பக்குவந் தந்தென்னைப் பாலிப்பாய் பராபரமே (௰௬)

உன்பதத்தைக் காணாமல் உள்ளுருகி வாடுகின்றேன்
கன்மனத்தைப் போக்கியெனைக் காத்தாள் பராபரமே (௰௭)

எத்தனைநாள் சொன்னாலும் என்னாலே யின்பமுண்டோ
அத்தனை நீ சேரி லருளாம் பராபரமே (௰௮)

சன்னபின்ன லான சரக்கான முக்குணத்தால்
வன்மைபெரு மாயை வளரும் பராபரமே (௰௯)

எந்தன்மனந் தேறுதில்லை யென்சொலினு மாறுதில்லை
வந்த வியல்பை மறந்தேன் பராபரமே (௨௰)

தன்னரசு நாடாகத் தாவிமன மலைந்து
உன்னருளிற் சேர வொட்டாதோடும் பராபரமே (௨௧)

நீச்சுநிலை யில்லாத நித்திய பரானந்தமதை
ஆசூசியாய் நானு மடைவேனோ பராபரமே (௨௨)

வெட்டவெளி வீட்டில் வித்தகனே வைக்கிலெனை
கட்டமொன்றுஞ் சேராக் கதியாம பராபரமே (௨௩)

பொய்யென் றறிந்தாலும் போய்ப்பின் முளைப்பதென்றோ
மெய்யருளைக் காணு விபரம் பராபரமே (௨௪)

சுட்டற்று நீயிருந்தாற் றுன்பமுண்டோ யெந்தனக்கு
மட்டற்ற வான்கருணை வழங்கும் பராபரமே (௨௫)

அன்புமயமா யிருந்தால் அகலவே நிற்கும்வினை
பின்புதடை யொன்றுமில்லைப் பேராம் பராபரமே (௨௬)

துள்ளிக் குதித்தோடிச் சோர்வதென்றோ வெம்பெருமான்
கொள்ளிமனந் தேர்ந்தறியக் கூற்றம் பராபரமே (௨௭)

உலகாசை மேலிடலா லுனையறியக் கூடாதே
கலக மனதைக் கடிந்தாள பராபரமே (௨௮)

கற்பகமே கண்மணே கருத்தே யுனைக்காண
உற்பனமாய்ப் பார்க்கிலரு ளொன்றும் பராபரமே (௨௯)

வாசனைபோய் மாண்ட மவுனதபோ தனர்க்கு
பூசனையா ஞானம் பொருந்தும் பராபரமே (௩௰)

பொய்யைப் பொய்யென் றறிந்தாற் பொருந்தாது கன்மவினை
மெய்யை மெய்யென் றறியும் விபரம் பராபரமே (௩௧)

புழுக்கூட்டை நம்பாருன் பொன்னடியில் வீற்றிருப்பார்
அழுக்கற்றார் தாமடைவார் அருளாம் பராபரமே (௩௨)

இழுக்கி லிழுக்காகு மிதயந் தெளியாதோர்
வழுக்கு மரமாகுமவர் வண்மை பராபரமே (௩௩)

பத்தர் சித்தர் தன்மனதிற் பதியும் பரம்பொருளே
பித்தரினும் பித்தனெங்கள் பெறுவேன் பராபரமே (௩௪)

ஆரறிவா ருன்னையல்லா லடியேன் படுந்துயரம்
பேரறிவை நீதந்தால் பிழைப்பேன் பராபரமே (௩௫)

சொல்லித் தொலையாத துன்பச் சுமையெடுத்தேன்
மெல்ல மெல்ல வீடுறுதல் வேண்டும் பராபரமே (௩௬)

புவிச்சுமையாய் நானிருந்தேன் பொன்னடிகாணா தயர்ந்தேன்
செவியிலருண் ஞானமுறச் செய்வாய் பராபரமே (௩௭)

நிற்கும் நிலையிலெனை நிறுத்திவைத்தா லெம்பெருமான்
கற்கு நெறியுமது கண்டாய் பராபரமே (௩௮)

ஆரா வுணர்வே யென்னருட் கடலே மனனுமினைய
வாரா வரவே வான்வெளியே பராபரமே (௩௯)

சேராய்க் கசிந்துள்ளம் சிந்தனைசெய் அன்பர்களுன்
வாரா அருள்நிலையில் வாழ்வார் பராபரமே (௪௰)

ஜெகவாழ்வு பொய்யென்று தேர்ந்த தபோதனர்க்கு
உகமு மழியாதருளோங்கும் பராபரமே (௪௧)

ஏக்க மிறமாப்புற்று லெய்துந் தவநிலைதான்
தேக்கந் தவிர்ந்தவரே யருள்சேர்வார் பராபரமே (௪௨)

மக்கள்பெண்டி ராசை மாழ்நரகுக் கோர்வித்தையாம்
க்களிப்பாற் கெட்டலைந்தேன் எந்தாய் பராபரமே (௪௩)

(பராபரக் கண்ணி முற்றிற்று)

# ஆனந்தக் களிப்பு.

உன்னை மறந்து நினைந்தேன் - இன்னும்
ஏனை யறுகினும் மன்பவந்தீரா
தனையறியுந் தலத்தை - யிதென்று
தானவனுந்த தனித்து நின்றேயே (சங்கர-சங்கர) (௧)

எல்லாமு நீயாகி நின்றாயே - நானங்கே
யிருந்தே னேகமாயப் பார்க்கில
வல்லானுன் றன்னை மறந்தே - னானே
மற்றுநீ நான் வேறாகி நின்றேனே (சங்கர-சங்கர) (௨)

மறந்து நினைத்தே னிப்பாவி ஆநந்த
வைருசமனதால் வளர்ந்தது ஜெனனம்

மறப்பு நினைப்பையும் போக்கி-அந்த
மாசற்றஜோதி மயமாககிக் கொள்ளே (சங்கர-சங்கர) (௩)

அன்னையு மப்பனு மாவாய்-என்
ஆனந்தச்சோதி யகண்டவடிவே
பின்னை யெனக்கொன்றும் வேண்டேன்-உன்
பேரருட் செல்வத்துட் பெருக்க அணைத்தாள் (சங்கர) (௪)

பிறந்தா லிறப்புமுண் டையோ-நான்
பிறவாம லிறவாமற் பேரருளுய்ய
அறந்தா னளிப்பது மென்றோ-என்னை
வாவென் றழைப்பதுக் கோர்மொழி யுண்டோ (சங்கர) (௫)

சொற்பனக் காக்ஷியாந் தூலம்-இது
எத்தனை நாள்வாழ்ந் திறக்குமித்தேகம்
கற்பகால வரையாகப பாரில் காணுமோ
மூடி முழிக்குமுன் னோடும் (சங்கர) (௬)

இருவினை யாலேயெடுத்துப்-பின்பு
இமைக்குமுன் னோடி யிரந்திடும் திரேகம்
கருவழி வாராமல் நாடு-இந்தக்
காயத்தை வைத்துக் கடைத்தேறப் பாரு (சங்கர) (௭)

பார்த்தானுங் கேட்டானும் போனான்-அந்தப்
பரிசாரப பயல்களு பதிவிட்டுப் போனான்
சேர்ந்த இருவினை போச்சு-அந்தத்
தேசுப் பெருவெளி மனவெளி யாச்சு (சங்கர) (௮)

உண்டானு முகந்தானும் போனான்-அந்த
உள்ளூறும நாலவரும ஊமையாய்ப் போனார்
அண்டு மனஞ்சொல்லுங் கேட்டால்-சுத்த
ஆனந்தச் சுயஞ்சோதி யாவாய்நீ நெஞ்சே (சங்கர) (௯)

கற்றறி வில்லா மனது-அந்தக்
காடெல்லாந் தீப்பட்டாற் காணலாஞ் சோதி

செத்து வருமோர் சரீரம்-இது
தீவினைக் கூடல்லோ பேயா மனமே (சங்கர) (௰)

எட்டியாகு மனம் போச்சு-அதில்
இருந்த பூக் காய்பழம் எல்லாம வீழ்ந்தாச்சு
வெட்டவெளி யாச்சு வீடு-அதில்
வேதாந்தச் சோதி விளங்கிறது தாமே (சங்கர) (௰௧)

செற்றா கருவி கரணம்-அந்தத்
தீயமனம பாவி செயலற்ற அனறே
உற்றருமை பெறறோரு மாண்டார்-அவர்
உறமுறையார் சுற்ற மொன்றாகச் சோநதார் (சங்கர) (௰௨)

ஆதி மனம்போச்சு தன்றே-அந்தக்
கரணமு மைவரு மாண்டார்
சோதி சுகமய மாச்சு-அந்தச்
சுத்த வெளியில் மனதை யடைப்பாய் (சங்கர) (௰௩)

என்னை யறிந்த விடத்தே-நான்
ஏக வைக்கியமாகக் கலந்தேன்
பின்னையுந் தன்னையுங் காணேன்-பின்
பேச்சற்றேன் மூச்சற்றேன் பிறக்கினை யற்றேன் (சங்கர) (௰௪)

ஆங்கார மாயை மடக்கி-அப்பால்
அறிவினைக் கொண்டு அறிவைத் தொடுத்து
தேங்காமற் தேங்கித் தெவிட்டா வின்பந்
திளைக்கத் திளைக்க நான் சேர்ந்திடல் வேண்டும் (சங்கர) (௰௫)

பின்னைப் பலனை யறியா-நெஞ்சே
பேர்வகையாவரு மிபபோதே மடிந்தார்
தன்னையும் பின்னையுங் காணேன்-தான்
சாக்ஷியாய் நின்று தானுக்கிக் கொண்டான் (சங்கர) (௰௬)

எட்டொரு பீத்தலோர் வீடு-அதில்
ஏங்கா திருப்பவர் தொண்ணூற் றறுவர்
மட்டுப் படுத்தி மனதை-உயர்
மஹாயோகம் சாதிக்கில் வந்திடுமே வீடு (சங்கர) (கஎ)

சித்தனை நினைக்க வொட்டார்கள்-அந்தத்
தீய மனப்பாவி சேனை தளங்கள்
அத்தனை பேரிருந்தாலும்—அதில்
ஆசையுங் கோபமும் போகவே வேண்டும் (சங்கர) (கஅ)

உன்னை யடையா திருந்தும்-நான்
உண்டு உறங்கி யுலாவு கின்றேனே
தன்னை யறியா திருந்த-இந்தச்
சடலத்தை வன்கழு வேற்றினுந் தீரா (சங்கர) (கசு)

ஐயனடியை மறந்தேன்-இதற்கையகோ
நானேது செய்குவன் தோழி
ஐயன் பன்னிரண்டு கையன்-அவன்
அருள்வெளி காணு தலைந்து திரிந்தேன் (சங்கர) (உய)

வந்திடு வானையோ ஏமன்—என்னை
வாவென் றெறிப்பானே ஏதென் றுரைப்பேன்
சந்தித்து நின்று உன்றன்னைப-பின்பு
தானே யறிந்து தானுகியே நில்லே (சங்கர) (உக)

உன்னுமை யுன்னி யுன்றன்னை-அந்த
ஓர் மந்திரத்தா லென்னுள்ளே யடக்கி
வென்றிட வேணு மவனை ஐயா
வேறோரு உபாயத்தால் வெல்ல முடியா (சங்கர) (உஉ)

மறப்பு நினைப்பு முண்டாச்சு-அந்த
வஞ்ச மனத்தால் வளர்ந்தது ஜென்மம்
மறப்பு நினைப்பையும் போக்கி-அருள்
மயமான ஜோதி அதீதம தாகும (சங்கர) (உ௩)

வந்த வரவைத் தெரிந்தும்-இந்த
மனப்பாவி என்வசம் வாராத காலே
சிந்தை கலங்கித் திரிந்தேன-என்னைத்
தெரியும் படிக்கின்பத் திருவடி கூட்டே (சங்கர) (உ௪)

பின்னைப் பிறிதொன்றும் வேண்டேன் உனைப்
பெற்ற பொழுதே நான் பேரரு ளுற்றேன்
அன்னையு மப்பனு மாவாய்-அந்த
அருணை கிரியார்க் கருள்புரி தேவா (சங்கர) (உ௫)

தன்னை யறியா திருந்தும்-நான
தத்தித் தலைகீழாய்த் தானடைந்தேனே
என்னையுங் காததெனை யாள்வாய் என்
இன்பக் குருபர யேகாந்தப் பொருளே (சங்கர) (உ௬)

ஏதேது செய்வானோ எமன்-நா
னென்னை யறியாதிருந்த விடத்தில்
சூது மனைத் துறந்து-உயர்
சுகவாழ்வி லென்றுஞ் சுகித்திடல் வேண்டும் (சங்கர) (உ௭)

துன்றும் பவச்சுமை தாங்கி-கருச்
சூழலி லாழ்ந்த துரும்பனை யேனை
மின்னே ரிடைக்கொடி பாகா-வெற்றி
வேலனை யீன்ற விழுப்பொருள் மேலோய் (சங்கர) (உ௮)

பின்னை யெனக்கொன்றுய வேண்டேன்-நான்
பேசா மௌனத்தைப் பெற்றிடல் வேண்டும்
என்னை யெனக்கறி விப்பாய்-நான்
ஏகவெளியினி லிரண்டறத் தோய்வேன் (சங்கர) (௨௬)

நத்தை நரம்புஞ் சுமந்தே-உள்ள
நாளெல்லாம் வீணாக நான் கழித்தேனே
செத்த சவம்போ லிருந்து நான்
சேராமற் சேருந் தெளிவை யறியா (சங்கர) (௩௰)

எலும்பு தோல் நரம்பு இறைச்சி-இதை
எத்தனை காலமெடுத்துச் சுமந்தேன்
வலுமைசெய் திடுமிந்த மாயை-அந்த
மயக்கத்தால் வந்த வகைபெருங் கேடு (சங்கர) (௩௧)

இத்தனை காலமுந் தன்னை-எண்ணாமற்
செய்த அறிவை நினைக்கில்
எத்தனை செய்தாலும் போதா-என்னை
யேங்கச் சழுவினி லேற்றினுந் தீரா (சங்கர) (௩௨)

ஓட்டையும் பீத்தலிவ்வீடு-இதை
உண்டென்று நம்பினல் உற்றிடுங் கேடு
சாட்டையிற் பம்பர சாலம்-இந்தச்
சடலத்தை விட்டுச் சதானந்தஞ் சேரு (சங்கர) (௩௩)

சாடும் படியெதிர் ஏமன்-என்னைத்
தண்டா யுதத்தாலே தண்டிக்கு முன்னே
நாடுஞ் சிவன்கழல் தேடும்-உயர்
நற்றணிகை வளர்நன் குகன் பாதம் (சங்கர) (௩௪)

அறிவுக் கறிவை மறந்த-அந்த
ஆசைமனதை யறுத்திடல் வேண்டும்
பிரிவி யறிந்த மனதை-அதைப்
பின்னெதிர் நேறா திருப்பிடல் வேண்டும் (சங்கர) (௫௫)

தெளிவு வரும்படி செய்யும்-அதிற்
சேர்ந்து கலந்து சுகித்திருப்பாய் நீ
பரி பூரணனந்த சோதி-அதே
பார்த்த விடமெல்லாம் பரமாகத் தோணும் (சங்கர) (௫௬)

ஆர்க்குந் தெரியாதோர் ஞாயம்-நான்
அல்லும் பகலும் அற்றிடத் தற்றால்
பார்க்கும் பொழுது வெறும்பாழ்-இதைப்
பார்த்தானைப் பார்த்து பதிநீ மனமே (சங்கர) (௫௭)

எங்கே யிருக்கினும் நீதான்-அங்கே
யிரண்டற நின்றிடல் ஞாயமதாகும்
அங்கே பெருவெளியாகும்-அந்த வெளிதா
னதீதம தாகும் (சங்கர) (௫௮)

ஆனந்தக் களிப்பு முற்றிற்று.

79920
மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY MADRAS-1
சென்னை-1
SIVAGNANA MUNIVAR LIBRARY
சிவஞானமுனிவர் நூல்நிலையம் திருநெல்வேலி
TIRUNELVELI.

ஸ்ரீ விஜய லக்ஷ்மி விலாஸம் பிரஸ், பாளையங்கோட்டை.